32°c
கூடிய வெப்பநிலை 41 c
குறைந்த வெப்பநிலை 25 c
தெளிவான, வரண்ட காலநிலை காணப்படும்.


# உதயன்

04 APR 2014

UTHAYAN - A Lively National Tamil Daily

விலை: யாழ்.– 20/= வன்னி – 20/= கொழும்பு – 30/=

சுடர்: 29 ■ கதிர்: 129 ■ வள்ளுவர் ஆண்டு: 2045 | பங்குனி 21, வெள்ளி 04.04.2014



... TECHNOLOGIES (PVT) LTD.
புத்தாண்டு அதிரடி விலைக் கழிவு
hp SAMSUNG DELL LapTopகள்
1 year parts Warranty, 2 years service free
HP Pavilion 15 (i3, i5) Dell 3521 (i3)
HP 450, 4540 Pro Book Dell 5521 (i3, i5)
Samsung Dual Core
Free
HSPA Dongle (E-173), 4Gb Pen drive, 1 Year Antivirus Licence, Laptop Bag, Cooler Pad, Mouse, Headphone.
021 222 1121
021 224 2222
No. 195/4, Parameswara Junction, Palaly Road.
Branch: No.116G, K.K.S. Road, Chunnakam.


# படிப்படியாக காணிகளை இராணுவம் விடுவிக்கும்

## கேப்பாபிலவில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஏப்ரல் 4
இராணுவத் தேவைகளுக்காகத் தற்காலிகமாகக் கையகப்படுத்தப்பட்ட காணிகள் தற்போது படிப்படியாக உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுவருகின்றன. அதன் ஒரு கட்டமாக இன்று ஒரு தொகுதி காணிகள் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. ஏனைய காணிகள் படிப்படியாக அதன் உரிமையாளர்களிடம் கையளிக்கப்படும் - என்று தெரிவித்துள்ளார் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ.

முல்லைத்தீவு கேப்பாபிலவு பகுதியில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்த 100 ஏக்கர் விவசாயக் காணிகளை அதன் உரிமையாளர்களிடம் கையளிக்கும் நிகழ்வும், மீளக் குடியமர்த்தப்பட்டுள்ள கேப்பாபிலவு மக்களுக்கென நிர்மாணிக்கப்பட்ட 101 வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வும் நேற்று நடைபெற்றது. அந்த நிகழ்வுக்குத் தலைமை தாங்கி உரையாற்றும் போதே பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,
இந்தப் பகுதியில் பாரம்பரியமாக வாழ்ந்தவர்களுக்கு காணிகளைப் பெற்றுத் தருவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். போரின் பின்னர் ஜனாதிபதியின் அபிலாஷை யும், எதிர்பார்ப்பும் இடம்பெயர்ந்துள்ள மக்களை அவர்களின் சொந்த இடங்களில் குடியேற்றுவது என்பதுதான். 97 சதவீத மக்கள் சொந்தக் காணிகளில் வீடமைத்து வாழக்

21ஆம் பக்கம் பார்க்க

## தனியார் ஊழியருக்கு ஏப்ரல் 15 விடுமுறை

கொழும்பு, ஏப். 4
அனைத்து தனியார் துறை ஊழியர்களுக்கும் எதிர்வரும் 15 ஆம் திகதி விடுமுறை வழங்குமாறு தனியார் நிறுவனங்களைக் கேட்டுக் கொண்டுள்ளது தொழில் அமைச்சு.
ஏப்ரல் 15ஆம் திகதியை பொது மற்றும் வங்கி விடுமுறை நாளாக அரச நிர்வாக மற்றும் உள்நாட்டுஅலுவல்கள்அமைச்சு பிரகடனம் செய்துள்ள நிலையிலேயே தொழில் அமைச்சு இவ்வாறு கேட்டுக் கொண்டுள்ளது. (ற)

## பா.ஜ.கவுக்கு எதிராக மாணவர்கள் கொந்தளிப்பு

சென்னை, ஏப். 4
தமிழர்கள் பிரச்சினை தொடர்பாக, பா.ஜ.க. வின் நிலைப்பாடு என்ன என்பதை தெளிவுபடுத்த வேண்டும் என்று தமிழக மாணவர் அமைப்புகள் விடுத்திருந்த காலக்கெடு முடிந்துள்ள நிலையில், பா.ஜ.கவுக்கு எதிராகத் தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாக மாணவர்கள் அறிவித்துள்ளனர்.
இரட்டைவேடம் போடும் பா.ஜ.கவினரை தமிழகத்தில் இருந்து விரட்டியடிப்போம் என்றும் அவர்கள் சூளுரைத்துள்ளனர்.

விரிவான தகவல்கள் 2ஆம் பக்கத்தில்

## தென்பகுதி வர்த்தகர்களால் நெருக்கடி; யாழ். வர்த்தகர்கள் எதிர்ப்பு போராட்டம்




யாழ்ப்பாணம், ஏப். 4
தென்னிலங்கை வர்த்தகர்களால் யாழ்ப்பாண வர்த்தகர்களுக்கு ஏற்படும் நெருக்கீடுகளைக் கண்டித்து யாழ்ப்பாண வர்த்தகர்கள் நேற்று சுமார் 2 மணி நேர உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டதுடன், இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வைப் பெற்றுத் தருமாறும் வடமாகாண முதலமைச்சரிடம் கோரிக்கை ஒன்றையும் விடுத்தனர். தமிழர்

21ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் தோன்றுகிறது அசாதாரண சூழ்நிலை

### வீடு வீடாகச் சோதனையிடும் இராணுவம் பதிவு செய்வதிலும் தீவிரம்

கொழும்பு, ஏப். 4
யாழ். மாவட்டத்தில் தற்போது இராணுவத்தினர் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளால் அசாதாரண நிலை ஒன்று தோன்றியுள்ளது. வீடு வீடாகச் சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இராணுவத்தினர், பதிவு செய்யும் நடவடிக்கையையும் மீளவும் ஆரம்பித்துள்ளனர். சங்கானை, சித்தன்கேணி, வட்டுக்கோட்டை ஆகிய பகுதிகளில் நேற்று இந்த நடவடிக்கைகள் இராணுவத்தினரால் தீவிரப்படுத்தப்பட்டிருந்தன.
கிளிநொச்சி தருமபுரத்தில் கடந்த மாதம் 13 ஆம் திகதி

21ஆம் பக்கம் பார்க்க

## உணவு விநியோகத்தின் போது மருத்துவமனைகளில் மோசடி

### விசாரணை நடத்துமாறு கோரி வடமாகாண சபையில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஏப். 4
வடக்கு மாகாணத்தில் உள்ள மருத்துவ மனைகளில் உணவு வழங்குவதில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடி தொடர்பில் வெளிப்படையான - முழுமையான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று கோரும் தீர்மானம் வடக்கு மாகாண சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெறவுள்ள வடமாகாண சபை அமர்வின் போது விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளும் வகையிலேயே இந்தத் தீர்மானம் வடக்கு மாகாண பேரவைச் செயலகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
குறித்த தீர்மானத்தில்,
வடக்கு மாகாணத்தில் உள்ள மருத்துவமனைகளில் உணவு வழங்குவதற்கான கேள்வி கோரலின்போது மோசடி இடம்பெற்றுள்ளது என்று கூறப்படுகின்றது.
அது தொடர்பில் உரிய தரப்புக்களுக்குச் சுட்டிக்காட்டிய போதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. தொடர்ந்தும் பல கோடி ரூபா மோசடி

21ஆம் பக்கம் பார்க்க

## வாளை பறிகொடுத்து விட்டு நகைகளுடன் தப்பியோட்டம்

### கொள்ளையர்களுடன் போராடியதில் வீட்டு உரிமையாளர் காயம்

யாழ்ப்பாணம், ஏப். 4
வாள்களுடன் வீடு புகுந்த கொள்ளையர்கள் வீட்டிலிருந்தவர்களை மிரட்டி நகைகளைக் கொள்ளையடித்த போது, வீட்டுக்காரர் வாளைப் பறித்தெடுத்ததால் கையில் கிடைத்த நகைகளோடு தப்பியோடினர். இந்தச் சம்பவம் இணுவில் பாலாவோடையில் நேற்று முன்தினம் நடந்துள்ளது.
முல்லைத்தீவில் உள்ளூராட்சித் திணைக்கள முகாமைத்துவ உதவியாளராகப் பணியாற்றும் மோகனராஜகுமார் என்பவரது வீட்டிலேயே இந்தக் கொள்ளைச் சம்பவம் நடந்துள்ளது. இரவு 9.50 மணியளவில் குறித்த வீட்டின் வளர்ப்பு நாய் இடைவிடாது குரைத்துள்ளது.
அதனால் சந்தேகமடைந்த

21ஆம் பக்கம் பார்க்க

## சாதாரண தரப் பரீட்சை முடிவுகள் வெளியாகின

### வேம்படி மகளிர் முன்னிலை

யாழ்ப்பாணம், ஏப். 4
கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையின் முடிவுகள் நேற்று வெளியாகின.
இதுவரை கிடைக்கப் பெற்ற முடிவுகளின்படி யாழ்.வேம் படி மகளிர் கல்லூரி இருபத்தெட்டு '9ஏ' சித்திகளுடன் முன்னிலை வகிக்கின்றது.

இதுவரை கிடைக்கப் பெற்ற முடிவுகள் 20 ஆம் பக்கத்தில்




## போர்க்காலப் பயிற்சிகள் மீண்டும் ஆரம்பம்



கொழும்பு, ஏப். 4
திருகோணமலைக் கடற்பரப்பில் கடற்படையினரின் ஈரூடகப் போர்க் காலப் பயிற்சிகள் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியுள்ளது.
இந்தப் பயிற்சிகள் மூன்று நாள்கள் நடைபெறும் என்று கூறப்படுகின்றது. துறைமுகம் மற்றும் கடல் என இரண்டு கட்டங்களாக நடைபெறும் இந்தப் பயிற்சிகள் கிழக்குக் கடற்படைத் தளபதியின் தலைமையின் கீழ் நடைபெறுகின்றன.

21ஆம் பக்கம் பார்க்க

## ஆஸி. செல்ல முயன்றோரை மடக்கிப் பிடித்தது இந்தியா

### மீண்டும் இலங்கைக்கே திருப்பியனுப்பப்பட்டனர்

கொழும்பு, ஏப். 4
படகு மூலம் ஆஸ்திரேலியா செல்ல முயன்ற 26 இலங்கையர்கள் இந்தியக் கடலோரக் காவற் படையினரால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளனர்.
அவர்கள் விசாரணைகளின் பின்னர் நேற்று மீண்டும் இலங்கைக்கே திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.
இந்தியக் கடலோரக் காவற்

21ஆம் பக்கம் பார்க்க

# அனைத்துலக விசாரணைக்கு இலங்கை அரசு இடமளிக்காது

## மகிந்த சமரசிங்க திட்டவட்டமாகத் தெரிவிப்பு



கொழும்பு, ஏப்.4

இலங்கைக்கு எதிராக அனைத்துலக விசாரணையை ஐ.நா மனிதஉரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை முன்னெடுப்பதற்கு அரசு ஒரு போதும் இடமளிக்காது என்று தெரிவித்துள்ளார் ஜனாதிபதியின் மனிதஉரிமை விவகாரங்களுக்கான சிறப்புப் பிரதிநிதி அமைச்சர் மகிந்த சமரசிங்க.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அனைத்துலக விசாரணைகளை நாம் ஏற்றுக்கொள்ளத் தயாரில்லாத நிலையில் மனித உரிமைகள் ஆணையாளரினால் விசாரணைகளை பலவந்தமாக எம்மீது திணிக்க முடியாது. அமெரிக்கா உள்ளிட்ட சில மேற்கு நாடுகளால் தீர்மானம் கொண்டு வரப்படுவதற்கு முன்னர் அரசு எந்த நிலைப்பாட்டில் இருந்ததோ அதே நிலைப்பாட்டிலேயே தொடர்ந்தும் இருக்கிறது.

அனைத்துலக விசாரணையில் எமக்கு துளியளவும் நம்பிக்கை இல்லை. உள்ளக விசாரணைகளை நாம் தீவிரப்படுத்தியுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் இதன் மூலமாக நியாயத்தை நிலைநிறுத்த முடிவுமென நாம் உறுதியாக நம்புகின்றோம். நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் அரசு பலகோணங்களிலும் உள்ளக விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

அந்த வகையில், சனல் 4 காணொலி தொடர்பான இராணுவ விசாரணை, காணாமற்போனவர்களைக் கண்டறிவதற்கான ஆணைக்குழு, திருகோணமலையில் ஐந்து மாணவர்களின் கொலைதொடர்பான சிறப்பு விசாரணை என்று உள்ளக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.


உள்ளக விசாரணைகள் நியாயமாகவும் நேர்மையாகவும் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் இலங்கைக்கு அனைத்துலக விசாரணை அவசியப்படாது. அனைத்துலக விசாரணை என்ற பெயரில் எமது செயற்பாடுகளுக்குள் மூக்கை நுழைத்து நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்துவதே மேற்குலக நாடுகளின் விருப்பம். அதனை நாம் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதுடன் பொறுப்பேற்கப்போவதுமில்லை.

நவநீதம்பிள்ளை இலங்கை வருவதற்கு அரசு ஏற்கனவே அனுமதி வழங்கியிருந்த போதிலும், அவர் இங்கு வந்து சிறிலங்கா குறித்த தவறான கருத்துகள் அடங்கிய அறிக்கையையே அனைத்துலக சமூகத்திற்கும் மனிதஉரிமைகள் சபைக்கும் முன்வைத்திருந்தார். இந்தநிலையில், எதற்காக அவர் மீண்டும் சிறிலங்கா வர அனுமதிக்க வேண்டும்?

உள்ளக விசாரணைகளை நீதி அடிப்படையில் நேர்மையாக முன்னெடுப்பதன் மூலம் நல்லிணக்கச் செயற்பாடுகளை முன்னரிலும் அதிக சக்தி மிக்கதாக உருவாக்க அரசாங்கம் உறுதி பூண்டுள்ளது" - என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

# பா.ஜ.கவுக்கு எதிராக மாணவர் போராட்டம்

## தமிழர் பிரச்சினை குறித்த நிலைப்பாட்டைக் கூறாததால்



மாணவர் அமைப்புகளால் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பின்போது

சென்னை, ஏப்.4

தமிழர் பிரச்சினை தொடர்பில் தமது தீர்மானத்தைத் தெரிவிக்க தமிழக மாணவர் அமைப்புக்களால் விதிக்கப்பட்ட 48 மணி நேரக் காலக்கெடு முடிந்துள்ள நிலையில் இதுவரை பாரதிய ஜனதாக் கட்சியின் பிரதம வேட்பாளர் எந்தவொரு முடிவையும்தெரிவிக்கவில்லை.

அதையடுத்து பா.ஜ .கவுக்கு எதிராக தமிழகம் முழுவதும் மாணவர் அமைப்புக்களினால் பிரசாரம் முன்னெடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தமிழ் இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் கூட்டமைப்பு, மாணவர் முற்போக்கு முன்னணி என்பன சென்னையில் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றை நேற்று நடத்தின. அதன்போது கூறப்பட்டதாவது,

"ஒன்று பட்ட இலங்கையை ஆதரிக்கிறோம் என்று தங்கள் அறிக்கையில், தெரிவித்த பா.ஜ.க.வை கண்டிக்கின்றோம்.

ஈழப் பிரச்சினையில் பா.ஜ.கவின் கொள்கையை மாற்றித் தனி ஈழதிற்கு ஆதரவு என்று அறிவிக்க வேண்டும். அடுத்த ஆண்டு ஐ.நா கூட்டத் தொடரின் போது, பா.ஜ.க ஆட்சியில் இருந்தால் இலங்கைக்கு எதிரான இனப்படுகொலைத் தீர்மானத்தை இந்தியா முன்மொழிய வேண்டும்.

பா.ஜ.க ஆட்சிக்கு வந்தால் தமிழக மீனவர்கள் தாக்கப்பட மாட்டார்கள் என்ற உத்தரவாதத்தையும் கச்சதீவை மீட்டுத்தருவதற்கான உத்தரவாதத்தையும் வழங்க வேண்டும்.

தமிழகத்தின் உயிர்க் கொள்கையான மொழிக் கொள்கையிலும், சம நீதிக் கொள்கையான இட ஒதுக்கீட்டுக்கொள்கையிலும் பா.ஜ.க நிலைப்பாட்டினை அறிவிக்க வேண்டும்.

இந்திய அரசு வெளியுறவுக்கொள்கையை வகுக்கும் பொழுது தமிழகத்தையும் மற்ற மாநிலங்களையும் கலந்து ஆலோசனை செய்து முடிவெடுக்க வேண்டும். இஸ்லாமிய மற்றும் மற்ற மத சிறுபான்மை மக்களின் பாது காப்பிற்கு உத்தரவாதம் வழங்க வேண்டும். போன்ற எட்டுக் கொள்கைகள் அடங்கிய மனுவை நேற்று முன்தினம் பா.ஜ.க தலைவர்களிடம் கையளித்திருந்தோம். இது தொடர்பில் 48 மணி நேரத்தில் பா.ஜ.க பிரதம வேட்டபாளர் நரேந்திர மோடிதனது முடிவை அறிவிக்க வேண்டும் என்று கோரியிருந்தோம்.

48 மணி நேரம் முடிவடைந்துள்ள நிலையில் அவர்கள் எந்தவொரு முடிவையும் அறிவிக்கவில்லை. அதனால் நாம் முன்னர் குறிப்பிட்டவாறு பா.ஜ.கவுக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம். தமிழர்க ளுக்கு எதிரான போக்கைக் கொண்டுள்ள பா.ஜ.கவை தமிழகத்திலிருந்து விரட்டியடிப்போம்"- என்று தெரிவிக்கப்பட்டது. (ற-5)

## கமலுக்கு விளக்கமறில் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 4

நெடுந்தீவுப் பிரதேச சபைத் தலைவர் தானியல் றெக்ஷயனது கொலை தொடர்பான வழக்கில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள வடமாகாண எதிர்க்கட்சித் தலைவரும் ஈ.பி.டி.பியின் முன்னாள் உறுப்பினருமான கந்தசாமி கமலேந்திரன் உள்ளிட்ட மூவருக்கும் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் இந்த வழக்கு நேற்றுஎடுத்துக்கொள்ளப்பட்டது. கந்தசாமி கமலேந்திரன், லண்டன் யசிந்தன் மற்றும் றெக்ஷயனின் மனைவியான அனித்தா ஆகியோருக்கே இவ்வாறு விளக்கமறியல் நீடிக்கப்பட்டது.

அத்துடன் கமல் மாகாண சபை உறுப்பினர் என்பதனை உறுதிப்படுத்தி அது தொடர்பில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்தால் மாகாண சபை அமர்வுக்குச் செல்லமுடியும் என்றும் நீதிமன்று கமலுக் குத் தெளிவுறுத்தியது. (ற-4)

## வதிரன்புலோ சித்தி விநாயகர் கொடியேற்றம் இன்று

யாழ்ப்பாணம், ஏப்.4

மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் தேவஸ்தானத்தின் வருடாந்த மகோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 8ம் திகதி மாலை 8 மணிக்கு சப்பறமும் 9ம் திகதி புதன் கிழமை மாலை 8 மணிக்கு மஞ்சமும் இடம் பெற்று 14ம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும் நடைபெறவுள்ளது. (ற-10)



முல்லைத்தீவு கேப்பாபிலபு பகுதியில் மீளக்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கென மாதிரிக் கிராமம் அமைக்கப்பட்டு அங்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே இரு கட்டங்களாக 151 வீடுகள் அமைக்கப்பட்டு மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ள நிலையில், மூன்றாவது கட்டமாக 66 வீடுகள் அமைக்கப்படவுள்ளன. அவற்றுக்கான அடிக்கல்லை பாதுகாப்பு அமைச்சர் கோத்தபாய ராஜபக்ஷ நேற்று நட்டார். (ற-18)

# மனித உரிமை ஆர்வலருக்கு தொடர்ச்சியாக அச்சுறுத்தல்

யாழ்ப்பாணம், ஏப்.04

ஐக்கிய நாடுகள் சபையின் அமர்வில் பங்கெடுத்த மனித உரிமைச் செயற்பாட்டாளர் ஒருவருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளமை தொடர்பில், பொலிஸ்நிலையத்திலும் -மனித உரிமைகள் ஆணைக் குழுவிலும் முறைப்பாடு செய் யப்பட்டுள்ளது. புத்தளத்தைச் சேர்ந்த மனித உரிமைச் செயற்பாட்டாளரான சுஹறாத் பஸ்லீமுக்கே இவ்வாறான அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டு ஐ.நா மனித உரிமைகள் சபையில் சிறுபான்மைச் சமூகம் தொடர்பிலான கலந்துரையாடலுக்காகச் சென்றிருந்ததாகவும், அந்தஅமர்வுக்குச்செல்லும்போதே, எந்த விடயங்களும் தெரிவிக்கக் கூடாது என்று இனந்தெரியாதோர் மிரட்டினர் என்றும் சுஹறாத் முறைப்பாட்டில்குறிப்பிட்டுள்ளார்.

அதன் பின்னர் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்துடன் இணைந்து பணியாற்றியதாகவும், ஐ.நா அமர்வுகளுக்கு செல்லாது தவிர்த்து வந்ததாகவும் குறிப்பிடும் அவர் 2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதம், இடம்பெற்றசிறுபான்மைச் சமூகம் தொடர்பிலான அமர்வில் பங்கேற்றதாகவும் தெரிவித்தார்.

அந்த அமர்வில் பங்கேற்றமை, அதற்குமுன்னதாகயாழ்ப்பாணத்துக்கு ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர்நவநீதம்பிள்ளை வந்திருந்த போது அவரைச் சந்தித்தமைஆகியவிடயங்களை முன்னிறுத்தியே அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வருவதாக முறைப்பாட்டில்தெரிவித்துள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதி, புத்தளத்தில் வைத்து உயிர் அச்சுறுத்தல் விடுத்ததாகவும் அதனைத் தொடர்ந்தே, புத்தளம் பொலிஸ் நிலையத்திலும்,மனிதஉரிமைகள்ஆணைக் குழுவிலும்முறைப்பாடுசெய்துள்ளதாகவும் பஸ்லீம் தெரிவித்தார். (ற-5)

# பிரதேச செயலரைத் தாக்க முற்பட்ட இருவர் பொலிஸாரால் நேற்று கைது

## முல்லைத்தீவு நீராவிப்பிட்டியில் சம்பவம்

முள்ளியவளை,ஏப் 4

காணி விடயம் தொடர்பாக ஆராய்வதற்கென நீராவிப்பிட்டிக்கு சென்ற முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலர் சி.திரேஸ்குமாரை தாக்க முற்பட்ட இருவரை முள்ளியவளைப் பொலிஸார் கைதுசெய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது,

கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் காணி அற்றவர்களுக்கு காணிகளை வழங்குவதற்கான காணிக் கச்சேரி கடந்த திங்கட்கிழமை முதல் இடம்பெற்று வருகின்றது.

இதன்போது நீராவிப்பிட்டியில் நிலைமைகளைப் பார்வையிட நேற்று மாலை கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் அங்கு சென்றுள்ளார்.

இதன்போது அங்குவந்த குழுவினர் பிரதேச செயலருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அத்துடன் அவரையும் தாக்க முற்பட்டுள்ளார்.

இது தொடர்பாக முள்ளியவளைப் பொலிஸ் நிலையத்தில் பிரதேச செயலர் முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளனர்.

இதனை அடுத்து பிரதேச செயலரின் கடமையை நிறைவேற்ற விடாது இடையூறு செய்தார் என்ற குற்றச்சாட்டிலும், பிரதேச செயலரைத் தாக்க முற்பட்டனர் என்ற குற்றச்சாட்டிலும் அரசியல் கட்சியின் பிரமுகரான நஜாத் மற்றும் அவரது சகோதரர் ஆகிய இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தை அடுத்து பிரதேச செயலர் விடுமுறையில் வவுனியாவுக்குச் சென்றதாகவும், அவருக்கு முள்ளியவளைப் பொலிஸார் பாதுகாப்பு வழங்கியதாகவும் கூறப்படுகின்றது.

பிரதேச செயலரை அரசியல் செல்வாக்குமிக்கவர்கள் தாக்க முற்பட்ட சம்பவம் குறித்து தா[illegible] அதிர்ச்சியடைந்துள்ளதா[illegible] [illegible]வித்துள்ள கரைதுறைப்பற்று பிரதேச செயலக ஊழியர்கள் இன்று அடையாளப் பணிப் புறக்கணிப்பு ஒன்றை மேற்கொள்ளவுள்ள தாக தெரிவித்தனர். அத்துடன்தமது பாதுகாப்பை உறுதிப் படுத்த நட வடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-400,101,102)

# சுகாதாரப் பரிசோதகர்களுக்கு ஆதரவாக சாவகச்சேரியில் நேற்று பணிப்புறக்கணிப்பு



நகரசபை சுத்திகரிப்புத் தொழிலாளார் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தபோது...

தென்மராட்சி,ஏப்.4

உள்ளூராட்சி சபைகளின் சுகாதார சேவைகளுக்குப் பொறுப்பாக உள்ள பொது சுகாதார பரிசோதகர்களை மீண்டும் உள்ளூராட்சி சபை களில் நியமிக்கக்கோரி சாவ கச்சேரி நகர சபை சுத்திகரிப்பு தொழிலாளர்கள் நேற்று அடையாள பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

நேற்றுக் காலை எந்தவொரு சுத்திகரிப்புப் பணியிலும் ஈடுபடாமல் அவர்கள் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் நகர் பகுதிகள் குப்பைகள்நிறைந்துகாணப்பட்டன.

அனைத்துப் பிரதேச சபைகளுக்கும் பொது சுகாதார பரிசோதகர்களை நியமிக்குக, பொதுசுகாதார பரிசோதகர்களின் மக்கள் சேவைக்கு தடை ஏன்?, உள்ளூராட்சி மன்றங்களின் முதுகெலும் பான பொது சுகாதார சேவை யைக் குழப்பாதே! ஆகிய பதா கைகளுடன் காலை 8.30 மணிவரை அவர்கள் நகர சபை வளாகத்தில் அமர்ந்திருந்தனர்.

காலை 8.30 மணிக்குப் பின்னர் நகரசபை தலைவர் இ. தேவசகாயம்பிள்ளை உறுப்பினர்களுடன் வருகை தந்து பணிப்புறக்கணிப்பில் கலந்துகொண்டதுடன் பொது சுகாதார பரிசோதகர்களை உள்ளூராட்சி சபைகளுக்கு நியமிப்பதாக வடமாகாண சபை முதலமைச்சர் உறுதி மொழியளித்துள்ளதால் பணிப் புறக்கணிப்பை கைவிடுமாறு கோரிக்கை விடுத்தார்.

தலைவரின் உறுதி மொழியை அடுத்து தற்காலிகமாக போராட்டத்தைக் கைவிடுவதாகக்கூறி தொழிலாளர்கள் தமது நாளாந்தக் கடமைகளுக்குத் திரும்பினர். (வ-9)



பறிமுதல் செய்யப்பட்ட வலைகள்

## சுருக்கு வலை பயன்படுத்தி மீன்பிடித்தோருக்கு தண்டம்

### வலைகளும் தீயிட்டு அழிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.4

மன்னாரிலிருந்து எடுத்துவரப்பட்ட - தடைசெய்யப்பட்ட சுருக்கு வலையைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட இருவருக்கு 15 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதோடு சுருக்குவலையும் தீவைத்து அழிக்கப்பட்டது.

குருநகரைச் சேர்ந்த ஒருவரும், மன்னாரைச் சேர்ந்த மற்றொருவருமாக அந்த வலையைப் பயன்படுத்தி ஆயிரம் கிலோ கிராம் மீன்களைப் பிடித்துள்ளனர்.

அவற்றுடன் யாழ். பண்ணைக் கடலில் கரையேறியபோது கடற்படையினரிடம் அவுர்கள் அகப்பட்டுக்கொண்டனர். அது தொடர்பில் யாழ். கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத் துக்கு அறிவிக்கப்பட்டது. அங்கு சென்ற திணைக்களத்தினர் இருவருக்கும் எதிராக வழக்குத் தாக்கல் செய்தனர்.

அவர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து 15 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. தடைசெய்யப் பட்ட சுருக்கு வலையைத் தீவைத்து அழிக்க நீதிமன்று உத்தரவிட்டதையடுத்து • சுருக்கு வலை யாழ்.காக்கை தீவு வெளியில் வைத்து எரித்து அழிக்கப்பட்டது. (வ-4)

## வாழ்வின் எழுச்சி புத்தாண்டுச் சந்தை

யாழ்ப்பாணம், ஏப்.4

வாழ்வின் எழுச்சி புத்தாண்டுச் சந்தை எதிர்வரும் 8 ஆம் திகதி யாழ். மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலர் பிரிவுகளிலும் ஆரம்பமாகவுள்ளதாக சமுர்த்தி உதவி ஆணையாளர் க. மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு வருடமும் உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு வாய்ப்பளிக்கும் முகமாக, பிரதேச செயலர் ரீதியாக புது வருடத்தை முன்னிட்டு வாழ்வின் எழுச்சி புத்தாண்டுச் சந்தை இடம்பெற்று வருகின்றது.

**ஒவ்வொரு வருடமும் உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு வாய்ப்பளிக்கும் முகமாக, பிர தேச செயலர் ரீதியாக புது வருடத்தை முன்னிட்டு வாழ்வின் எழுச்சி புத்தாண்டுச் சந்தை இடம்பெற்று வருகின்றது.**

இந்த ஆண்டும் புத்தாண் டுச் சந்தை இருதினங்கள் இடம் பெறவுள்ளது.

நெடுந்தீவு பிரதேசத்துக்குரியது- பிரதேச செயலக மைதானத்தில் 8 ஆம், 9 ஆம் திகதிகளிலும், ஊர்காவற்றுறை பிரதேசத்துக்குரியது- ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ் கல்லூரி மைதானத்தில் 12 ஆம், 13 ஆம் திகதிகளிலும், வேலணை பிரதேசத்துக்குரியது - வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் 12 ஆம், 13 ஆம் திகதிகளிலும் -

காரைநகர் பிரதேசத்துக்குரியது - சுப்பிரமணியம் மகா வித்தியாலயத்தில் 9 ஆம், 10 ஆம் திகதிகளிலும், யாழ்ப்பாணப் பிரதேசத்துக்குரியது - வைத்தீஸ்வரா கல்லூரியில் 11 ஆம், 12 ஆம் திகதிகளிலும், நல்லூர் பிரதேசத்துக்குரியது, மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் 9 ஆம், 10 ஆம் திகதிகளிலும் -

கோப்பாய்பிரதேசத்துக்குரியது - கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் 11 ஆம், 12 ஆம் திகதிகளிலும், உடுவில் பிரதேசத்துக்குரியது- மான்ஸ் ஆரம்பப் பாடசாலையில் 11 ஆம், 12 ஆம் திகதிகளிலும், தெல்லிப் பழை பிரதேசத்துக் குரியது - மல்லாகம் மகா வித்தியாலயத்தில் 11 ஆம், 12 ஆம் திகதிகளிலும் -

சங்கானை பிரதேசத்துக்குரியது - வட்டு. இந்துக் கல்லூரியில் 9 ஆம், 10 ஆம் திகதிகளிலும், சண்டிலிப்பாய் பிரதேசத்துக்குரியது - பண்டத்தரிப்பு பெண்கள் பாடசாலையில் 9 ஆம், 10 ஆம் திகதிகளிலும், கரவெட்டி பிர தேசத்துக்குரியது, பொன்னம் பலம் மகா வித்தியால யத்தில் 10 ஆம், 11 ஆம் திகதிகளிலும் -

பருத்தித்துறை பிரதேசத்துக்குரியது- மருதடி முருகன் கோயிலில் 10 ஆம், 11 ஆம் திகதிகளிலும், சாவகச்சேரி பிரதேசத்துக்குரியது- கொடிகாமம் பஸ்தரிப்பு நிலையத்துக்கு அருகில் 10 ஆம், 11 ஆம் திகதிகளிலும், மருதங்கேணி பிரதேசத்துக்குரியது- தாளையடி ஆர்.சி.ரி.எம். பாடசாலையில் 10 ஆம், 11 ஆம் திகதிகளிலும் இடம்பெறும். (வ-5)

## வலி.வடக்கு சபை தீர்மானத்தை எதிர்த்து நேற்று ஆர்ப்பாட்டம்

வலி. வடக்கு, ஏப்.4

வலி. வடக்கு பிரதேச சபையால் கடந்த மூன்று தினங்களுக்கு முன்னர் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரிக்கு எதிராக ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் நேற்று தெல்லிப்பழை சுகாதார வைத்தியதிகாரி பணிமனையின் சுகாதாரத் தொண்டர்கள், அலுவலக ஊழியர்கள் மற்றும் சிரேஷ்ட பொது சுகாதார பரிசோதகரும் தாய்மார் சங்கத்தின் உறுப்பினர்கள் சிலரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சுகாதார வைத்திய அதிகாரியை இடமாற்றம் செய்யக் கோரி தீர்மானம் நிறை வேற்றப்பட்ட மையை கண் டித்து நேற்று முன்தினம் முற் பகல் 10.30 மணியளவில் தெல் லிப் பழை சுகாதார வைத்தியதிகாரி பணிமனை அமைந்துள்ள துர்க்கையம் மன் ஆலயத்துக்கு முன்புறமாகவுள்ள அலுவலக வாசலில் அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சுகாதாரத் தொண்டர்களுடன் பொதுமக்கள் சிலரும்...

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல்வேறு சுலோகங்களை உள்ளடக்கிய பதாகைகளைத் தாங்கி இருந்தார்கள், நல்ல உள்ளம் கொண்டவரை காயப்படுத்த வேண்டாம், எமது வைத்தியதிகாரியைக் குறை கூறாதே, சிறுவர்க ளுக்காக தனது சொந்தப் பணத்தைச் செலவு செய்த வர், ஏழைகளின் தோழர் மீது கைவையாதே போன்ற சுலோகங்களும் அவற்றில் காணப்பட்டன.

எமது பிரதேசத்தில் அர்ப்பணிப்புடன் சேவை யாற்றாத மக்களின் நலனை கருத்தில் கொள் ளாத சுகாதார வைத்திய அதிகாரியை எமது பிரதேசத்தில் இருந்து இடம்மாற்றி எமக்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்றக் கூடிய ஒரு தியாக சிந்தனையுடைய சுகாதார வைத்திய அதிகாரியை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் நியமிக்க வேண்டும்என்றும்வலி. வடக்குபிரதேச சபைஉறுப்பினர்வயன்சி.ஹரிகரனால் பிரேரணை கொண்டுவரப்பட்டுதீர்மானம்நிறைவேற்றப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

**தெல்லிப்பழையில் செயற்பாடு முடக்கம்**

இதேவேளை தெல்லிப்பழை சுகாதார வைத்தியதிகாரி பிரிவில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் காரணமாக நேற்று நுளம்பு ஒழிப்பு வார செயற்பாடுகள் முற்று முழுதாக முடங்கியிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-21-86)

## மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், ஏப்.4

மருதங்கேணி பிரதேச வைத்தியசாலையில் நாளை சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை இலவச மருத்துவ முகாம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட் டுள்ளது.

இந்த இலவச மருத்துவ முகாமில் பொது மருத்துவ சேவை, பல் மருத்துவ சேவை, நீரிழிவு நோய்க்கான பரிசோதனை, ஆய்வுகூட சேவை, கண்பரிசோதனை, இலவச மூக்குக் கண்ணாடி வழங்கல், பாடசாலை மாணவர்களுக்கு இலவச கொப்பிகள் வழங்கல் என்பன இடம்பெறவுள்ளன.

கொழும்பிலிருந்தும், பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையிலிருந்தும் வருகை தரும் மருத்துவக் குழுவினர் மருத்துவ முகாமில் சேவைகளை வழங்கவுள்ளனர். (ஒ-4)

**O/L போதும் A/L தேவையில்லை**
**வெளிநாடுகளில் படிக்க உழைக்க அரிய வாய்ப்பு**

- நியூசிலாந்தில் படித்து 2 வருடத்தில் PRபெற்றால் ஆஸ்திரேலியா பறக்கலாம்
- கனடாவில் படிக்க உழைக்க கையிலுள்ள காசே போதும்
- UK இல் படித்து பல பட்டங்கள் பெறலாம்

குறிப்பு:
O/L என்பது மிகவும் அடிப்படையான கல்வித்தகுதியாகும் இதன் மூலம் எந்த நாட்டிலும் எந்த ஒரு தொழில்வாய்ப்பையும் பெறமுடியாது.
எனவே எம் இளையோர் தொடர்ந்து எமது நாட்டிலேயே க.பொ.த உயர்தரம் வரை கற்றுத் தேறுவதே உசிதமானதாகும்
இவ்வடிக்குறிப்பு கௌரவ இயக்குநர் சபைக்கட்டளைப்படி இங்கே பிரசுரமாகின்றது

**திசைகாட்டி (பிறை) லிமிற்**
**முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்**
**175, பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.**
**021 2219016, 021 4993501**



# சமுர்த்தி நிவாரணக் கொடுப்பனவை புத்தாண்டுக்கு முன் பெற்றுக் கொள்க

### *யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஏப்.4

இந்த ஆண்டுக்குரிய சமுர்த்தி நிவாரணக் கொடுப்பனவுகள் சகல பிரதேச சமுர்த்தி வங்கிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள தாகவும், அதனை எதிர்வரும் புத்தாண்டுக்கு முன்னர் சகல சமுர்த்திப் பயனாளிகளையும் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் க.மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தின் சகல பிரதேச செயலாளர் பிரிவுகளிலுமுள்ள சமுர்த்திப் பயனாளிகளுக்கான கொடுப்பனவு, மாவட்டச் செயலகத்தால் இந்த வாரம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 2013 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதல் இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் வரையிலான 5 மாதங்களுக்குரிய கொடுப்பனவும், மாவட்டச் செயலகத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொடுப்பனவுகளை எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் பயனாளிகள் பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் இந்தக் கொடுப்பனவு களை வழங்கும் போது, சேமிப்புக்கான தொகையை அறவிடுவது அல்லது கடனுக்கான கொடுப்பனவை அறவிடுவது போன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படக்கூடாது.

இவ்வாறு ஏதாவது அறவீடுகள் வங்கி முகாமையாளர்களால் மேற்கொள்ளப்படுவது கண்டறியப்பட்டால், அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்றும் சமுர்த்தி உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார். (வ-5)

## கண்ணீர் அஞ்சலி

எமது மாவட்டச் சமுர்த்தி செயலகத்தில் சமுர்த்தி முகாமையாளராக (கணக்காய்வு) கடமையாற்றும்

திரு **பாலசாமி ஈசன்** அவர்களின் அன்புத் தந்தை

**நாகநாதர் பாலசாமி**

அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குவதோடு அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**சமுர்த்தி உதவி ஆணையாளரும் உத்தியோகத்தர்களும்,**
**மாவட்ட சமுர்த்தி அலுவலகம்,**
**மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**

(46462) (10)

## மரண அறிவித்தல்

### ஸ்ரீமோகன் நிவேதன்



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீமோகன் நிவேதன் கடந்த (01.04.2014)செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் ஸ்ரீமோகன் - மகாலக்ஷ்மி தம்பதியரின் மூத்தமகனும் நிவேதிகா, மேனகா, நிலோசன், நிதர்சன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ராஜ்மோகன், குகராஜன் ஆகியோரின் மைத்துனரும் நிர்மலன், கனிஸ்ரன், சாலுமேஷியா, திபிகா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2014) வெள்ளிக் கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கற்பகபுரம் புதிய இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கற்பகபுரம், வவுனியா.** **தகவல்: குடும்பத்தினர்.**
**077 5785912**

## புழல் சிறைக்குள் தொலைபேசி பாவித்த இலங்கையர் மீது வழக்கு

சென்னை, ஏப்.4


இந்தியாவின் புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ள இலங்கையர் ஒருவர் சிறைக்குள் கையடக்கத் தொலைபேசி பயன்படுத்தி மாட்டிக் கொண்டுள்ளார்.

இலங்கையைச் சேர்ந்தவர் யோகராஜன் (வயது-53). இவரை 2007 ஆம் ஆண்டு போதைப் பொருள் தடுப்பு பொலிஸார் கைது செய்தனர்.

அதன்பின்னர் அவர் ஆயுள் தண்டனை கைதியாக புழல் சிறையில் அடைக்கப்பட்டார். நேற்று முன்தினம் இரவு இவர் கையடக்கத் தொலைபேசியில் பேசுவதை பொலிஸார் கண்டு பிடித்து தொலை பேசியை பறிமுதல் செய்த னர். இதுகுறித்து சிறை அதிகாரி ராதாகிருஷ்ணன் புழல் பொலிஸில் முறைப்பாடு செய்தார். பொலிஸ் பொறுப்பதிகாரி தேவராஜன் வழக்குப் பதிவு செய்து யோகராஜன் யாரிடம் எதற்காக பேசினார் என்று விசாரணை நடத்தி வருகிறார். (வ)

## மரண அறிவித்தல்

### கிறிஸ்தோப்பர் அருட்பிரகாசம் அழகரெட்ணம்



நெடுந்தீவு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிறிஸ்தோப்பர் அருட்பிரகாசம் அழகரெட்ணம் கடந்த (01.04.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் மேரி திரேசம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற குணரெட்ணம் மற்றும் தர்மரெட்ணம் (கனடா), பாலசிங்கம் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் சுரேஸ் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் சுரேஸ் (கனடா), குணேஸ் (லண்டன்), அமுதா, பாலேஸ் (இந்தியா), விஜிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், அமரா ( இந்தியா) கில்டா (லண்டன்) அன்ரன், பமிலா (இந்தியா) அசோக் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 04-04-2014 வெள்ளிக்கிழமை பி.ப. 4 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தொடர்ந்து A.O.G தேவசபை சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்:**
**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்**
**பேறாமகன் (PERCY LONDON)**
**மற்றும் உற்றார், உறவினர்கள்**

**நெடுந்தீவு**

## உடைந்த போத்தலால் தனக்குத்தானே குத்தியவர் மருத்துவமனையில்

தென்மராட்சி, ஏப்.4

உடைந்த போத்தலை எடுத்து தனக்குத்தானே வயிற்றில் குத்திக் கொண்டதால் காயமடைந்த குடும்பஸ்தரொருவர் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

போத்தலால் குத்திக் காயமடைந்த கச்சாய் வடக்கைச் சேர்ந்த சரவணமுத்து சர்வேஸ்வரன் (வயது - 53) என்பவர் நேற்று நள் ளிரவு சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (வ-9)

**சதா பொன்ஸ் - அல்வாய்**

O/L மீட்டல் வகுப்புக்கள் ஆரம்பம்
05.04.2014
காலை 8.00 மணி
A/L 2016 கலை வணிகப்பிரிவுகள்
புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

இயக்குநர்

## மரண அறிவித்தல்

### மனோன்மணி கனகசபை

வாரிவளவு காரைநகரை வசிப்பிடமாகவுக் கொண்ட திருமதி மனோன்மணி கனகசபை நேற்று (03.04.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபையின் (P.H.I) அன்புமனைவியும் காலஞ்சென்ற முத்தையா - இலக்சுமிஅம்மா தம்பதியரின் அன்புமகளும் கந்தையா - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்புமருகளும் செல்வக்குமார் கனகமணி, சாராதாமணி (சுகாதார திணைக்களம் வவுனியா), சிவகுமார் (U.S.A), கலாமணி ஆகியோரின் அன்புத்தாயும் நந்தினி (U.S.A) காலஞ்சென்ற இராசரத்தினம், தியாகலிங்கம் (P.H.I), பவானி(U.S.A), தியாகலிங்கம் (புள்ளி விவர ஆய்வாளர் வவுனியா கச்சேரி) ஆகியோரின் அன்புமாமியும் ஜெயகாந்தன் - கவிதா (கட்டார்), ஜெயகாந்தா - சுபோசினி(UK), நகுலேந்திரன் - காஞ்சனா (கனடா), ஜெயதீபன், நயனி, கலாயினி (கட்டார்), ராகினி - லோகேஸ்வரன், லக்சனா, கௌம்சன்தனி, கஸ்தூரி (U.S.A), ரவீன் (U.S.A), சயனி(U.S.A), ராகுலன்(U.S.A) ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் நிரோசன், கீர்த்திக், நயனன் ஆகியோரின் அன்புப்பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2014) வெள்ளிக் கிழமை பி.ப. 4 மணிக்கு பொன்னம்பலம் வீதி ஆலடி காரைநகர் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாம்பலோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஆலடி, காரைநகர்** **தகவல்: குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

### சோமசுந்தரம் சபானந்தன்

**( ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர் யாழ். கல்வி வலயம்)**



வடமராட்சி உடுப்பிட்டி சந்தை வீதியைப் பிறப்பிடமாகவும் , யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை நாச்சிமார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சபானந்தன் நேற்று (03.04.2014) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - நல்லமுத்து தம்பதியரின் மகனும் காலஞ் சென்றவர்களான சுந்தரம் - அரசம்மா தம்பதியரின் மருமகனும் சத்தியாபாமாவின் கணவரும் மைத்ரேயி (லண்டன்), யாதவன் (தினக்குரல்) ஆகியோரின் தந்தையாரும் பரமசிங்கம், சிவலட்சுமி, சிவபூரணம் ஆகியோரின் சகோதரனும் சிதம்பரநாதன், சண்முகநாதன், ஜெகநாதன், சசிரேகா, றதி ஆகியோரின் மைத்துனரும் அம்பிகைதர்சினி, அம்பிகைகுமார், அம்பிகைதரன் ஆகியோரின் சிறியதந்தையும் ரூபசௌந்தினி, பிரியதர்ஷினி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2014) வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணயளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**101 சீனியர் ஒழுங்கை,**
**வண்ணார்பண்ணை கிழக்கு, யாழ்ப்பாணம்.**

**தகவல்: யாதவன் (மகன்)**
**0774081512**

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**நாவுக்கு விருந்தளிக்கும் அறுசுவை**
**தென்னிந்திய சைவ உணவு வகைகள்**
விருப்பம்போல் ருசிக்க...

**MANGOS**
Indian Veg

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு இன்று முதல் விசேட விலைக் கழிவுகள்...

மதிய உணவு : 40% விலைக்கழிவு
இரவு உணவு : 25% விலைக்கழிவு

இல:359/3. கோயில் வீதி நல்லூர். யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 021 222 8294. 0777 66 10 83

# யாழ்ப்பாணத்தில் நேபாள குழுவினர்

**போருக்குப் பின்னரான மீள்கட்டுமானம், சமூக ஒருமைப்பாடு தொடர்பில் அறிந்துகொள்வதற்காக இங்கு வருகை**

யாழ்ப்பாணம், ஏப்.4
போருக்குப் பின்னரான யாழ்ப்பாணத்தின் மீள் கட்டுமானம் மற்றும் சமூக ஒருமைப்பாடுகள் தொடர்பில் அறிந்து கொள்வதற்காக, நேபாளத்தின் சமாதானம் மற்றும் மீள்கட்டுமான அமைச்சின் குழுவினர் யாழ். மாவட்டத்துக்கு நேற்றைய தினம் வருகை தந்து பல்வேறு பகுதிகளையும் பார்வையிட்டுள்ளனர்.
இலங்கையில் போருக்குப் பின்னரான சூழலில் எவ்வாறு சமாதானம் மற்றும் மீள்கட்டுமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை ஆராய்ந்து, அவற்றைத் தமது நாட்டில் நடைமுறைப்படுத்துவதே தமது வருகையின் நோக்கம் என்று நேபாளக் குழுவினர் தெரிவித்தனர்.
நேபாளத்தின் சமாதானம் மற்றும் மீள்கட்டுமான அமைச்சின் 9 பேர் கொண்ட குழுவினர், வடபகுதிக்கு நேற்று வருகை தந்திருந்தனர்.
யாழ். மாவட்டச் செயலகத்துக்கு முதலில் சென்ற குழுவினர் மேலதிக அரச அதிபரைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.
அதன் பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சென்றதுடன் நகரப் பகுதியையும் சுற்றிப் பார்வையிட்டனர். அதனைத் தொடர்ந்து வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

**நல்லிணக்கச் செயற்பாடு**

யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் உட்கட்டுமானப் பணிகள், அபிவிருத்திச் செயற்பாடுகள், மீள்குடியமர்வு நடவடிக்கைகள், மீள்குடியமர்ந்தோருக்கான உதவிகள் எனப் போருக்குப் பின்னரான பல தரப்பட்ட செயற்பாடுகள் தொடர்பில் நேபாளக் குழுவினருக்கு விளக்கமளிக்கப்பட்டது.
நேபாளத்திலும், இலங்கையைப் போன்று போருக்குப் பின்னரான சூழல் தற்போது நிலவுகின்றது.
இலங்கையில் இங்கு போருக்குப் பின்னர் எவ்வாறு சமூக ஒருமைப்பாடு, மீள்கட்டுமானம் என்பவை இடம்பெற்று வருகின்றன என்பதை ஆராய்ந்து அதனைத் தமது நாட்டிலும் நடைமுறைப்படுத்துவதே தாம் இங்கு வந்ததன் நோக்கம் என்று நேபாளக் குழுவினர் தெரிவித்தனர். (ஒ-5)



யாழ். மாவட்டத்துக்கு நேற்று வருகை தந்திருந்த நேபாள நாட்டின் சமாதானத்துக்கான மீள் கட்டுமான அமைச்சின் குழுவினர் யாழ்.செயலகத்தில் மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கத்துடன் கலந்துரையாடிய பின்னர். (ஒ)

# பழைய இரும்பு விலை வீழ்ச்சி

## யாழ்ப்பாணத்தில் தொழிலாளர்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.4
யாழ். மாவட்டத்தில் பழைய இரும்பின் விலை வீழ்ச்சி அடைந்துள்ள நிலையில் இரும்பு வியாபாரத்தில் ஈடுபடுவோர் தாம் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.
இந்த நிலை குறித்து யாழ். மாவட்டத்தில் பழைய இரும்பு விற்பனை நிலைய உரிமையாளர் கே.எம். நிலாம் கூறுகையில்;
'நான் மீள்குடியேற்றத் திட்டத்தின் கீழ் 2009 இல் யாழ்ப்பாணம் வந்தது முதல் பழைய இரும்பைச் சேகரித்து விற்பனை செய்யும் தொழிலில் ஈடுபட்டுவருகின்றேன்.
வாழ்வாதாரத்துக்காக இரும்புத் தொழிலையே நம்பியுள்ளோம். யாழ்ப்பாணத்தில் திடீரென ஏற்பட்ட விலை வீழ்ச்சியால் இந்தத் தொழிலில் ஈடுபடும் பலர் பாதிப்படைந் துள்ளனர். யாழ்ப்பாணத்தில் உள்ள முஸ்லிம்களை பொறுத்த வரை நூற்றுக்கு 80 சத வீதமானவர்கள் இந்தத் தொழிலில் ஈடுபடுபவர்களாகவே உள்ளனர்.
இந்த விலை வீழ்ச்சிக்குக் காரணம் சிலாபம், மாதம்பையில் உள்ள இரும்பு உற்பத்தி நிலையம் மூடப்பட்டமைதான். கம்பிகள் விற்பனை ஆகவில்லை என்ற காரணத்தைக் கூறி உற்பத்தி நிலையம் மூடப்பட்டு விட்டது. இதனால் பழைய இரும்பை சேகரித்து விற்பனை செய்வோரின் வாழ்வாதாரமே பாதிக்கப்பட்டுள்ளது.
கடந்த சில தினங்களாக இந்த நிலையே தொடர்கின்றது.
இந்தத் தொழிலில் ஈடுபடாதோருக்கு இது சாதாரணமாகத் தெரிந்தாலும் இத் தொழிலில் ஈடுபடும் எமக்குத்தான் இதனால் ஏற்படும் பெரும் நட்டங்கள் தெரியும். இதனால் நேரடியாகப் பாதிக்கப்படுவது நாங்கள் தான்.
இரும்பு சேகரிக்கும் தொழிலாளர் கடந்த காலத்தில் 40-42 ரூபாவுக்கு இரும்பு வியாபாரிகளுக்கு ஒரு கிலோ இரும்பை வழங்கிவந்தனர். ஆனால் இன்று சடுதியாக ஏற்பட்ட மாற்றத்தால் 30ரூபாவுக்கே இரும்பை இரும்பு வியாபாரிகளுக்கு வழங்குகின்றனர்.
கடந்த காலத்தில் இரும்பின் விலை இந்தமாவட்டத்தில் 49 முதல் 51 ரூபா வரை ஏற்றம் கண்டிருந்தது. இவ்வாறான காரணங்களால் தற்போது இவ்வாறு விலைத் தளம்பல் ஏற்பட்டுள்ளது.
இந்த நிலையில் அடுத்த கட்டமாக என்ன செய்வதென்று தெரியாமல் தொழிலாளர்கள் பழைய இரும்பை களஞ்சியப்படுத்துகிறார்கள்.. விலை அதிகரிப்பு ஏற்படலாம் என்ற எதிர்பார்ப்பில் விற்பனை செய்வதற்கான முன்னாயத்தமாகவே தொழிலாளர்கள் இம் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.
தொழிலாளர்கள் மாதாந்தம் இரும்பு விற்பனை மூலம் 25 ஆயிரம் ரூபா வருமானத்தை பெற்று வந்தனர். இந்த நிலையில் விலை வீழ்ச்சியால் பெரிய நட்டத் துக்கு முகங்கொடுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது' என்று கூறினார். கடந்த காலங்களில் இரும்புத் தொழிலை அதிகமானோர் மேற்கொண்ட நிலையில் இவ்வாறான திடீர் விலை வீழ்ச்சியால் அநேகர் தொழிலை கைவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ-10)

# விவசாயிகள் ஓய்வூதியத்தை பெற்றுக் கொள்ளலாம்

அச்சுவேலி, ஏப்.4
விவசாயிகளுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவுகள் தபால் அலு வலகங்கள் மூலம் வழங் கப்பட்டு வருகின்றன.
எனவே சம்பந்தப்பட்ட விவசாயி கள் காலம் தாழ்த்தாமல் தமக் குரிய கொடுப்பனவை உடனடியாகப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.
"பயிர்க் காப்புறுதிச் சபையால் வழங்கப்படும் விவசாயிகளுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவு வழமை போன்று தபால் நிலை யங்கள் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.
மார்ச் மாதத்துக்கான விவசாயிகளுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவை பெற்றுக் கொள் ளாத விவசாயிகள் தாம் வழ மையாக ஓய்வூதியம் பெறும் தபால் அலுவலகத் துடன் தொடர்பு கொண்டு உடனடியாக பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-11)


# மாநகர சபைக்குட்பட்ட கரையோர வீதிகளைப் புனரமைக்க வேண்டும்

## உறுப்பினர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.4
யாழ்.மாநகரசபைக்கு உட்பட்ட கரையோர பகுதியில் உள்ள அநேகமான வீதிகள் இன்றும் புனரமைப்பு இன்றி இருப்பதால் அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள், போக்குவரத்தில் ஈடுபடுவோர் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.
கடந்த சில வருடங்களாக புனரமைப்பு இன்றி இருக்கும் குறித்த வீதிகளை புனரமைப்பதற்கு மாநகர சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாநகர சபை உறுப்பினர் அருளப்பு கொர்னேலியஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;
பாஷையூர், குருநகர், கொழும்புத்துறை, நாவாந்துறை போன்ற கரையோரப் பகுதிகளின் வீதிகள் நீண்டகாலமாகப் புனரமைப்பு இன்றி உள்ளன.
புனரமைப்பு இன்றி இருக்கும் குறித்த வீதிகளை புனரமைத்து தருமாறு பல தடவைகள் மாநகர சபைக் கூட்டங்களில் கோரிக்கை விடுத்தும், இதுவரை எந்த வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்றார். (வ-17)

# கல்வியங்காட்டுச் சந்தியில் எம்.ஜி.ஆர் சிலை

யாழ்ப்பாணம், ஏப்.4
புரட்சித் தலைவர் அமரர் எம்.ஜி.ஆரின் உருவச் சிலை ஒன்று கல்வியங்காட்டுச் சந்தியில் கடந்த புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.
யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா சிலைக்குரிய பெயர்ப் பலகையைத் திரை நீக்கம் செய்து வைத்தார். இந்த உருவச் சிலையை இந்திய சிற்பக் கலைஞர் புருஷோத்தமன் நிர்மாணித்திருந்தார்.
எம்.ஜி.ஆரின் சிலைக்கு யாழ். எம்.ஜி.ஆர். என்று அழைக்கப்படும் இ.சுந்தரலிங்கம், ஜனாதிபதியின் வன்னி மாவட்ட இணைப்பாளர் ச.கனகரத்தினம் மற்றும் பலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். வறுமைக்கோட்டுக்கு உட்பட்டவர்களுக்குச் சிலை திறப்பை முன்னிட்டு உடுபுடைவைகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் எம்.ஜி.ஆர் ரசிகர்கள் மற்றும் பொது மக்கள் பலரும் கலந்து கொண்டனர். (வ)



அமைக்கப்பட்ட சிலையைக் காணலாம்

# நாகர்கோவில் மக்கள் வசதிக்காக ப.நோ. கூ.ச. கிளை

வடமராட்சி, ஏப்.4
மீள்குடியேற்றம் இடம்பெற்ற நாகர்கோவில் மேற்கு, கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த மக்களின் வசதி கருதி அங்கு கூட்டுறவுச் சங்கக் கிளை ஒன்று எதிர்வரும் 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மருதங்கேணி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் திறந்து வைக்கப்படவுள்ளது.
மீளக்குடியேறிய குறித்த கிராம மக்கள் அத்தியாவசியப் பொருள்களைப் பெறுவதற்கு சந்தையோ , கடைகளோ இல்லாத நிலையில் வெளியிடங்களுக்குச் சென்றே அத்தியாவசியப் பொருள்களை கொள்வனவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது.
இதனால் இந்தப் பகுதியில் கூட்டுறவுக் கிளை ஒன்றை நிறுவுமாறு மக்கள் விடுத்த கோரிக்கையை அடுத்து இந்தக் கிளை திறக்கப்படுகின்றது.
குறித்த கிளைச் சங்கத்தை ஆரம்பிப்பதற்கான கட்டடத்தைப் இந்தப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் புதிதாகக் கட்டி வழங்கியுள்ளார். (வ-173)

# வானியல் பாசறை

வடமராட்சி, ஏப்.4
குடத்தனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் தரம் 9 முதல் 11 வரையான மாணவர்களுக்கான வானியல் பாசறை இன்று வெள்ளிக் கிழமை அதிபர் கி.குகநாதனின் வழிகாட்டலில் விஞ்ஞான ஆசிரியர் அ.வசந்தராஜா தலைமையில் பாடசாலை வளாகத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-173)

# சுன்னாகம் வாள்வெட்டு; சந்தேகநபர்கள் மூவர் கைது

வலி.வடக்கு, ஏப்.4
சுன்னாகம் தெற்கில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்று சந்தே கிக்கப்படும் பெண்ணொருவர் உட்பட மூவர், சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் மல்லாகம் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டனர்.
சுன்னாகம் தெற்கு பூதராயர் கோயிலடியில் சிலர் மத்தியில் இடம்பெற்ற வாய்த் தர்க்கத்தைத் தொடர்ந்து இந்த வாள் வெட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனத் தெரிய வருகின்றது.
சந்தேக நபர்கள் மூவரும் பொலிஸாரால் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில், குறிப்பிட்ட பெண்ணையும் மற்றும் வெட்டுக்காயத்துக்கு உள்ளாகிய ஒரு நபரையும் தலா 50 ஆயிரம் ரூபா ஆள் பிணையில் நீதிமன்றம் விடுத்ததுடன் பிரதான சந்தேக நபர் என்று கருதப்படு பவரை 2 வார காலத்துக்கு விளக்கமறியலில் வைக்கும் படியும் உத்தரவிட்டுள்ளது. (வ-86)



கோப்புப்படம்

# அணு ஆயுதத்தை முதலில் பயன்படுத்தமாட்டோம் என்று சர்வதேச ரீதியில் உடன்படிக்கை ஏற்படுத்தப்படவேண்டும்

## இந்தியப் பிரதமர் மன்மோகன் புதிய யோசனை

புதுடில்லி.ஏப் 4

அணு ஆயுதங்களை முதலில் பயன்படுத்தமாட்டோம் என சர்வதேச ரீதியில் ஒப்பந்தம் ஏற்படுத்தவேண்டும் என பிரதமர் மன்மோகன் சிங் யோசனை தெரிவித்திருக்கிறார்.

அணு ஆயுதமில்லா உலகு. கோட்பாட்டிலிருந்து நிஜத்தை நோக்கி என்ற தலைப்பில் கடந்த புதன்கிழமை நடந்த சர்வதேசக் கருத்தரங்கில் பிரதமர் மன் மோகன்சிங் ஆற்றிய உரை வருமாறு:-

தாம் வைத்திருக்கும் அணு ஆயுதங்கள் பிறரை அச்சுறுத்தவே என்பதை அங்கீகரித்து அது பற்றிய விவரங்களை பிரகடனப்படுத்தினால் முதலில் பயன்படுத்தமாட்டோம் என்கிற ஒப்பந்தம் செய்துகொள்ள நாம் வழி காணலாம்.

அணு ஆயுதங்களை வைத்திருப்பதன் நோக்கமே பிற நாடுகள் தாக்குதல் நடத்தாமல் இருக்க அவற்றை மிரட்டவே என்கின்ற குரல் எங்குமே கேட்கிறது.

அணு ஆயுதங்களுக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவத்தை குறைப்பது மிகவும் அவசியமானது.

ஆயினும் இதை ஒரு நாடு தனித்துச் செய்து சாதிக்க முடியாது. பல நாடுகள் இணைந்த ஒப்பந்தம் இதற்குத் தேவைப் படுகிறது.

அணு ஆயுதமில்லா உலகு அமைவதை இந்தியா ஆதரிக்கிறது. ஆயினும் கடின மான பாதுகாப்பு நிலைவரம் காரணமாகவே அணு ஆயுத வல்லமை படைத்த நாடு என தன்னைப் பிரகடனப்படுத்திக் கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் இந்தியாவுக்கு ஏற்பட்டது.

1974 இல் தமது அணு ஆயுதத் திறனை உலகுக்கு உணர்த்திய இந்தியா அதன் பின்னர் சுமார் 25 ஆண்டுகள் கட்டுப்பாடுடன் நடந்து கொண்டது. இந்நிலையில் கடினமான பாதுகாப்புச் சூழல் காரணமாக 1998 இல் அணு



மன்மோகன் சிங்

ஆயுதச் சோதனை நடத்தியது. அணு ஆயுதங்கள் பேரழிவு சக்தி கொண்டவை. பொது நலனுக்கும் உதவக்கூடியது அணு சக்தி. அணுசக்தி தொழில் நுட்பத்தை அமைதி நோக்கங்களுக்குப் பயன்படுத்தி மனித சமுதாயத்துக்குப் பயன் தருவதாக உறுதிசெய்யும் அதேவேளையில் பேரழிவுக்கு அதைப் பயன்படுத்தாதிருக்க வழி காணவேண்டும்.

பொறுப்புமிக்க அணு ஆயுத நாடாக, அணு ஆயுதங்களை அதிகரிப்பதில் ஈடுபாடு காட்டுவதில்லை என்ற முடிவில் தெளிவாக இருக்கிறது இந்தியா.

அணு ஆயுதமில்லா உலகம் என்பது இந்தியாவின் பாதுகாப்பை மட்டும் அல்ல உலகத்தின் பாதுகாப்பையே அதிகரிக்கும் என்றார் மன் மோகன் சிங். (த)

## எருமையில் ஏறி வந்து வேட்பு மனுத் தாக்கல்

### நெல்லையில் பரபரப்பு

சென்னை.ஏப் 4

திருநெல்வேலி மக்களவைத் தொகுதியில் போட்டியிடுவதற்காக இந்து மக்கள் கட்சியின் மாவட்ட பொதுச் செயலாளர் எஸ். சுப்பிரமணியன் நேற்றுக் காலை விநோதமாக எருமை மாட்டில் ஏறி வந்தார்.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்குத் தொண்டர்கள் 8 பேர் உடன் வர, எருமை மாட்டில் அமர்ந்து வந்த அவர், செய்தியாளர்களிடம் கூறியபோது, பெற்றோல், டீசல் விலை பல மடங்கு உயர்த்தப்பட்டுள்ளது. மத்திய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசில் பொருளாதாரம் பல மடங்கு வீழ்ச்சி கண்டுள்ளது.

எனக்குக் காரிலோ வண்டியிலோ வந்து வேட்பு மனு தாக்கல் செய்யும் அளவுக்குப் பொருளாதார வசதியில்லை.

என் நண்பருடையஎருமை மாட்டை யாசகம் கேட்டுப் பெற்று வந்தேன் என்று கூறினார். (த)



பா.ஜ.க. வில் இணைந்த உத்தரபிரதேச மாநிலம், கௌதம புத்தா நகர் தொகுதிக் காங்கிரஸ் வேட்பாளர் ரமேஷ் சந்தை அணைத்து வரவேற்கிறார் பா.ஜ.க பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி. (த)

## நடிகை நக்மாவுக்கு பாதுகாப்பு கோரி மனு

புதுடில்லி.ஏப் 4

மீரட் தொகுதியில் போட்டியிடும் நடிகை நக்மாவுக்குக் கூடுதல் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று தேர்தல் ஆணையத்துக்கு உத்தரப் பிரதேச காங்கிரஸ்குழு கோரிக்கை மனு அனுப்பியுள்ளது.



மீரட் மாவட்டத் தேர்தல் அலுவலர் மற்றும் மத்திய தேர்தல் ஆணையத்துக்குக் காங்கிரஸ் சார்பில் அனுப்பப்பட்டுள்ள மனுவில் கூறியிருப்பதாவது:-

மீரட் தொகுதியில் போட்டியிடும் திரைப்பட நடிகை நக்மாவின் தேர்தல் பிரசாரத்துக்கு நூற்றுக்கணக்கானோர் வருகின்றனர். கூட்டம் அதிகமாக இருப்பதால், அவருக்கு வழங்கப்படும் பாதுகாப்பைப் பலப்படுத்தவேண்டும்.

தற்போது மீரட் மாவட்ட நிர்வாகம் சார்பில் அளிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு போதுமானதாக இல்லை. எனவே, நக்மாவின் பிரசாரத்துக்குச் செல்லும்போது கூடுதலாகக் காவலர்களைப் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 27ஆம் திகதி, மீரட்டில் பிரசாரத்துக்குச் சென்ற நக்மாவை இளைஞர் ஒருவர் சீண்டினார். இதனால், கோபத்துக்கு உள்ளான நக்மா, அந்த இளைஞரின் கன்னத்தில் அறைந்தார். இதைத் தொடர்ந்து, அவரின் பாதுகாப்பை அதிகரிக்க காங்கிரஸ் கோரிக்கை விடுத்துள்ளது. (த)

## அ.தி.மு.க ஆட்சியில் ஒரு லட்சம் பெண்கள் வேலையை இழந்தனர்

### தி.மு.க. தலைவர் கருணாநிதி பகிரங்கக் குற்றச்சாட்டு

சென்னை.ஏப் 4

அதிமுக ஆட்சியில் ஒரு லட்சத்து 15 ஆயிரம் பெண்கள் தனியார் தொழிற்சாலைகளில் வேலைவாய்ப்பை இழந்துள்ளனர் என்று தி.மு.க தலைவர் கருணாநிதி கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கடந்த புதன்கிழமை வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

கோவை தேர்தல் பிரசாரக் கூட்டத்தில், தொழில் வளர்ச்சி பற்றி முதல்வர் ஜெயலலிதா அவருக்கே உரிய பாணியில் பேசியிருக்கிறார். தமிழகத் தொழிலதிபர்கள் கர்நாடகாவுக்குப் போய்விட்டனர் என்று நானும் ஸ்டாலினும் பொய்ப் பிரசாரம் செய்வதாகக் தெரிவித்துள்ளார்.



தனது மூன்றாண்டு கால ஆட்சியில் 33 இந்திய மற்றும் பன்னாட்டு நிறுவனங்களுடன் 31,306 கோடி ரூபா முதலீட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்துள்ளதாக ஜெயலலிதா கூறியுள்ளார். புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பல நிறுவனங்களுடன் போடலாம். உண்மையில் தொழில் தொடங்கினால்தானே பயனளிக்கும்.

தி.மு.க ஆட்சியில் தொழிற்சாலைகளில் பணியாற்றிய பெண்களின் எண்ணிக்கை 4 லட்சத்து 93 ஆயிரம் ஆகும். ஆனால், தற்போது 3 லட்சத்து 78 ஆயிரமாகக் குறைந்து விட்டது. இந்த ஆட்சியில் ஒரு லட்சத்து 15 ஆயிரம் பெண்கள் வேலைவாய்ப்பை இழந்துள்ளனர்-என்றுள்ளது. (த)

## தமிழக உரிமைகள் பறிபோகக் காரணமே காங்கிரஸ் தான்

### நாமக்கல்லில் ஜெயலலிதா ஆவேசம்

சென்னை, ஏப் 4

தமிழகத்தின் உரிமைகள் பறிபோகக் காரணமே தி.மு.க சுட்டிக் காட்டிய காங்கிரஸ் அரசு தான் என்று அ.தி.மு.க பொதுச் செயலாளரும் தமிழக முதல்வருமான ஜெயலலிதா கூறினார்.

நாமக்கல் தொகுதியில் அ.தி.மு.க சார்பில் போட்டியிடும் பி.ஆர். சுந்தரத்தை ஆதரித்து நேற்றுத் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளார் ஜெயலலிதா.

அப்போது அவர் பேசுகையில், கடந்த தேர்தலில் நாங்கள் அளித்த 170 வாக்குறுதிகளில் 150 வாக்குறுதிகளை நிறைவேற்றி வருகிறோம்.

அ.தி.மு.கவினர், தமிழகத்தில் நிறைவேற்றிய வாக்குறுதிகளைக் குறிப்பிட்டு வாக்குக் கேட்கிறோம்.

ஆனால், இதுவரை என்னென்ன நன்மை செய்தோம் என்று கூறித் தி. மு.க வாக்கு கேட்கவில்லை.

கருணாநிதி கைகாட்டும் நபர் தான் பிரதமராவார் என்று கூறித்தான் வாக்கு கேட்கிறார்கள்.

தமிழக உரிமைகள் பறிபோகக் காரணமே தி.மு.க கை காட்டிய காங்கிரஸ் அரசு தான்-என்றார். (த)



கூட்டத்தில் ஜெயலலிதா

உதயன் 04.04.2014



# முஷாரப்பைக் குறி வைத்து நேற்று குண்டுத் தாக்குதல்

## மயிரிழையில் தப்பினார் அவர்



கராச்சி,ஏப் 4

பாகிஸ்தான் முன்னாள் அதிபர் பர்வேஸ் முஷாரப் பண்ணை வீடு அருகே நேற்று அதிகாலை சக்தி வாய்ந்த குண்டுவெடித்தது. முஷாரப்பை குறிவைத்து நடத்தப்பட்ட இந்தப் படுகொலை முயற்சியில் இருந்து அவர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்.

ராவல்பிண்டியில் உள்ள பாகிஸ்தான் இராணுவத்துக்குச் சொந்தமான இருதய நோய் சிகிச்சை மையத்தில் சிகிச்சை பெற்று வந்த பர்வேஸ் முஷாரப் நேற்று அதிகாலை 3 மணி அளவில் அங்கிருந்து பண்ணை வீட்டுக்கு மாற்றப்பட்டார்.

பாதுகாப்பு நிறைந்த பைசாபாத்-ர வால் டாம் சவுக் சாலையில் பர்வேஸ் முஷாரப்பின் பாதுகாப்பு வாகனம் கடந்து சென்றபோது சக்தி வாய்ந்த குண்டு வெடித்தது. இதில் பாதுகாப்பு வாகனத்தில் இருந்த ஒருவர் படுகாயமடைந்தார். சம்பவ இடத்தில் ஓர் அடி அளவில் பெரும் பள்ளம் ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் முன்னாள் அதிபர் முஷாரப்பை குறி வைத்தே நடத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது.

வெடிகுண்டு சாலை ஓரத்தில் இருந்த கழிவுநீர் வாய்க்காலில் பதுக்கி வைக்கப்பட்டிருந்ததாகப் பொலிசார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தை தொடர்ந்து அப்பகுதி முழுவதையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த பொலிசார் மேலும் வெடிகுண்டுகள் ஏதேனும் பதுக்கி வைக்கப்பட்டிருக்கிறதா என சோதனையில் ஈடுபட்டனர்.

### தீவிரவாதிகள் குறி

பர்வேஸ் முஷாரப்புக்குத் தீவிரவாதிகள் அச்சுறுத்தல் இருப்பதால் அவருக்கு பல அடுக்குப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. பலத்த பாதுகாப்பையும் மீறி இந்த தாக்குதல் சம்பவம் நடந்துள்ளது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (த)



## இறுதி இராப்போசனக் கிண்ணம் ஸ்பெய்ன் நாட்டில் கண்டுபிடிப்பு

மட்ரிட்,ஏப் 4

இயேசு கிறிஸ்துவின் இறுதி இராப்போசனத்தின்போது அவர் அருந்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட அலங்காரக் கிண்ணம் ஸ்பெயினிலுள்ள சிறிய அருங்காட்சியகமொன்றில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு வரலாற்று அறிஞர்கள் இருவர் தெரிவிக்கின்றனர்.

வட ஸ்பெயினில் லியோன் நகரிலுள்ள சான் இஸிடோரோ தேவாலயத்தில் தூசு படிந்த நிலையில் மேற்படி கிண்ணம் 1000 ஆண்டுகளாக வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் 1950 களில் மேற்படி தேவாலயத்தில் அருங்காட்சியம் திறந்து வைக்கப்பட்டபோது அந்தக் கிண்ணம் காட்சிக்கு வைக்கப்பட்டது.

அந்தக் கிண்ணம் இயேசு கிறிஸ்துவால் பயன்படுத்தப்பட்டமைக்குச் சான்றுள்ளதாக வரலாற்று அறிஞர்களான மார்கரிதா ரொரஸும் ஜோஸ் ஓர்ரிஸா டெல் ரியோவும் தெரிவித்தனர்.

இந்தக் கிண்ணம் கிறிஸ்துவுக்கு முன் சுமார் 200 ஆம் ஆண்டளவில் உருவாக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

தமது ஆய்வின் பிரகாரம் இயேசு கிறிஸ்துவால் இறுதி இராப்போசனத்துக்கு பயன்படுத்தப்பட்ட கிண்ணம் ஜெருசலேமிலிருந்து களவாடப்பட்டு எகிப்திய கிறிஸ்தவ சமூகத்திடம் ஒப்படைக்கப்பட்டதாகத் தெரிவித்த ஆய்வாளர்கள் பல நூற்றாண்டுகள் கழித்து சுமார் 1050 ஆம் நூற்றாண்டளவில் அந்தக் கிண்ணம் முதலாம் பெர்னாண்டோ மன்னருக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளதாக கூறுகின்றனர்.

அதன் பின் அந்தக் கிண்ணம் 1037 ஆம் ஆண்டிலிருந்து 1063 ஆம் ஆண்டு காலத்தில் முதலாம் பெர்னாண்டோ மன்னரின் மகளான யுக்ரேகா மகாராணியாரின் உடைமையாக இருந்துள்ளது. மகாராணியார் அதனைச் சான் இஸிடோரோ தேவாலயத்துக்கு வழங்கியுள்ளதாகத் தமது ஆவண ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளதாக ஆய்வா ளர்கள் தெரிவிக்கின்றனர். (த)

## சிலியைத் தாக்கியது 2 ஆவது நிலநடுக்கம்

சன்ரியாகோ,ஏப் 4

சிலி நாட்டில் வடக்குப் பகுதியில் மீண்டும் ஒரு பூகம்பம் தாக்கியுள்ளது. இதனால், அதிபர் மிச்சேல் பச்சலட் கடற்கரைப் பிரதேசத்தை விட்டு வெளியேறும் நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த செவ்வாயன்று முதலாவது பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட லிகியுகியு நகருக்கு அருகாக 7.8 புள்ளி பலம் மிக்க இந்த இரண்டாவது பூகம்பம் நேற்று தாக்கியுள்ளது.

இந்தக் கடற்கரைப் பிரதேசத்தில் முதலாவது பூகம்பத்தால் ஏற்பட்ட பாதிப்புக்களை மதிப்பிட அதிபர் பச்சலட் பயணம் செய்திருந்த நேரத்தில், இரண்டாவது பூகம்பத்தால் சுனாமி தாக்கலாம் என்ற அச்சம் காரணமாக அந்தப் பகுதி மக்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். சுனாமியின் முதலாவது அலைத் தாக்குதல் கரையை எட்டியுள்ளது. ஆனாலும் பெரிய அழிவுகள் குறித்த தகவல்கள் எதுவும் இன்னமும் கிடைக்க வில்லை. முதலாவது பூகம்பத்தில் 6 பேர் உயிரிழந்துள்ளனர். (த)



இத்தாலிக்கான பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளார் பிரிட்டனின் எலிசபெத் மகாராணி. இவர் இந்தப் பயணத்தின் போது பாப்பரசரையும் சந்தித்துப் பேசவுள்ளார்.

## சக சிப்பாய்களை சுட்டுக் கொன்றுவிட்டு தானும் தற்கொலை

நியூயோர்க்,ஏப் 4

அமெரிக்காவின் மிகப் பெரிய இராணுவத் தளமான "போர்ட் கூட்" தளத்தில் ராணுவச் சிப்பாய் ஒருவர் மூன்று சக சிப்பாய்களைச் சுட்டுக் கொன்றுவிட்டுத் தானும் தற்கொலை செய்துள்ளார். இந்தச் சம்பவத்தில் மேலும் 16 பேர் காயமடைந்துள்ளார்கள்.

ஈராக்கில் பணியாற்றித் திரும்பிய இந்தச் சிப்பாய் பதற்றம் மற்றும் மன அழுத்தம் ஆகியவற்றுக்காகச் சிகிச்சை பெற்று வந்திருக்கிறார். இந்தத் தாக்குதலுக்கான நோக்கம் என்னவென்று தெரியவில்லை என்றும், ஆனாலும் பயங்கரவாதத் தொடர்புக்கான சமிக்ஞை எதனையும் காண முடிய வில்லை என்றும் டெக்ஸாஸ் தளத்தின் கட்டளை அதிகாரியான ஜெனரல் மில்லே கூறியுள்ளார்.

2009 இல் இதே போர்ட் கூட் தளத்தில் ஓர் இராணுவ மனநோய் மருத்துவர், 13 பேரைக் கொன்று, 30 க்கும் அதிகமானோரைக் காயப்படுத்தியிருந்தார். (த)

## மனைவியை விவாகரத்து செய்தார் விளாடிமிர் புடின்

### ஜிம்னாஸ்ரிக் வீராங்கனையை மணக்கிறார்



மொஸ்கோ,ஏப் 4

தன்னுடன் 30 ஆண்டுகளுக்கு மேலாக குடும்பம் நடத்திய மனைவி லுட்மிலாவை, ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் விவாகரத்துச் செய்துள்ளார்.

இதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பை அதிபரின் செய்தித் தொடர்பாளர் வெளியிட்டுள்ளார்.

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினுக்கும் அவரது மனைவி லுட்மிலாவுக்கும் 2 மகள்கள் உள்ளனர்.

ஏனைய நாட்டு அதிபர், பிரதமர் ஆகியோருடன் அவர்களுடைய மனைவி, பிள்ளைகள் பொது நிகழ்வுகளில் கலந்து கொள்வது போல், புடினின் மனைவி, மகள்கள் பொது நிகழ்ச் சிகளில் பங்கேற்பதில்லை.

அவர்களைப் பற்றிய செய்திகள் எதுவும் வெளியாவதில்லை. மிக மிக அரிதாகவே புடினின் மனைவி லுட்மிலா பொது நிகழ்ச்சியில் பங்கேற்பார்.

கடந்த 1983 ஆம் ஆண்டு லுட்மிலாவைத் திருமணம் செய்தார் புடின். அவர் திருமணம் செய்த அதே ஆண்டு பிறந்தவர் அலினா கபாயேவா. இவர் ஜிம்னாஸ்ரிக் வீராங்கனையாகப் பிரபலமானார். கடந்த 2008 ஆம் ஆண்டு அலினாவுக்கு 25 வயதானபோது, புடினுடன் இணைத்துப் பேசப்பட்டார். அலினாவை புடின் திருமணம் செய்து கொள்ளப் போகிறார் என்று பரபரப்பாக செய்திகள் வெளியாயின. அதனைப் புடின் மறுத்திருந்தார்.

இந்நிலையில், கடந்த ஆண்டு ஜூன் மாதம் புடினும் லுட்மிலாவும் தங்களது திருமண வாழ்க்கை முடிந்தது என்று ரஷ்யத் தொலைக்காட்சியில் நேரடி ஒளிபரப்பு நிகழ்ச்சியில் பகிரங்கமாக அறிவித்தனர்.

ஆனால், விவாகரத்து முறைப்படி நடக்கவில்லை என்று அதிபரின் கிரம்ளின் மாளிகை அறிக்கை வெளியிட்டது.

இந்நிலையில், லுட்மியாவை புடின் முறைப்படி விவாகரத்து செய்து விட்டார் என்று நேற்று கிரம்ளின் மாளிகை செய்தித் தொடர்பாளர் திமித்ரி பெஸ்கோவ் அதிகாரப்பூர்வமாக அறிவித்தார். (த)

## ஐ.நா. உறுப்பினராவதற்கு பலஸ்தீனம் விண்ணப்பம்

ரமளா,ஏப் 4

சமாதானப் பேச்சுக்காக இஸ்ரேல் விதித்திருந்த நிபந்தனைகளை மீறி ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளில் உறுப்பினராகும் முயற்சிகளைப் பலஸ்தீனம் மீண்டும் தொடங்கியுள்ளது.

பல ஆண்டுகளாக நீடித்து வரும் இஸ்ரேல் - பலஸ்தீன பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வரும் முயற்சியாக அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோன் கெரி கடந்த ஆண்டு ஜூலை மாதம் இரு நாடுகளிடையே பேச்சைத் தொடங்கினார். பேச்சின்போது, ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளில் உறுப்பினராகும் முயற்சியைக் கைவிடவும், இஸ்ரேல் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதை நிறுத்திக் கொள்ளவும் பலஸ்தீனம் ஒப்புக்கொண்டது.

அதற்குப் பதிலாக, இஸ்ரேலியச் சிறைகளில் பல ஆண்டுகளாக அடைத்து வைக்கப்பட்டுள்ள பலஸ்தீனியர்கள் 104 பேரை ஏப்ரல் 29 ஆம் திகதிக்குள் படிப்படியாக விடுவிக்க இஸ்ரேல் ஒப்புக்கொண் டது.

அதன்படி சிறையில் இருந்து பலஸ்தீனியர்களை விடுவித்து வந்த இஸ்ரேல் அரசு, எஞ்சியுள்ள 26 பேரை விடுவிக்க திடீரென்று மறுத்துவிட்டது.

இதனால் அதிருப்தியடைந்த பலஸ்தீன அதிபர் முகமது அப்பாஸ், ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளில் உறுப்பினராகும் முயற்சியை மீண்டும் தொடங்கியுள்ளார்.

அதற்கான படிவங்களில் கடந்த செவ்வாய்க்கிழமை கையெழுத்திட்ட பிறகு ரமளாவில் இருந்து தொலைக்காட்சி வாயிலாகப் பேட்டியளித்த முகமது அப்பாஸ், பலஸ்தீனத்தின் இந்தச் செயல், அமெரிக்காவின் முயற்சிக்கு எதிரானது அல்ல. பேச்சின்போது ஒப்புக் கொண்டபடி 9 மாதங்களாக உறுப்பினராகும் முயற்சியை நிறுத்தி வைத்திருந்தோம்" என்றார்.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள ஜோன் கெரி, இரு நாடுகளிடமும் தொடர்ந்து அமைதிப் பேச்சு நடத்தி வருகிறோம். இந்த விவகாரத்தில் இரு நாடுகளும் அவசரம் காட்டக் கூடாது" என்று கேட்டுக்கொண்டார். (த)

## விமானத்துக்குள் நடந்ததை கண்டறிவது நிச்சயமில்லை

### ஆஸி. பிரதமர் கைவிரிப்பு

பேர்த்,ஏப் 4

நான்கு வாரங்களுக்கு முன்னர் காணாமல்போன விமானத்துக்கு என்ன ஆனது என்பதைக் கண்டறியும் பணியை தமது நாடு கைவிடப்போவதில்லையென மலேசியாவின் பிரதமர் நஜீப் ரசாக் தெரிவித்துள்ளார். ஆஸ்திரேலியாவின் பேர்த் இராணுவத் தளத்துக்குச் சென்றிருந்த சந்தர்ப்பத்திலேயே நஜீப் ரசாக் இவ்வாறு கூறினார்.

பேர்த் இராணுவ தளத்திலிருந்து தான் விமானத்தைத் தேடும் பணிகள் ஒருங் கிணைக்கப்படுகின்றன. இதேவேளை, காணாமல் போன விமானத்துக்குள்ளே என்ன நடந்தது என்பதை கண்டறிய முடியுமா என்பதில் விசாரணையாளர்கள் நிச்சயமற்ற நிலையிலேயே இருப்பதாக ஆஸ்திரேலியப் பிரதமர் டோனி அபாட் கூறியுள்ளார். மலேசியப் பிரதமர் நஜீபுடன் டோனி அபாட்டும் பேர்த் இராணுவத் தளத்துக்குச் சென்றிருந்தார். தொடர்ந்தும் இந்தத் தேடுதல் பணியைத் தொடர்ந்து கொண்டிருக்கமுடியாது என்ற கருத் துப்படவும் ஆஸ்திரேலியப் பிரதமர் பேசியுள்ளார்.

காணாமல்போன விமானத்தின் எந்தவொரு சிதைந்த பாகமும் இதுவரை கண்டுபிடிக்கப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## விஞ்ஞான சங்க போட்டிகளின் பரிசளிப்பு இன்று

யாழ்ப்பாணம், ஏப்.4
யாழ். விஞ்ஞான சங்கம் நடத்திய வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான விஞ்ஞானப் போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றியீட்டிய வர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு-
யாழ்.பல்கலைக்கழக இயற்கை விஞ்ஞான கட்டடத் தொகுதியில் 1B நடைபெறும்.
பரிசில் பெறும் மாணவர்களின் விவரங்கள் பாடசாலைகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் பரிசு பெறும் மாணவர்கள் நிகழ்வில் கலந்துகொள்ளு மாறும் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (ஓ)

## விளையாட்டு விழா

தென்மராட்சி.ஏப்.4
சாவகச்சேரி அமெரிக்க-இலங்கை மிஷன் தேவாலய புனித தோமஸ் முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும்.
விழாவுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலனும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய ஆரம்பப் பிரிவு முதன்மை ஆசிரியர் அ.மனோரஞ்சிதனும் கலந்து கொள்வர். (ஓ-9)

## பழைய மாணவர் சங்கக் கூட்டம்

வரணி மத்திய கல்லூரியின் பழையமாணவர் சங்கப் பொதுக் கூட்டம் நாளை சனிக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்லூரி அதிபர் க.மங்களேஸ் வரன் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறும். இந்தக் கூட்டத்தில் கல்லூரியின் அபிவிருத்தி தொடர்பாகப் பல விடயங்கள் கலந்துரையாடப்படவுள் ளதால் பழைய மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (க-122)

# உயிர் நலத்துக்கு வழிபாடு தேவை

மனிதனின் உடல் ஆரோக்கியத்துக்கு ஓய்வு தேவை. அதுபோல் உயிர் நலத்துக்கு வழிபாடு மிகவும் தேவை. தண்ணீர் எமது தாகத்தைத் தணித்து நம் உடலுக்கு நன்மைகள் புரிகின்றது. அது போல வழிபாடு நமது ஆன்ம தாகத்தைத் தணித்து, எமது உயிருக்கு நன்மைகள் பல விளைவிக்கின்றது.
ஆரோக்கியமான சுவாசிப்பு தடைப்படுமானால் நாம் திக்குமுக்காடித் திணறிப் போவோம். அவ்வாறே வழிபாடு என்பதனை நாம் எமது வாழ்க்கையில் கடைப்பிடிக்கத் தவறினால் நமக்கு வாழ்க்கையில் இடையறாத பல அல்லல்களும் தொல்லைகளும் கவலைகளும் நேர்ந்து கொண்டேயிருக்கும்.

ஞானக்கதிர்

இவ்வுலகில் கவலைகள் இன்றி வாழ்வதற்கே கடவுளை நாடும் படி எம் முன்னோர் கோயில்களைக் கட்டி வளர்த்தனர். ஆலயம் ஆத்மா வயப்படும் இடம். இன்று எம்மவர்கள் கோயில் வழிபாட்டுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் தன்மை குறைந்து கொண்டு போகிறது.
பல ஆலயங்கள் எமது நாட்டில் கோடிக்கணக்கான செலவில் புனர்நிர்மாணம் செய்யப்பெற்று கும்பாபிஷேகங்கள் நடைபெற்ற வண்ணமாகவுள்ளன. ஆனால் நாளாந்த வழிபாட்டில் பங்குபற்றி நலம்பெறும் அடியவர்கள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றனர்.

நன்றி-அருள்ஒளி

## பரீட்சை நிலைய இடமாற்றம்

யாழ்ப்பாணம்,ஏப்.4
இலங்கைத் திறந்த பல்கலைக் கழக யாழ். பிராந்திய நிலையத்தினால் நடத்தப்படும் அடிப்படைச் சிங்கள, அடிப் படைத் தமிழ் சான்றிதழ் கற்கை நெறி 2014/2015 கல்வியாண்டிற்காக தரப் படுத்தல் பரீட்சை மற்றும் முகாமைத்துவப் பட்டக் கற்கை நெறி 2014/2015 கல்வியாண்டுக்கான தேர்வுப் பரீட்சை ஆகியன நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக் கிழமையும் மு.ப.10 தொடக்கம் 12 மணி வரை யாழ். பல்கலைக்கழக பரீட்சைகளை மண்டபங்களில் நடைபெறும்.
இந்தப் பரீட்சைகளை இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் நடத்த திட்டமிட்டிருந்த போதிலும், தவிர்க்க முடியாத காரணத்தினால் யாழ். பல்கலைக் கழகத்தில் நடத்தப்படவுள்ளன. இதே வேளை கிளிநொச்சி கற்கை நிலையத்துக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளுக்கு சென்.தெரேசா மகளிர் கல்லூரியில் மேற்படி பரீட்சை கள் நடைபெறவுள்ளன எனவும் யாழ். பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவி த்துள்ளார். (ஓ)



கொக்குவில் நாச்சிமார் ஆலய கொடியேற்றத் திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதன்போது பெருந்திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர். (வ-7)

## நல்லூர் பிரதேச சபை பிரிவுக்குள் நிலசக்தி வேலைத் திட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.4
நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளில் காணி உரித்து நிர்ணய வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு (பிம்சவிய) வருகின்றது. இந்த வேலைத் திட்டம் தொடர்பில் காணி உரித்து நிர்ணய திணைக்களத்தின் ஆணையாளர் தெரிவிப்பதாவது:
இந்த வேலைத் திட்டத்துக்கு முன்னோடியாக கிராம அலுவலர்களிடம் பிம்சவிய விண்ணப் படிவத்தினைப் பெற்று பூர்த்தி செய்தல் வேண்டும். குறித்த காணித்துண்டின் உறுதி அல்லது அனுமதிப் பத்திரத்தின் புகைப் படப் பிரதி, காணி உரிமை யாளரின் தேசிய அடையாள அட்டையின் புகைப்படப் பிரதி, வரி மதிப்பீட்டுப் பற்றுச் சீட்டு, நில அளவைப் படம் போன்றவற்றை இணைத்துக் கொடுப்பதோடு எல்லைகளை நிர்ணயம் செய்யும் பொருட்டு வீடுகளுக்கு வரும் நில அளவையாளர்களுக்கும், காணி உரித்து நிர்ணய விசாரணை உத்தியோகத்தர்களுக்கும் ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்டுக் கொள்வதாகத் தெரிவித்தார். (க)

## நியமனங்கள்

வடமராட்சி, ஏப்.4
பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் புதிய அதிபராக வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி தேவதயாளினி தேவராஜா நியமிக்கப்பட்டுள்ளார். இவர் தனது பதவியை இன்று வெள்ளிக்கிழமை பொறுப்பேற்றுக் கொள் வார்.
முன்னர் அதிபராக கடமையாற்றிய திருமதி செல்வமலர் சுந்தரேஸ்வரன் சேவையில் இருந்து ஓய்வு பெற்றதை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு இவர் நியமிக்கப்பட்டுள்ளார். (க-173)

★ ★ ★

வடமராட்சி, ஏப்.4
வடமராட்சி மருதங்கேணி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குநர் சபைச் செயலாளராக, இயக்குநர் சபை உறுப்பினர் ரி.காண்டீபன் தெரிவு செய்யப்பட்டு நியமிக்கப்பட்டுள்ளார்.
சங்க இயக்குநர் சபையின் முதலாவது கூட்டம் அதன் தலைவர் வே.தங்கவேல் தலைமையில் நடைபெற்ற போது இந்தத் தெரிவு இடம் பெற்றது. (ஓ-173)

★ ★ ★

தென்மராட்சி, ஏப்.4
தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த விடத்தற்பளை கமலாசனி வித்தியாலய அதிபராக இரத்தினம் நாகேந்திரன் மாகாண கல்வி அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்டுள்ளார்.
குறித்த வித்தியாலய அதிபராக கடமையாற்றிய வி.கணபதிப்பிள்ளை மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலய அதிபராக நியமிக்கப்பட்டதை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு கமலாசனி வித்தியாலயத்தில் கடமையாற்றிய இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்த இ.நாகேந்திரன் நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# இணுவில் பொதுநூலகத்தால் நடத்தப்பட்ட பொதுஅறிவுப் போட்டியில் வெற்றி பெற்றோர்

இணுவில் பொது நூலகத்தால் அதன் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட பொது அறிவுப் போட்டி முடிவுகள் வருமாறு:-

**ஆரம்பப் பிரிவு**
1 ஆம் இடம் - பரமானந்தன் தனு ராஜ் - யாழ்.இந்துக் கல்லூரி, கேதிஸ்வரன் ஶ்ரீநாரயினி - வேம்படி மகளிர் கல்லூரி
2 ஆம் இடம் - கனகலிங்கம் கனேக்ஷ் - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி
3 ஆம் இடம் - தன வீரசிங்கம் கவிதரம் - யாழ். இந்துக் கல்லூரி
4 ஆம் இடம் - பாஸ்கரன் நதீசன் - யாழ். இந்துக் கல்லூரி, சதீஸ்குமார் சாயீசன் - யாழ். இந்துக் கல்லூரி, துஸ்யந்தன் அபிராம் - யாழ்.இந்துக் கல் லூரி, ரமனிதரமனு கீதசர்மா - கே.ரி.சி. கல்வி நிலையம், கருணாகரன் திவாசன் - யாழ்.இந்துக் கல்லூரி, எஸ்.கய விழி - வேம்படி மகளிர் கல் லூரி.

**கீழ்ப் பிரிவு**
1ஆம் இடம் - நடேசமூர்த்தி சிவமைந்தன் - யாழ்.இந்துக் கல்லூரி.
2 ஆம் இடம் - சாந்தகுமாரன் டினுசாந் - யாழ்.இந்துக் கல் லூரி.
3 ஆம் இடம் - ஜெயக்குமார் அபில்ராஜ் - யாழ்.இந்துக் கல் லூரி.
4 ஆம் இடம் - கணேசலிங்கம் திவ்வியா - வேம்படி மகளிர் கல் லூரி, சுரேந்திரகுமார் மாதங்கி - வேம்படி மகளிர் கல்லூரி, க.தேனுகா - அராலி சரஸ்வதி ம.வி.
5 ஆம் இடம் - ஜெயந்திரன் ரிதுர்ஷிகா - கொக்குவில் இந் துக் கல்லூரி.
6 ஆம் இடம் - வீரராகவன் ஆர்த் திகா - கலைவாணி கல்வி நிலையம், க.வித்தகன் - தெல் லிப்பழை மகாஜனக் கல்லூரி.

**மத்திய பிரிவு**
1 ஆம் இடம் - கேதீஸ்வரன் யதுசனன் - யாழ்.இந்துக் கல்லூரி, வேல்நிதி தவீஷன் - யாழ்.இந்துக் கல்லூரி.
2 ஆம் இடம் - சுந்தரலிங்கம் திவாகரன் - யாழ். இந்துக் கல்லூரி, தர்மதாசன் கிரிதாஸ் - யாழ்.இந்துக் கல்லூரி.
3 ஆம் இடம் - பஞ்சமூர்த்தி சாருஜன் - யாழ். இந்து மகளிர் கல்லூரி, இளங்கோ இளங்கீதன் - யாழ்.இந்துக் கல்லூரி.
4 ஆம் இடம் - கதிர்காமநாதன் மதுரதி - கலைவாணி கல்வி நிலையம்.
5 ஆம் இடம் - எஸ்.சங்கீர்தா - ஏ.ரி.சி. கல்வி நிலையம், கொ.நிதுர்ஜினி - ஏ.ரி.சி. கல்வி நிலையம்

**மேற்பிரிவு**
1 ஆம் இடம் - இரத்தினசிங்கம் சுலனியா - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.
2 ஆம் இடம் - கனகசூரியர் சிவகாயத் திரிநாயகி - தெல்லிப் பழை மகாஜனக் கல்லூரி.
3 ஆம் இடம் - ஜீவானந்தன் அபிராமி - யாழ்.இந்து மகளிர் கல்லூரி, க.கீர்த்திகா - வேம் படி மகளிர் கல்லூரி.
4 ஆம் இடம் - ஜெயரூபன் மது ராங்கி - கொக்குவில் இந்துக் கல்லூரி, சிவகடாச்சம் துஜிபா - இராமநாதன் கல்லூரி.
5 ஆம் இடம் - தனபாலசிங்கம் கேதினி - சண்டிலிப்பாய் இந் துக் கல்லூரி, கந்தசாமி சுஜேனி - தெல்லிப்பழை மகாஜனக் கல் லூரி, சிவனேஸ்வரன் அபிராமி - இராமநாதன் கல்லூரி, விக்கினேஸ்வரன் லக்ஷியா - இராமநாதன் கல்லூரி. (வ)




### விற்பனையாளர் தேவை

யாழ்நகரில் இயங்கும் பிரபல
**புடைவை** விற்பனை நிலையத்துக்கு புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ள மற்றும் பழகவிரும்பும் ஆண்/பெண் விற்பனையாளர்கள் உடன் தேவை.
(யாழ்குடாநாட்டைச் சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது) கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
தொடர்பு: 077 555 6904
(சி.13154) (45.3.6)

### 12.04.2014 முதல் ஆரம்பமாகின்றது

நில அளவைக் கள உதவியாளர் தரம் III கமநல சேவைகள் எழுதுநர் சேவை IIIஆம் வகுப்பிற்கு
நியமனம் செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கான தயார்படுத்தல் வகுப்புகள்
**சித்திரை 12 ஆம் திகதி முதல் பிரதி சனி, ஞாயிறு** தினங்களில்
**பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.**
SPADS
தொழில்முறை மற்றும் பட்டப்படிப்பகம்
SCHOOL OF PROFFESSIONAL AND DEGREE STUDIES [Pvt] Ltd
Bharathiar University (India)
தொடர்புகளுக்கு: இல. 65, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 077 177 7061, 021 221 9793
(43605) (7.6.3)

## உற்பத்தி உபகரணங்கள் கையளிப்பு

வவுனியா, ஏப். 4
வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்டத்தில் பயிற்றப்பட்ட பயனாளிகளுக்கான பனை சார் உற்பத்தி உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை நடைபெற்றது. வவுனியா மாவட்டச் செயலகத்தில் அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திர தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துகொண்டார். இதன்போது மதியாமடுவைச் சேர்ந்த 8 பேருக்கும், புளியங்குளத்தைச் சேர்ந்த 6 பேருக்கும், வவுனியா நகரத்தைச் சேர்ந்த 4 பேருக்கும், இலுப்பலாவைச் சேர்ந்த 7 பேருக்கும் உற்பத்தி உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ஐ-402-421)

## பட்டப் பகலில் வீடு உடைத்து திருட்டு

கிளிநொச்சி ஜெயந்திநகர் பகுதியில் பட்டப் பகலில் வீட்டின் கதவுகள் உடைக்கப் பட்டு பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
கடந்த செவ்வாய்க்கிழமை குறித்த வீட்டார் யாழ்ப்பாணம் சென்ற நிலையில் பகல் வேளையில் கதவை உடைத்து திருடர்கள் உட்புகுந்துள்ளனர். இதன்போது 50 ஆயிரம் ரூபா ரொக்கப்பணம், 10 பவுண் தங்க நகைகள், வீட் டுப் பாவனைப் பொருள்கள் என்பன களவாடப்பட்டுள்ளதாக வீட்டு உரிமையாளரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றன. (ஐ-426)

## தமிழ் மொழித்தினம் இன்று பூநகரியில்

கிளிநொச்சி, பூநகரிக் கோட்ட தமிழ் மொழித் தினவிழா இன்று வெள்ளிக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு பூநகரி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.
பூநகரிக் கோட்ட கல்வி அலுவலர் சு. தர்மரத்தினம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ். இதயராஜ் கலந்துகொள்வார். (ஐ-18-55)

## குளம் திறக்கப்பட்டது

வறட்சி காரணமாக, கால்நடைகள் எதிர்கொள்ளும் குடிதண்ணீர் தேவையை பூர்த்திசெய்யும் பொருட்டு முத்துஐயன்கட்டு குளத்து நீர் திறந்து விடப்பட்டுள்ளது. தற்போது நிலவும் கடும் வறட்சி காரணமாக கால்நடைகள் குடி தண்ணீருக்கு அலைந்து திரிகின்றன.
இது குறித்து கால்நடை வளர்ப்பாளர்கள் விடுத்த கோரிக்கையை அடுத்து குளத்து நீர் திறக்கப்பட்டுள்ளது.
ஏற்கெனவே இந்தக் குளத்தின் கீழ் சிறுபோக நெற்செய்கை, உபஉணவுப்பயிர்ச்செய்கைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில் அதற்கான ஏற்பாடுகளையும் விவசாயிகள் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-500)

# வறட்சியை எதிர்கொள்ள உரிய மாற்று ஏற்பாடுகள்

### கிளிநொச்சி அரச செயலக கூட்டத்தில் தீர்மானம்

கிளிநொச்சி, ஏப். 4
கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது நிலவும் கடும் வறட்சியால் ஏற்படக் கூடிய குடிதண்ணீர் தட்டுப்பாட்டைப் பூர்த்தி செய்வதற்கு அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சி அரச செயலகம் அறிவித்துள்ளது.
இது தொடர்பான கூட்டம் கடந்த புதன்கிழமை அரச செயலகத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தின்போது வறட்சியை எதிர்கொள்வது தொடர்பான தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. குறிப்பாக நிலத்தடி நீரைப் பயன்படுத்தி குடிதண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்தல், குடிதண்ணீர் தட்டுப்பாடு ஏற்படும் பிரதேசங்களை அடையாளப்படுத்தி அந்தந்தப் பிரதேசங்களுக்குத் தேவையான குடிதண்ணீரை விநியோகித்தல் போன்ற முக்கிய விடயங்கள் ஆராயப்பட்டன.
கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக ரீதியாக இந்த விடயங்கள் ஆராயப்பட்டன.
இதன்போது வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான் குளம், அக்கராயன், அறிவியல் நகர், கண்ணகைபுரம், பூநகரி பிரதேசம் முழுவதும், கண்டாவளை, தட்டுவன் கொட்டி, உமையாள்புரம், கல்லாறு, பரந்தன், குமரபுரம், பளைப் பிரதேசத்தில் முகமாலை, இத்தாவில், அறத்தி நகர், புளோப்பளை போன்ற கிராமங்கள் குடிதண்ணீர் நெருக்கடியை எதிர்கொண்டு வருவதாகச் சுட்டிக்காட்டப்பட்டது. இவ்வாறு குடிதண்ணீர் நெருக்கடிகளை எதிர்கொள்ளும் கிராமங்களுக்கு பிரதேச சபைகள், நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபை மற்றும் மாவட்ட இடர்முகாமைத்துவப் பிரிவு என்பவற்றை ஒருங்கமைத்துக் குடிதண்ணீர் வழங்குதற்கு ஏற்பாடு செய்வதெனவும் முடிவெடுக்கப்பட்டது.
இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர், நான்கு பிரதேச செயலங்களினதும் செயலர்கள், பிரதேச சபைகளின் செயலாளர்கள் நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபையினர் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ஐ-18-55)

## டெங்கு ஒழிப்பு

### வவுனியாவில்

வவுனியா, ஏப். 4
வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் டெங்கு ஒழிப்பு வாரம் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. சுகாதார வைத்திய அதிகாரி எஸ். லவன் தலைமையில் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் சுகாதார ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டு டெங்கு நுளம்பு பரவும் இடங்களில் துப்புரவுப் பணிகளில் ஈடு பட்டனர்.
தொடர்ச்சியாக பிரதேச ரீதியாக டெங்கு ஒழிப்பு வாரம் கடைப்பிடிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-421)

# முக்கிய இடங்களில் மீண்டும் ராணுவ சோதனைச் சாவடிகள்

### கிளிநொச்சியில் பரவலாக அமைக்கப்படுவதாகக் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, ஏப். 4
கிளிநொச்சி நகர் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் அகற்றப்பட்டிருந்த இராணுவ காவல் அரண்கள் தற்போது மீண்டும் அமைக்கப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.
கடந்த மாதத்தில் இருந்து இராணுவத்தினரும் பொலிஸாரும் திடீர் சுற்றி வளைப்புத் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் நிலையில் தற்போது வீதிகளின் முக்கியமான இடங்களில் இராணுவ காவலரண்கள் அமைக்கப்படுவதை அவதானிக்க முடிகிறது.
அண்மையிலேயே குறித்த இடங்களில் காவல் அரண்கள் அகற்றப்பட்டு அப்பகுதிகளில் மக்கள் மீளக்குடியமரவும் அனுமதிக்கப்பட்டனர். இந்த நிலையில் மீண்டும் முக்கிய சந்திகளிலும், வீதிகளிலும் இராணுவக் காவலரண் அமைக்கப்பட்டு சோதனை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதால் மக்கள் அச்சமடைந்துள்ளனர். இதே வேளை, வன்னிப் பகுதியில் திடீர் திடீரென கிராமங்களைச் சுற்றி வளைக்கும் இராணுவத்தினரும் பொலிஸாரும் தொடர்ச்சியாக தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-423)

# அபிவிருத்திக்காக அனைவருமே ஒன்றிணைந்து செயற்படவேண்டும்

### வடமாகாண அமைச்சர் டெனீஸ்வரன் கோரிக்கை

முல்லைத்தீவு மாவட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கு அனைவரும் ஒற்றுமையுடன் ஒத்துழைக்க வேண்டும் என வடமாகாண போக்குவரத்து மீன்பிடி அமைச்சர் பா. டெனீஸ்வரன் கோரிக்கை விடுத்தார்.
முல்லைத்தீவு மாவட்ட தனியார் பேருந்துச் சங்கத்தின் நிர்வாகத் தெரிவுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,
முல்லைத்தீவு மாவட்டத்தில் தனியார் பஸ் போக்குவரத்து தொடர்பில் நீண்டகாலமாக முரண்பாடுகள் நிலவி வருகின்றன. குறிப்பாக வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளுக்கான சேவைகளை நடத்துவதில் இந்த முரண்பாடுகள் எழுந்துள்ளன. இவற்றை நாமே தீர்த்துக்கொள்ள வேண்டும். அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டு அனைத்துத் தரப்பினரும் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும்.
தனியார் போக்குவரத்து சங்க பஸ்கள் பாடசாலை மாணவர்களை இலவசமாக ஏற்றிச் செல்வதை இட்டு மகிழ்ச்சி அடைகிறேன். இது போன்று அனைத்து விடயங்களிலும் பொது மனப்பாங்குடன் அனைவரும் செயலாற்ற வேண்டும் - என்றார்.
இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோக ராதலிங்கம், மாகாணசபை உறுப்பினர் அ. ரவிகரன் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ஐ- 402)

## மன்னாரில் இலகு கடன் மூலம் பாதிக்கப்பட்டோருக்கு உதவி

மன்னார், ஏப். 4
போரால் பாதிக்கப்பட்ட கிறிஸ்தவ மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பும் நோக்கில் எக்ளொப் லங்கா நிறுவனம் மன்னாரில் இலகு கடன் மற்றும் வாழ்வாதார உதவிகளை வழங்கியுள்ளது.
இதன்படி நானாட்டான் உதவி அரச அதிபர் பிரிவில் 344 தாய்மார்களுக்கு இலகு கடன் வழங்கப்பட்டுள்ளது.
அத்துடன் மாந்தை மேற்கு பிரதேச செயலகப் பிரிவிலும் இந்த இலகு கடன் திட்டத்தை குறித்த நிறுவனத்தினர் ஆரம்பித்து உள்ளனர்.
குறிப்பாக நானாட்டான் உதவி பிரதேச செயலாளர் பிரிவில் அச்சங்குளம், ஆவணம், தோமஸ்புரி, மாவிலங்கேணி, சூரியக்கட்டைக்காடு, செம்மண்தீவு, முருங்கன் பிட்டி, கொவ்வங்குளம், நானாட்டான் வடக்கு, வங்காலை மேற்கு, இலந்தைகுளம், பரிகாரிகண்டல், மோட்டைகடை, நறுவலிக்குளம் போன்ற கிராம மாதர் சங்க உறுப்பினர்களும், மன்னார் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள நடுக்குடா, துள்ளுக்குடியிருப்பு, வெற்றி நாயகி கிராமம் என்பவற்றைச் சேர்ந்த மாதர் சங்கங்கள் ஊடாகவும் இலகு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.
இந்தக் கடன் திட்டத்தின் மூலம் கிடுகு பின்னுதல், பனம் விதைகளைச் சேகரித்து கிழங்காக்கி விற்றல், முருங்கைக்காய்களை சேகரித்து கொழும்புக்கு அனுப்புதல், குளங்களிலும் கடலிலும் மீன் பிடித்தல், இறால், நண்டு, கணவாய் போன்றவற்றை கொள்வனவு செய்து கொழும்புக்கு அனுப்புதல், கருவாடு பதனிடலும் ஏற்றுமதி செய்தலும், உப உணவு பயிர் செய்கை, ஆடு வளாப்பு, கோழி வளர்ப்பு, பசு மாடு வளர்ப்பு போன்ற வாழ்வாதார தொழில் களில் பயனாளிகள் ஈடுபட்டுள்ளனர். அத்துடன் ஆடை தைத்தல், மதியபோசனம் வழங்கல், சிற்றூண்டி வியாபாரம், உணவுப் பொருள்களை பொதி செய்து விற்றல், சிறுகடை வியாபாரம், மேசன் வேலை, தச்சு வேலை, நடமாடும் மரக்கறி வியாபாரம், மீன் வியாபாரம் போன்ற தொழில்களையும் பயனாளிகள் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. பயனாளிகளது மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு எக்ளொப் ஸ்தாபனம் வலுவூட்டல் பயிற்சிகளை நடத்தி வருகிறது. (ஐ)

# வீதி மின் விளக்குகளுக்கான கட்டணத்தை கரைச்சிப் பிரதேச சபையே செலுத்த வேண்டும்

### மாதாந்தம் மூன்று லட்சம் தேவை; கிளிநொச்சி அரச அதிபர் திட்டவட்டம்

கிளிநொச்சி, ஏப்.4
கிளிநொச்சி ஏ-9 வீதியில் பொருத்தப்பட்டுள்ள மின் விளக்குகளுக்கான மின்கட்டணத்தைக் கரைச்சிப் பிரதேச சபையே செலுத்த வேண்டும். அரச செயலகம் ஊடாக அதனைச் செலுத்துவதற்கு நிதி ஒதுக்கீடுகள் எதுவும் இல்லை. இவ்வாறு தெரிவித்தார் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன்.
ஏ-9 வீதி புனரமைக்கப்பட்டு நகர அழகுபடுத்தலுக்கு ஏற்ப மின்விளக்குகளும் பொருத்தப்பட்டன. குறிப்பாகக் கரடிப்போக்குச் சந்தியில் இருந்து டிப்போ சந்தி வரையான 2 கிலோ மீற்றர் பகுதிக்கு வீதி விளக்குள் பொருத்தப்பட்டன. இவை சில மாதங்களே ஒளிர்ந்த நிலையில் கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் அவற்றுக்கான மின் விநியோகம் நிறுத்தப்பட்டது. மின்சாரக் கட்டணம் செலுத்தப்படாததாலேயே அதற்கான மின்சார விநியோகத்தை தாம் துண்டித்ததாக மின்சார சபை தெரிவித்திருந்தது. அத்துடன் குறித்த மின்விளக்குகளை ஒளிரவிட்டு அவற்றுக்கான மின்சாரக் கட்டணத்தைச் செலுத்துவதற்குக் கரைச்சிப் பிரதேச சபையிடம் போதிய நிதி வசதி இல்லை எனவும் சபை எல்லைக்குள் கிடைக்கும் வருமானம் முழுவதும் கூட இதற்குப் போதாது எனவும் கரைச்சிப் பிரதேச சபையினர் தெரிவித்திருந்தனர். இந்த நிலையில் இன்று வரை மின்விளக்குள் ஒளிராமலேயே உள்ளன.
இதேவேளை, குறித்த பிரச்சினைக்கு தீர்வுகாண்பது குறித்து கரைச்சிப் பிரதேச சபை தீர்மானம் ஒன்றை முன்வைத்தது. இதற்கமைய செலுத்தப்பட வேண்டிய நிலுவை அதிகமாகக் காணப் படுகிறது. அதாவது மாதாந்தம் 3 இலட்சம் ரூபா வரை மின்சாரக் கட்டணம் பதிவாகிறது. பெருமளவு நிலுவைத் தொகையைச் செலுத்த வேண்டியிருப்பதனால் சபையில் இருந்து ஒரு தொகைப் பணத்தையும் மாவட்டச் செயலகம் ஊடாக ஒரு தொகைப் பணத்தையும் செலுத்திக் கடந்த ஜனவரி மாதத்தில் இருந்து மின்விளக்குகள் ஒளிரவிடப்படும் என கரைச்சிப் பிரதேச சபைத் தலைவர் தெரிவித்திருந்தார்.
இவ்வாறு தெரிவிக்கப்பட்டு மூன்று மாதங்கள் கடந்த நிலையிலும் வீதி விளக்குகள் ஒளிரவில்லை. இது குறித்து கரைச்சிப் பிரதேச சபையினரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது செயலகத்தில் இருந்து நிதி கிடைக்காததால் மின் கட்டணம் செலுத்தப்படவில்லை என தெரிவிக்கப்பட்டது. இந்த விடயம் குறித்து கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரனை தொடர்பு கொண்டு போது, மாவட்ட அரச செயலகம் ஊடாக இவ்வாறான திட்டங்களுக்கு நிதி வழங்க முடியாது.
வேறு உபாயங்களைப் பயன்படுத்தி மின்கட்டணங்களை செலுத்த முயற்சிகளை மேற்கொண்டிருந்தோம் எனினும் அது பயனளிக்கவில்லை. மின் கட்டணத்தை செலுத்துவதற்கான நிதியை வழங்குவதாக மாவட்டச் செயல கம் உறுதியளிக்கவும் இல்லை - என்றார். (ஐ-55)

# அரச சார்பற்ற நிறுவனங்கள் வட்டிக்கு கடன் வழங்கத் தடை

## கிழக்கில் வருகிறது புதிய நடைமுறை

மட்டக்களப்பு.ஏப்.4

மட்டக்களப்பு மாவட்டத்தில் அரச சார்பற்ற நிறுவனங்கள் நிதிகளை வட்டிக்கு வழங்கும் பணிகளை மேற்கொள்வதை இடைநிறுத்துமாறு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

கிராமிய ரீதியில் அரசசார்பற்ற நிறுவனங்களால் அனுமதியின்றி வட்டிக்கு வழங்கப்பட்டுள்ள கடன்களையும் மீளப் பெறுவதையும் இடைநிறுத்துமாறும் பணிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற விசேட கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட மக்களை வறுமை நிலைக்கு கொண்டு செல்வதில் சில நிறுவனங்களின் செயற்பாடுகளும் முக்கிய காரணமாக அமைவதாக தெரிவிக்கப்பட்டதையடுத்து. மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற நுண்கடன் வழங்கும் நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பான விசேட கலந்துரையாடலிலேயே இந்த உத்தரவு வழங்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

மத்திய வங்கியின் ஒழுங்கு விதிகளுக்கமைவாக மாத்திரமே கடன்கள் வழங்க முடியும். கடன்கள் வழங்குவதில் விதிக் கப்படும் நிபந்தனைகள் குறைக் கப்பட வேண்டும்.

மாதாந்தம் பிரதேச செயலகங்களில் நடைபெறும் கூட்டங்களிலும் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களிலும் நிதி வழங்கும் நிறுவனங்கள் கட்டாயமாகக் கலந்து கொள்ள வேண்டும்.

மட்டக்களப்பில் வறுமை நிலையிலுள்ள மக்களை மேலும் வறியவர்களாக ஆக்கி உயிரை மாய்க்கும் அளவுக்கு பெரும் பிரச்சினைகளை ஏற்படுத்துபவை நிதி நிறுவனங்களே. இவ்வாறான பாதிப்புக்கள் ஏற்படாத வகையில் புதிய விதிகள் உருவாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளின் அடிப்படையில் புதிய விதிகள் மட்டக்களப்பு அரச அதிபரால் அறிவிக்கப்பட்டன.

அவற்றைக் கடைப்பிடிக்க முடியாதவர்கள் மாவட்டத்தில் இயங்க முடியாது. மீறுபவர்களுக்கு எதிராக பொலிஸார் நடவடிக்கை எடுக்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## பொதுச்சந்தை கட்டடம் மக்களின் பாவனைக்கு

அம்பாறை,ஏப்.4

கல்முனை மாநகர சபைக்குச் சொந்தமான நற்பிட்டிமுனை பொதுச் சந்தைக் கட்டடம் நேற்று முன்தினம் புதன்கிழமை கல்முனை மாநகர முதல்வர் எம்.நிசாம் காரியப்பரால் பொது மக்களை பாவனைக்குக் கையளிக்கப்பட்டுள்ளது.

'நெக்டெப்' திட்டத்தின் கீழ் கடந்த 2009 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட இந்த பொதுச் சந்தை 2010.04.04 ஆம் திகதி அமைச்சர் ரவூப் ஹக்கீமால் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

எனினும் இந்த பொதுச் சந்தை கட்டடத் தொகுதியில் பல குறைபாடுகள் இருப்பதை வர்த்தகர்கள் சுட்டிக்காட்டியதை அடுத்து அவை நிவர்த்தி செய்யப்படும் வரை இதனை மக்கள் பாவனைக்கு விடுவதில் இழுபறி நிலை காணப்பட்டு வந்தது.

இந்நிலையில் நிசாம் காரியப்பர் முதல்வராகப் பதவியேற்றதைத் தொடர்ந்து இந்தக் கட்டடத் தொகுதியில் காணப்பட்ட குறைபாடுகளையும் வியாபாரிகளின் பிரச்சினைகளையும் நிவர்த்தி செய்வதற்குத் துரித நடவடிக்கை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## கிழக்குப் பல்கலையில் உயர் கல்வி அமைச்சர்

மட்டக்களப்பு.ஏப்.4

உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க இன்று வெள்ளிக்கிழமை கிழக்குப் பல்கலைக் கழகத்துக்கு வருகை தரவுள்ளார் என்று பல்கலைக் கழக துணைவேந்தர் கிட்ணன் கோபிந்தராஜா தெரிவித்தார்.



எஸ்.பி. திஸாநாயக்க

கிழக்குப் பல்கலைக் கழகத்தின் வந்தாறுமூலை வளாகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள நூலகக் கட்டடத்தை அவர் திறந்து வைக்கவுள்ளார் என்று துணை வேந்தர் கூறினார்.

பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களையும் அமைச்சர் பார்வையிடவுள்ளார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 18 ஆவது பட்டமளிப்பு விழா நாளை சனிக்கிழமை காலையிலிருந்து மாலை வரை இடம்பெறவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ச)



திருக்கோணேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த தீர்த்தத் திருவிழா நேற்று வியாழக்கிழமை நடைபெற்றபோது பாவநாசம் தீர்த்தக் கரையில் பக்தர்கள் புடைசூழ கோணேஸ்வரர் சமேத மாதுமை அம்பாளுக்கு விசேட பூசைகள் இடம்பெற்றன. (ச-40)

## அறிவித்தல்

**நல்லூர் பிரதேச சபை, நல்லூர் உப அலுவலகம்**

## ஆதனப் பெயர்மாற்றம்

**1194, பருத்தித்துறை வீதி, வட்டாரம் - 02**

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட நல்லூர் உப அலுவலக வட்டாரம் -02 பருத்தித்துறை வீதியிலுள்ள இல.1194 எனும் ஆதனம் எமது பதிவேட்டில் சதாசிவஐயரும் பங்காளர்களும் எனும் பெயரில் காணப்படுகின்றது.

சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமான கனகரத்தினம் கேசவன் என்பவரால் வரையப்பட்ட 12962/27.11.2011 ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் கிழவன்வளவு நிலப்பரப்பு 01 குளி 02.37 அளவுடைய இவ் ஆதனம் சுப்பையாக் குருக்கள் பாலசுப்பிரமணியஐயர் என்பவர் தனது சீவிய உரித்துக்கு அமைவாக பாலசுப்பிரமணிய ஐயர் முரளிதரசர்மா என்பவரிற்கு வழங்கியுள்ளார். பின்பு சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும் சத்தியப்பிரமாண ஆணையாளருமான மேனகா கேசவன் என்பவரால் வரையப்பட்ட 416/13.11.2013 ஆம் இலக்க சீதன உறுதி மூலம் குறித்த ஆதனமானது சுப்பையாக் குருக்கள் பாலசுப்பிரமணியஐயர், பாலசுப்பிரமணியஐயர் முரளிதர சர்மா ஆகியோரிடமிருந்து கேதீஸ்வரகௌரிபாலன் பிரணவநாதன் பெண் கிருஸ்ணப்பிரியா என்பவரை வந்தடைந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச சபையின் ஆதனப்பதிவேட்டில் குறித்த ஆதனத்தினை தனது பெயரிற்கு மாற்றம் செய்து தருமாறு பிரணவநாதன் பெண் கிருஸ்ணப்பிரியா என்பவர் விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய **ஆவணங்களுடன் 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது பிரணவநாதன் பெண் கிருஸ்ணப்பிரியா என்பவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் நல்லூர் பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ப.வசந்தகுமார்
தலைவர்,
நல்லூர் பிரதேச சபை.

04.04.2014 (45870) (45.6.3)

## நாசகாரக் கும்பலால் வீடுகளுக்கு தீ வைப்பு



ஐயங்கேணியில் எரிக்கப்பட்ட வீடுகள்

ஏறாவூர்.ஏப்.4

ஏறாவூர், ஐயங்கேணியில் வறிய குடும்பங்களின் குடிசைகள் செவ்வாய்க்கிழமை நாசகாரக் கும்பல் ஒன்றினால் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் குறித்து ஏறாவூர்ப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஏறாவூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த ஒரு வார காலத்தில் இவ்வாறு ஏழு குடிசைகள் நாச காரக் கும்பல்களால் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளன என்று மக்கள் தெரிவித்தனர். (ச)


## வீடு வாடகைக்கு

டிப்போச் சந்தியில் இருந்து இரத்தினபுரம் மெயின் வீதியில் இரண்டு அறைகளுடன் பெரிய கல்வீடு, வற்றாத கிணற்றுடன் வாடகைக்குண்டு. (46152) (12.3)

மாதம் 15000/= முற்பணம் ஒருலட்சம்.

தொடர்பு: 078 362 1172/072 545 3865



## சமூக விஞ்ஞானப் போட்டியில் அகில இலங்கை ரீதியில் சாதனையாளர்




யா/கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலையில்
தரம் 9 இல் கல்வி பயிலும்
**செல்வன் கலியுகராசா மதுசன்**
அவர்கள் 2012 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட
சமூக விஞ்ஞானப் போட்டியில்
அகில இலங்கை ரீதியில் 3 ஆம் இடத்தையும்
2013 இல் 9 ஆம் இடத்தையும்
பெற்று தொடர்ந்து சாதனை படைத்து வருகின்றார்.
இவர் மேலும் பல சாதனைகளைப் படைக்க
வாழ்த்துகின்றோம்.

**பாடசாலைச் சமூகம், யா/ கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை.**



## ஐம்பத்தைந்து வயதில் 29 வருட அரச ஆசிரிய சேவை நிறைவில்

**வேலாயுதம் கருணாகரன்**
(BA(Hons)Dip.in.Ed)




அரச ஆசிரிய சேவை விவரம்
16.04.1985 - 31.03.1989
கஞ/மாளிகாகேன முஸ்லிம் மகா வித்தியாலயம்
01.04.1989 - 09.10.2012
யா/கனகரட்ணம் மகா வித்தியாலயம்
10.10.2012 - 03.04.2014
யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி

அரச பணிக்கு அகவை நிறைவுதரும் ஆசிரியப்
பணியோ ஆயுள்வரை தொடரும்!
நாடறிந்த பொருளியலாளன் நாளும் ஏடெடுத்து
பாடுபட்டு மாணவர்க்காய் பல நூல்கள் தந்தோன்!
காசுக்கு விலைபோகாக் கல்வியாளனாய்
பேசும் பெருமை கொண்ட ஆசிரியப் பெருந்தகையாய்!
நேசமுடன் பழகுவதில் நிகரில்லா பண்பாளனாய்,
தேசம் போற்றும் அறிவுத்
தேடல்மிக்க புதையலாய் விளங்கும்
வீசுபுகழ் கருணாகரன் என்னும்
வித்தகனே! பல்லாண்டு வாழி வாழி!

பாடசாலைச் சமூகம்
யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி



சீன விஞ்ஞான கல்வி அக்கடமியின் தலைவர் பாய் சுன்லி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்து கலந்துரையாடினார்.

# பயங்கரவாதிகளுக்கு சொந்தமான சொத்தை அரசுடைமையாக்க முயற்சி

## விசேட அதிகாரம் பாதுகாப்புச் செயலரிடம்

கொழும்பு,ஏப்.4
பயங்கரவாதிகளுக்குச் சொந்தமான சொத்துக்களை அரசுடைமையாக்கும் முயற்சிகளில் அரசு ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
இது தொடர்பான விசேட உத்தரவு விரைவில் பிறப்பிக்கப்படவுள்ளது.
இந்த நடவடிக்கையை ஐக்கிய நாடுகள் அமைப்பின் பாதுகாப்பு சபையின் 1373 பிரகடனத்தின் அடிப்படையில் அரசு எடுக்க உள்ளது.
பயங்கரவாதிகள் மற்றும் பயங்கரவாதத்துடன் தொடர்புடைய அமைப்புக்களுக்குச் சொந்தமான சொத்துக்களை அரசுடைமையாக்கும் விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட உள்ளது.
பயங்கரவாதிகளையும், பயங்கரவாத அமைப்புக்களையும் கண்டறியும் விசேட அதிகாரம் பாதுகாப்புச் செயலர் கோத்தபாயவிடம் வழங்கப்பட்டுள்ளது.
பயங்கரவாத அமைப்புக்களுடன் தொடர்புகளைப் பேணி வரும் அமைப்புக்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறப்படுகிறது. (ச)



கோத்தபாய ராஜபக்ஷ

**பயங்கரவாதிகளையும், பயங்கரவாத அமைப்புக்களையும் கண்டறியும் விசேட அதிகாரம் பாதுகாப்புச் செயலர் கோத்தபாயவிடம் வழங்கப்பட்டுள்ளது.**

# நிதி நிறுவனங்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு

கொழும்பு,ஏப்.4
நிதி நிறுவனங்களுக்கு விசேட பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட உள்ளது. அண்மைக் காலமாக நிதி நிறுவனங்களில் இடம்பெறும் கொள்ளைச் சம்பவங்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளது.
அதன் காரணமாக நிதி நிறுவனங்களின் பாதுகாப்பை உறுதி செய்ய விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
அண்மையில் மத்துகம பிரதேசத்தில் 50 லட்சம் ரூபா பணம் கொள்ளையிடப்பட்டிருந்தது.
இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் ஆறு பேர் கைது செய்யப்பட்டதுடன் அவர்களிடமிருந்து 42 லட்சம் ரூபா பணம் மீட்கப்பட்டிருந்தது.
எதிர்காலத்தில் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களில் கொள்ளைச் சம்பவங்கள் இடம் பெறுவதைத் தடுப்பதற்கு விசேட பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட உள்ளது.
பொலிஸ் உத்தியோகத்தர்கள் நிதி நிறுவனங்களுக்கு அருகில் சிவில் உடையில் கடமையில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.
அதன் மூலம் கொள்ளைச் சம்பவங்களை தடுக்க முடியும் என்று பொலிஸார் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.
அண்மைக் காலங்களில் ஒன்பது நிதி நிறுவனக் கொள்ளைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# மாகாணசபைக்குத் தெரிவானோரின் பெயர்கள் வர்த்தமானியில் வெளியீடு

கொழும்பு,ஏப்.4
மாகாணசபைத் தேர்தலின் ஊடாக தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களின் பெயர்கள் வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளன.
மேல் மற்றும் தென் மாகாண சபைகளின் போனஸ் ஆசனங்களுக்காக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பால் பரிந்துரைக்கப்பட்ட உறுப்பினர்களின் பெயர்களும் வர்த்தமானி மூலம் நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டுள்ளது என்று தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.
அதன் பிரகாரம் மேல் மாகாண சபைக்காக கம்பஹா மாவட்டத்தில் போட்டியிட்ட லலந்த குணசேகர மற்றும் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட நவுசர் பௌசி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**காலி மாவட்டத்தில் போட்டியிட்ட துல்ஷான் காரியவசம் மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் போட்டியிட்ட எஸ்.வீ.ஜீ. பத்திரண ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.**

தென் மாகாண சபையின் போனஸ் ஆசனங்களுக்காக காலி மாவட்டத்தில் போட்டியிட்ட துல்ஷான் காரியவசம் மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் போட்டியிட்ட எஸ்.வீ. ஜீ.பத்திரண ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர். (ச)

## புதிதாக தெரிவான முதலமைச்சர்கள் இன்று காலை சத்தியப்பிரமாணம்

கொழும்பு,ஏப்.4
மேல், தென் மாகாணசபைகளுக்கு புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட முதலமைச்சர்கள் மற்றும் அமைச்சர்கள் இன்று வெள்ளிக்கிழமை காலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்யவுள்ளனர்.
இது தொடர்பான விசேட வைபவம் ஜனாதிபதி செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ச)

# முறைப்பாடு செய்யப்பட்டால் விசாரணைகள் நடத்தப்படும்

## சரத்பொன்சேகா வாக்களித்தமைக்குத் தேர்தல் ஆணையாளர் விளக்கம்

கொழும்பு,ஏப்.4
முறைப்பாடு செய்யப்பட்டால் ஜனநாயகக்கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா தொடர்பில் விசாரணை நடத்தப்படும் என்று தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.
சரத் பொன்சேகா வைக்கோல் பொம்மையாகத்தேர்தல் ஆணையாளரைச் சித்திரித்திருந்தமை மற்றும் அவர் வாக்களிப்பில் பங்கேற்றமை தொடர்பில் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதில் அளித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.
சரத் பொன்சேகா அண்மையில் நடைபெற்று முடிந்த மாகாணசபைத் தேர்தலில் வாக்களித்திருந்தார்.
இவ்வாறு தேர்தலில் வாக்களித்தமை தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டால் தேர்தல் திணைக்களம் அது குறித்து விசாரணை நடத்தும் என்று அவர் கூறினார்.
சிவில் உரிமை மறுக்கப்பட்ட நிலையில் சரத் பொன்சேகா வாக்களிப்பில் பங்கேற்றதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. எனினும், இது குறித்து இதுவரையில் உத்தியோகபூர்வமாக முறைப்பாடுகள் எதுவும் செய்யப்படவில்லை என்று அவர் தெரிவித்தார்.
என்னை எவரேனும் வைக்கோல் பொம்மையாகச் சித்திரித்தால் அதனை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கின்றேன்.
இறந்த பிணமொன்றை விடவும் வைக்கோல் பொம்மைக்கு அதிகாரம் அதிகமாகும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.
அரசியல்வாதிகள் என்ற மிருகங்களிடமிருந்து, மக்கள் என்ற பயிர்களைக் காப்பாற்றும் வைக்கோல் பொம்மையாகச் செயற்படுகின்றேன் என்று அவர் தெரிவித்தார். (ச)



மஹிந்த தேசப்பிரிய

## ஹெரோயின் கொண்டு வந்த பாகிஸ்தானியர் கைது

கொழும்பு,ஏப்.4
சுமார் 25 லட்ச ரூபாவுக்கும் கூடிய பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருளுடன் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து பாகிஸ்தான் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
பாகிஸ்தானின் கராச்சி நகரில் இருந்து வந்த குறித்த நபர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு கைது செய்யப்பட்டார் என்று சுங்கப் பிரிவு ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்தார். கைது செய்யப்பட்ட பாகிஸ் தான் நபரிடம் இருந்து 300 கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது. (ச)

# ஏழாம் ஆண்டு நினைவலைகள்

## நிர்மலன் நிர்மலதாஸ்

அன்னையின் மடியில் 11.03.1977
மரணத்தின் பிடியில் 04.04.2007



மகனாய் வந்துதித்த மாம்பழமே! - எனக்கு
வகையாய் பணிபுரிந்த தேனமுதே!
தொகையாய் உன்நினைவு வாட்டுதிங்கே!
எதற்காய் காலன் உனைப் பறித்தான்?
உனைப்போல் ஒருபிள்ளை - ஊரில்
யாருக்கும் வாய்த்ததில்லை
எனைப்போல் பாவி இங்கு யாரும் இருந்ததில்லை
என்ன சொல்லி ஆறுவேன் - இனி
எவர் சொல்லித் தேறுவேன்?
இறையடிதனில் இருக்கும் - உனை
பூஜித்துக் காத்திருப்பேன்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!




குடும்பத்தினர்.
மல்லாகம்.

(46335)(7.6.3)

# மரண அறிவித்தல்

## ஐயாத்துரை மகாதேவன்

பண்டத்தரிப்பு, காலையடியைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை மகாதேவன் 29.03.2014 சனிக்கிழமை காலமானார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2014) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி கொட்டுப்பனை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.



தகவல்: குடும்பத்தினர்.
முருங்கையப்புலம்,
அளவெட்டி மேற்கு, அளவெட்டி.

(46420) (45.3.9)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தவறு இழைப்போர் திருந்த மனங்கொள்ளின் தவறா...?

ஐக்கிய நாடுகள் சபையின், மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைச் செயலாக்குவதற்கு, இலங்கை அரசாங்கம் தனது ஆக்கபூர்வமான ஒத்துழைப்பை நல்க வேண்டும்.

இவ்வாறு ஊன்றி உரைத்துள்ளார், ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான்கீ-மூன்.

இலங்கையில் இழைக்கப்பட்ட மனிதாபிமான மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு, பொறுப்புக் கூறுவதில் அரசு துரிதமாகச் செயற்பட வேண்டும் என்று ஏற்கெனவே வலியுறுத்தி வந்த போதிலும், நமது நாட்டு அரசு அதில் அக்கறையோ, கரிசனையோ காட்டப்படவில்லை என்பதும் ஐ.நா.பொதுச் செயலாளரின் அறிக்கையில் ஆழமாகத் தொட்டுக் காட்டப்பட்டுள்ளது.

இந்த நாட்டு அரசு பொறுப்புக் கூறுவதிலும், நிரந்தர அமைதியை உண்டாக்குவதிலும் விரைந்து செயற்பட வேண்டும் என்ற உந்துதலுடனும் உறுதியுடனும் மனித உரிமைகள் ஆணையாளர் செயற்படுவது குறித்தும் பான்கீ-மூன் பாராட்டுத் தெரிவித்திருக்கிறார்.

2009 ஆம் ஆண்டில், தாமும் இலங்கை ஜனாதிபதியும் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையில், பொறுப்புக் கூறுதல் குறித்து வலியுறுத்தப்பட்டிருந்தமையையும் ஐ.நா வின் செயலாளர் நாயகம் தமது அறிக்கையில் அழுத்தித் தொட்டுக்காட்டி இருக்கிறார்.

நாட்டில் தேசிய நல்லிணக்கத்தை உருவாக்குவதிலும் - உண்டாக்குவதிலும் - அதில் முன்னேற்றம் காண்பதிலும் - அதன் ஊடாக நாட்டில் ஐக்கியத்தையும் ஒற்றுமையையும் முகிழ்விப்பதிலும் இலங்கை ஜனாதிபதி மிகுந்த ஆர்வம் உள்ளவராகக் காணப்பட்டார் என்றும் பான்கீ-மூன் நினைவூட்டுகிறார்.

இதே வேளை, பிரிட்டன் மற்றும் ஐ.நா. தீர்மானத்தை ஆதரித்த நாடுகள், அதில் தெரிவிக்கப்பட்டுள்ள அம்சங்களை இலங்கை அரசு நிறைவேற்ற வேண்டும் என்பதில் தீவிரமாகவும் திட்டவட்டமாகவும் உள்ளன.

ஆனால், ஐ.நா. பொதுச் செயலாளரின் கருத்தையோ, ஆலோசனையையோ சிறிதளவேனும் உள்வாங்கிக் கொள்ளும் மனநிலை இலங்கை அரசிடம் துளிர்க்கும் அறிகுறிதானும் இல்லை.

அதற்கு மாறாக அரசாங்கம் தனது நிலைப்பாட்டை தீவிரப்படுத் துவதிலேயே அதீத அக்கறையைக் காட்டுகிறது. நாட்டின் சிவில் சமூகத்தினர், கல்விமான்கள் மற்றும் வர்த்தக சமூகத்தினரைக் கூட்டி, ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தை போட்டா போட்டியுடன் எதிர்ப்பதற்கு (To Challenge), சவால் விடுவதற்கு அவர்களைத் தன்னுடன் அணைத்துக் கொண்டுசெயற்படுவதற்கு முனைந்துள்ளது.

மொத்தத்தில் ஜெனிவாத் தீர்மானத்தை, முழு அளவிலான தேசியப் பிரச்சினையாக வளர்ப்பதற்கு அரசு முனைப்புடன் செயற்பட உள்ளது என்பது தெட்டத் தெளிவாகப் புலப்படுகிறது.

ஐ.நா.தீர்மானம் நாட்டின் இறைமைக்குள் அத்துமீறித் தலையிடும் அதிகாரத்தனம் என்ற நிலைப்பாட்டுடன் கருமமாற்ற முனைந்து விட்டது அரசு.

ஆனால் ஜெனிவாத் தீர்மானத்தை முன்னின்று ஆதரித்த பிரிட்டன் மற்றும் 22 நாடுகள் தமது நிலைப்பாடு முற்றிலும் சரியானது என்று தெரிவித்திருக்கின்றன. உரிய வகையில், வழியில் அது செயற்படுத்தப்பட வேண்டும் என்றும் தொடர்ந்தும் குரல் கொடுக்கின்றன.

இலங்கை நாட்டில் நிரந்தரமான அமைதியும், உண்மை யாகவே நல்லிணக்கமும் உண்டானால் மட்டுமே, இங்கு வாழும் அனைத்து மக்களினதும் சட்டபூர்வமான உரிமைகளை அவரவர் அனுபவிக்க இயலும் என்றும் அந்த நாடுகள் தொடர்ந்து கருத்து வெளியிட்டு வருகின்றன - குரல் கொடுத்து வருகின்றன.

இந்த விவகாரத்தில், அனைத்துலக நாடுகளை அரவணைத்துச் செயற்படாவிடில், இலங்கை அரசு பல துறைகளிலும், பல வழிகளாலும் பின்னடைவு காணும் நிலையே மேலெழும்.

தவறு இழைக்கப்பட்டிருப்பின் அதனைச் சீர்செய்யும் பொருட்டு திருந்தக்கூடாது என்ற கோட்பாடு (Theory) சம்பந்தப்பட்டவர்களுக்கு மட்டுமன்றி ஏனையோருக்கும் பாதகம் விளைவிக்கும் என்பதனை மறந்து விடலாமோ..?

# ஜெனிவா கூட்டத் தொடர் கூறும் செய்திகள் என்ன?



புதினப் பலகைக்காக
லோகன் பரமசாமி

மிகப்பெரிய வல்லரசுகள்கூட மென்பல அரசியல் மூலம் பொருளாதார அழுத்தங்களை உருவாக்குவது, சிறிய அரசுகளை அனைத்துலக அரசியலில் தனிமைப்படுத்துவது, அனைத்துலக நிறுவனங்களின் ஒப்பந்தங்கள் மூலம் ஏமாற்றுவது, எனப் பல்வேறு இராஜதந்திர சூழ்ச்சிகளில் ஈடுபட்டுள்ளன.

கடந்த மாதம் இடம் பெற்ற ஜெனிவா ஐக்கிய நாடுகள் மனித உரிமை கூட்டத் தொடரில் அனைத்துலக நகர்வுகளின் மத்தியிலே, குறிப்பாக அமெரிக்க இந்திய அரச நலன்களினதும் இதர எதிர்த் தரப்பு வல்லரசுகளின் நலன்களினதும் அரசியல் மேலாதிக்க போட்டிகளின் மத்தியில் தமிழர்கள் தமக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு நீதி கேட்டு போராடும் நிலை ஒன்று உருவாக்கப்பட்டிருந்தது.

இறுதியில் புலம் பெயர் தமிழர்களையும் ஈழத்தில் வாழும் தமிழர்களையும், இலங்கை அரசிடம் நீதி வேண்டி நிற்க வேண்டிய நிலைக்கு இட்டுச் சென்றது அமெரிக்கா முன்மொழிந்த பிரகடனம். கொடுமைகளுக்கான நீதி என்ற பெயரில் உலகத் தமிழர்கள் அனைவரையும் சிறிய, இலங்கை அரசினால் கொள்ளடக்கப்பட்டு விடுவதற்கான அடிப்படைகள் அந்த வரைவினால் உருவாக்கப்பட்டுள்ளன என்பது சில தமிழ் ஆய்வாளர்களது குறிப்பாகும்.

இந்தக் கூட்டத் தொடரினால் ஏற்பட்ட நன்மைகளின் பக்கம் பார்ப்பதானால் தமிழினத்தின் ஒரு படிக்கல் முயற்சியாகக் கருதப்படும் இன அழிப்பு என்ற பதத்தை நிறுவுவது என்ற முயற்சியில் இந்த கூட்டத்தொடர் சில வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்திருக்கிறது. அத்துடன் அரசுகளின் இராஜதந்திரிகள் மத்தியில் அரசு - அற்ற தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகள் இராஜதந்திர வரைமுறைகளைக் கற்றுக்கொள்ளவும், அரசுகளின் இராஜதந்திர கலாசாரத்தை புரிந்து கொள்ளவும் களம் அமைத்துக் கொடுத்திருக்கிறது.

தமிழர்கள் மீதான கொடுமைகளுக்கான தண்டனையைப் பெற்றுக் கொடுப்பதற்கு அப்பால் தமிழர்கள் தமது சொந்த முயற்சிகளிலே ஒரே நோக்கத் தோடு கடமைகளைப் பகிர்ந்து கொண்டு செயலாற்ற வேண்டுமென் பதையும், இன்னும் நிறுவனமயப் படுத்தப்பட வேண்டிய தேவையையும் இத்தகைய நிகழ்வுகள் உணர்த்தி நிற்கின்றன.

இங்கே அனைத்துலக நாடுகளின் நிலைகள் குறித்தும் உலக ஒழுங்கு மாற்றத்துக்கேற்ப தமிழினத்தின் போராட்டம் புதிய பரிணாமத்தை பெறவேண்டியமை குறித்தும் புரிந்து கொள்வதாக இந்தக் கட்டுரைத்தொடர் அமைந்துள்ளது.

இந்த வகையிலே அனைத்துலக நாடுகளின் போக்குகள் குறித்தும், குறிப்பாக வெளியுறவுக் கொள்கை தொடர்பாக அமெரிக்க அணுகுமுறை, இந்திய அரசியல் மாற்றம் என்பன இனிவரும் காலங்களில் தமிழர் உள்நாட்டிலும் அனைத்துலக மட்டத்திலும் செய்ய வேண்டிய நகர்வுகள் குறித்தும் ஆய்வது சிறந்ததாகத் தெரிகிறது.

ஒவ்வொரு நான்கு வருடமும் 'பென்ரகன்' - அமெரிக்க இராணுவ தலைமையகம் - அமெரிக்கப் பாதுகாப்பு கொள்கையின் மைய அதிகார முன்னேற்றங்கள் குறித்த அறிக்கை ஒன்றை தயாரித்து வெளியிடுவது வழமையாக உள்ளது. 2014ம் ஆண்டு மார்ச் மாதம் வெளிவந்த அறிக்கையில், அவர்களால் 2011 ஆண்டு கொண்டு வரப்பட்ட பாதுகாப்பு நிதி முடக்கத்தின் பிரதிபயன்கள் குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்க பாதுகாப்பு வரவு-செலவு அறிக்கைகள் இரண்டு வகையான செலவினக்குறைப்பு திட்டங்களுக்குள் வரையறை செய்யப்பட்டுள்ளது. முதலாவதாக வரவு - செலவு திட்டத்தினூடான கட்டுப்பாடு. அதாவது 2011ஆம் ஆண்டிலிருந்து அடுத்த பத்தாண்டுகளுக்குள் 487 பில்லியன் டொலர் பணத்தை இராணுவ செலவினத்திலிருந்து மீதப்படுத்திக் கொள்வது. இரண்டாவதாக அமெரிக்க காங்கிரஸின் இரண்டு கட்சிகளும் அமெரிக்கத் தலைவரும் உடன்பாட்டின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்து கொள்ளக்கூடிய அரச செலவினப் பணத்திலிருந்து 50 பில்லியன் அமெரிக்க டொலர்களை வருடா வருடம் மீதப் படுத்திக் கொள்வது.

இவ்வாறு செலவைக் குறைக்கும் திட்டங்களே நான்கு ஆண்டு அறிக்கையில் முதன்மைப்படுத்தப்பட்ட நிலை இருந்தாலும், இதன் பின்விளைவுகள் பெரிய அளவு பூகோள கையாள்கை நிகழ்ச்சிகளை தாக்காத வகையில் இருக்கும் என்பதில் நிச்சயப்படுத்தப்பட்ட தன்மையைக் காணக்கூடியதாக உள்ளது. நேரடி இராணுவ நடவடிக்கைகளுக்கான பரிந்துரைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கத் தயங்கி உள்ள இந்த அறிக்கை, அவ்வப்போது பல்வேறு பிராந்தியங்களிலும் ஒரே நேரத்தில் எழக்கூடிய நடவடிக்கைகளையும் தவிர்த்துக் கொள்ள பரிந்துரை செய்கிறது. பலாத்கார இராணுவ அரசியல் பிரயோகிக்கப்பட வேண்டிய நிலையில், இன்னுமோர் பிராந்தியத்திலும் அத்தகைய நிலையை உருவாக்குவதைத் தவிர்த்து கொள்ளவும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இந்தச் செலவினக்குறைப்பு, ஆளணிக் குறைப்பிலும் பெரும் தாக்கத்தை உருவாக்கி உள்ளது. ஆயிரக்கணக்கான இளைஞர்கள் இராணுவ வேலைவாய்ப்பை இழக்க வேண்டிய நிலை உருவாகி உள்ளது. அமெரிக்கத் தலைமை உள்நாட்டு பொருளாதார வளர்ச்சி யிலேயே தற்பொழுது பெருமளவு தங்கி உள்ளது என்பதை இந்த அறிக்கை மிகத் தெளிவாகக் காட்டி நிற்கின்றது.

அமெரிக்கப் பொருளாதாரம் உலக நாடுகளின் கூட்டுப் பொருளாதார வளர்ச்சியிலேயே பெருமளவில் நம்பிக்கை கொண்டு உள்ளது. உலகில் தொழில்நுட்ப முடிவு, பொருள்களின் தேவை அதிகரிப்பதானது, அமெரிக்க ஏற்றுமதிப் பொருளாதாரத்தை வளர்ச்சி அடையத் தூண்டுவதன் மூலம், அமெரிக்க உள்நாட்டுச் சேமிப்பை அதிகரிக்க வைப்பதற்கு வியாபார ஒப்பந்த முனைப்புகள் நடைபெற்று வருகின்றன. உலக நாடுகளுடன் தன்னை இணைத்துக் கொண்டு கூட்டுப் பொருளாதார வளர்ச்சி மூலம் அமெரிக்க தொழில்நுட்பப் பொருள்களின் தேவையை உலக நாடுகள் மத்தியில் மேலும் உருவாக்குவது என்பது அதன் திட்டமாக இருக்கிறது.

உலக நாடுகளிடையே சமநிலைப்படுத்தப்படக் கூடிய பொருளாதார வளர்ச்சியானது பொருளாதார இடைவெளியை நிரப்புவதாகக் கொள்ளப்படுகிறது. இடைவெளிகளற்ற பொருளாதார சமநிலையும், பொருளாதார ஒப்பந்தங்களூடாக பெறக்கூடிய செல்வாக்கும், குறிப்பிட்ட பிராந்தியங்களில் மேலைத்தேய கோட்பாடுகளை ஏற்றுகொண்டு, உள்ளக அரசியலை வரை முறை செய்து கொள்ளக்கூடிய அரசுகளை இனங்காணக் கூடியதாக இருக்கும். இதன் மூலம் பாதுகாப்பு முன் முயற்சிகளை நகர்த்தவும் பல்துறைசார் பொருளாதார வளர்ச்சியை உயர்த்திக் கொள்ளவுமான முனைப்புகளுக்கு ஏற்கெனவே 2010 பாதுகாப்பு அறிக்கைகளில் பரிந்துரைகள் வகுக்கப்பட்டுள்ளன.

பல்வேறு அமெரிக்க ஆய்வாளர்களின் அறிக்கைகளின் சாராம்சங்களும் இன்று அமெரிக்கா தனது பலத்தையும் செல்வாக்கையும் உத்தரவாதப்படுத்தி கொள்ள வேண்டுமாயின், இன்றைய உலகின் தலைமை வகிக்கும் தன்மையை, புதுப்பித்து கொள்ள வேண்டிய நிலையில் உள்ளது என்று கூறி வருகின்றனர்.

அமெரிக்க தேசிய பாதுகாப்பு என்பது அதன் தனித்துவமான தேசிய தராதரங்களை முன்னகர்த்தக்கூடிய செய்திகளிலேயே தங்கி உள்ளது என்பதையே மையமாகக் கொண்டுள்ளது என்பது அவர்களின் பார்வை.

அனைத்துலக அரசியலில் செயற்றிறன் மிக்க அரசு ஒன்றின் பலத்தைக் காட்டும் முக்கியமான ஒரு தனிமமாக, அந்த அரசின் பலம் காட்டும் வியாபகம் காணப்படுகிறது. அரசுகளின் தரை, கடல், ஆகாய பலத்தின் வியாபகத்தை எடுத்துகாட்டும் இந்த தனிமம், வன்முறைப் பலத்தின் சொத்துகளாகப் பார்க்கப்படுகிறது. பெரிய பீரங்கிகள், காலாட்படைகள்; பல் வகைப்பட்ட ஆகாயப்படை குழுக்கள், கடற்கலன்கள் இவை அனைத்தையும் நகர்த்துவதற்குரிய கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த புவியியல் நிலைகள் என அனைத்துப் பாதுகாப்பு ஆர்ப்பரிப்புத் தன்மையும் அனைத்துலக உறவு அரசியலில் இன்றும் மிகமுக்கியமாக காணப்படுகிறது.


இருந்த போதிலும் வன்முறை பலம் காட்டும் வியாபகத்தின் முக்கியத்துவத்தை தேவைக்குத் தகுந்தாற்போல் முடக்கி வைக்க வேண்டிய நிலைக்கு தற்போதைய உலக ஒழுங்கில் மென்முறை பலம் காட்டும் அரசியலின் வளர்ச்சி, அமெரிக்க உள்நாட்டு பொருளாதார வளர்ச்சியின் முக்கியத்துவத்தில் முன்னுரிமை பெற வைத்துள்ளது.

கடந்த இருபது ஆண்டுகளில் அதாவது தொண்ணூறுகளின் கம்யூனிச வீழ்ச்சியின் பிற்பாடு சுதந்திரமான பண்டங்களின் நகர்வும் மூலதனபரிமாற்றமும் பிராந்தியங்களின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றி உள்ளன. புதிய பிராந்தியங்கள் உலக அரசியலில் புதிய ஒழுங்கை உருவாக்கி உள்ளன.

தனிப்பட்ட நிறுவனங்களும், அரசு சார்பு நிறுவனங்களும் புதிய தொழில் நுட்ப வசதிகளால் புத்துயிர் பெற்று நிற்கின்றன. தகவல் தொடர்பு தொழில் நுட்பம் இதற்கு பல்வேறு வசதிகளை வழங்கியுள்ளது. பிராந்திய அரசுகள் ஒன்றுடன் ஒன்று பொருளாதார நிலையில் தங்கி உள்ள நிலையை எட்டியுள்ளன.

# மீசிறிய நுண் தொழில்நுட்பத்தின் (Nanotechnological) அணுகுமுறையினால் உளநோய் நிலைகளை நுண் விழி நிலையில் (Microconsciousness) குணப்படுத்தல்

மருத்துவர்.சி.யமுனானந்தா




மருத்துவ உலகில் புதிய பரிமாணத்தை மீசிறிய தொழில்நுட்பம் எதிர்காலத்தில் ஏற்படுத்தவுள்ளது. உளநோய் நிலைகளை மூளையில் அடையாளப்படுத்துவதனால் (Topological mapping of mental illness) மீசிறிய நுண் தொழில்நுட்ப அணுகுமுறையில் நிரந்தரமாகவே உளநோய்களைப் பூரணமாகக் குணப்படுத்தக் கூடியதாக அமையும்.

இன்று மூளையின் செயற்பாடுகளை பல நுண் அலகுகளாக வகைப்படுத்தக்கூடியதாக உள்ளது. இது நுண்விழிநிலை என்கின்ற (microconsciousness) செயற்பாட்டு அலகை வரையறுக்கக்கூடியதாக அமைகின்றது. நாள்பட்ட உள நோய்களையும், மிதமான உளநோய்களையும் பூரணமாகக் குணப்படுத்தக்கூடிய சூழலை எதிர்கால விஞ்ஞானிகள் உருவாக்கி விடுவர்.

இது மருத்துவத் துறையில் செங்குத்தான மாற்றங்களை ஏற்படுத்தப் போகின்றது. இதற்கு உளமருத்தவ ஆய்வுகள், நரம்பியல் , உடற்றொழிலியியல் கண்டுபிடிப்புகளும் மீசிறிய நுண் தொழில்நுட்பமும் , வலைப்பின்னல் பொறியியலும், பௌதிகவியல் , இரசாயனவியல் ஆய்வுகளும் துணைபோகும்.

இதனால் பல உளநோய்களைப் பூரணமாகக் குணப்படுத்துவதோடு உளநோய் தொடர்பான சமூக வடுவினையும் இல்லாது செய்யலாம். மருந்துகள் ஏற்படுத்தும் பக்க விளைவுகள் இல்லாது போகும். தொடர்ந்து மருந்து எடுக்கும் தேவை இல்லாது போகும். தொடர்ந்து சிகிச்சைக்குச் செல்லவேண்டிய அவசியம் இல்லாது போகும். தற்போது பயன்பாட்டில் உள்ள இதய வியாதிகள் போன்று மீசிறிய நுண் தொழில்நுட்பம் மூலமான மூளைய வியக்கிகளை (intracerebral nano pacing) மூளையின் நுண்விழிநிலை மாற்றத்துக்கு (microconsciousness) பிரயோகிக்கலாம். இதனால் நரம்பு மின்பாய உடற்றொழியியல் நிபுணத்துவத்தின் மூலம் பல உள நோய்களை இல்லாது செய்துவிடலாம். உளப் பிளவையில் வரும் மாயப் புலன்கள் (Hallucinations) தவறான எண்ணங்கள் (Delusions) எண்ணங்களில் ஏற்படும் மாற்றங்கள் என்பனவற்றை தவிர்த்திடலாம்.மூளையில் Amygdala என்ற பகுதியில் நுண்விழிநிலை மாற்றங்கள் மனச் சோர்வு, பதகளிப்பு, சந்தேகப்படும் உளப்பிளவை நோய் என்பனவற்றை இல்லாது செய்யும்.



மின் வலிப்புச் சிகிச்சை முறை(Electro convulsive therapy) . ஸ்ரொயிட் மருந்துகள் மூலம் நரம்புக் கலங்கள் பாதிக்கப்படுவதைத் தடுப்பதற்காக கண்டறியப்பட்டு உள்ளது. எனவே நுண்விழிநிலையில் மீசிறிய நுண் தொழில்நுட்ப அணுகு முறையிலான மின்வலிப்பு சிகிச்சை முறைகள் ஆக்கபூர்வமானதாக அமையும். மனிதனின் உணர்வுகளின் வெளிப்பாடு மூளையில் Hypothalamus என்ற பகுதியில் உள்ள நரம்புக் கலங்களினால் கட்டுப்படுத்தப்படுகின்றது. எனவே உணர்வு வெளிப்பாடுகளில் நோய் நிலை உடையவர்களுக்கு மீசிறிய நுண் அணுகுமுறையிலான மூளை வியாதிகளை Hypothalamus பகுதியின் நுண்விழி நிலையில் செயற்படுத்தலாம்.

பெரும்பாலான உளநோய் நிலைகளில் பக்கமூளை (Temporal lobe) , முன்மூளை (frontal lobe) என்பன பாதிக்கப்படுகின்றது. இந்தப் பகுதிகள் பாதிக்கப்படும் போது நுண் விழி நிலை மாற்றங்களை மீசிறிய நுண் தொழில் நுட்பத்திலான மூளை வியக்கிகள் மூலம் ஏற்படுத்தலாம்.

உளப்பிளவை நோயில் mesocortical பிரதேசத்தில் Aio Dopamine நரம்பு கல இணைப்புகளில் பாதிப்புகள் ஏற்படுகின்றன. இதன் போதும் மீசிறிய நுண் அணுகு முறையிலான மூளை வியாதிகள் மூலம் நுண்விழிநிலை மாற்றத்தை ஏற்படுத்தலாம்.அறளை பெயர்தலின்போது Noradrenergic நரம்புக்கலங்கள் பாதிக்கப்படுகின்றன. இதனையும் மீசிறிய நுண் தொழில்நுட்ப அணுகுமுறையிலான மூளை வியாதிகளை செயற்படுத்துவதால் கட்டுப்படுத்தலாம். நடுமூளையில் உள்ள DRN நரம்புக் கலங்களிலும் MRN நரம்புக் கலங்களிலும் ஏற்படும் மாற்றங்கள் மனச்சோர்வு நிலையை ஏற்படுத்துகின்றது. எனவே இந்தப் பகுதியின் நுண்விழி நிலையை மீசிறிய நுண் தொழில்நுட்ப மூளை வியாதிகள் மூலம் சாதாரண நிலைக்கு மாற்ற முடியும். அல்சைமர் நோயின்போது cholinergic நரம்பு கலப் பாதிப்புக்கள் ஏற்படுகின்றது. எனவே அதற்குரிய மூளை வியக்கியினால் இந்த நோய்கள் கட்டுப்படுத்தும் சூழல் உருவாகும்.

அடுத்து Tricyclic மருந்துகள் Phenothicyine, Quietapine, மருந்துகள் Clozapine, Diagepam போன்ற மருந்துகளின் இரசாயனக் கட்டமைப்புகளில் நுண் வடிவமைப்புக்களை உருவாக்கி பிரயோகிக்கலாம். Benzodiazepine ionophore complex இல் மீ சிறிய நுண் தொழில்நுட்ப அணுகுமுறையின் மூலம் நுண்விழி நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தி நித்திரை இன்மை, பதகளிப்பு என்பவற்றை நீக்கலாம்.

போதைவஸ்துக்கு அடிமையானவர்கள், மதுப்பாவனைக்கு அடிமையானவர்கள், புகைப் பிடித்தலுக்கு அடிமையானவர்கள் போன்றவர்களுக்கு மீசிறிய நுண் அணுகு முறையிலான நுண்விழி நிலை மாற்றங்களை ஏற்படுத்த முடியும். இதற்கு Opiate நரம்பு கல இணைப்பு நிலைகள் Nicotine நரம்பு கல இணைப்பு நிலைகளில் மூளை வியக்கிகளை செயற்படுத்தல் வேண்டும். இதனால் உலகில் போதைப் பொருள் , மதுபானம், புகைத்தல் போன்ற பழக்கங்களை இல்லாது செய்யலாம்.



மீ சிறிய நுண் தொழில்நுட்ப அணுகுமுறையை நோய் எதிர்ப்புத் தன்மை, சிறுநீரகச் செயற்பாடு, ஈரலின் செயற்பாடு, சதையியின் செயற்பாடு என்பவற்றுக்கும் பிரயோகிக்கலாம். இவை எதிர்வரும் 50 வருட காலத்தில் சாத்தியமானதாக அமையலாம். இதனால் உள நோய்கள் மட்டுமல்ல, உயர் குருதி அமுக்கம், சலரோகம், சிறுநீரகச் செயலிழப்பு, ஈரற் செயலிழப்பு என்பனவற்றுக்கும் தீர்வு காணக்கூடியதாக அமையும்.

எனவே எமது இளம் சந்ததியினர் சிறந்த ஆராய்ச்சியாளர்களாக மிளிர இரசாயனவியல், பௌதிகவியல், வலைப்பின்னல், பொறியியல், உடற்றொழிலியல், மருந்தியல், உள மருத்துவம், மருத்துவம், நரம்பியல் போன்ற துறைகளில் ஆழமாகக் கற்று மீசிறிய நுண் தொழில்நுட்பத்தின் பிரயோகத்தினாலான நுண்விழிநிலை மாற்றங்களையும் ஏனைய மருத்துவச் சாதனைகளையும் ஏற்படுத்தலாம். இவை மனித குலத்துக்கு பெரும் நன்மை பயப்பனவாக அமையும்.

“ உளப்பிளவை நோயில் mesocortical பிரதேசத்தில் Aio Dopamine நரம்பு கல இணைப்புகளில் பாதிப்புகள் ஏற்படுகின்றன. இதன் போதும் மீசிறிய நுண் அணுகு முறையிலான மூளை வியாதிகள் மூலம் நுண் விழிநிலை மாற்றத்தை ஏற்படுத்தலாம்.அறளை பெயர்தலின்போது Noradrenergic நரம்புக்கலங்கள் பாதிக்கப்படுகின்றன.

## தவக்காலச் சிந்தனை




### கூட்டிணைவே அமைதிக்கு வழி

ஒரு கட்டட நிர்மாணத்தில் பல துறை சார்ந்தோரின் பங்களிப்பு சங்கமமாகிறது. கட்டடக் கலைஞர்கள், மரவேலையாளர்கள், பொறியியலாளர்கள், மின்னிணைப்பாளர்கள், வர்ணம் பூசுவோர் எனப் பலரின் கூட்டு முயற்சியால் கட்டடம் அழகு பெறுகிறது. நான்தான் திறம்படச் செய்தேன் என எவரும் பெருமை பாராட்ட முடியாது. அனைவருமே அதன் சிறப்புக்கு உரித்தானவர்கள்.

இவ்வாறே மனித சமுதாயக் கட்டமைப்பும் பல்வேறு ஆற்றல்கள், திறமைகள் புலமைகளைக் கொண்டோரின் கூட்டு முயற்சியால் கட்டி எழுப்பப்படவேண்டும். தூய ஆவியானவர் ஒவ்வொருவருக்கும் வித்தியாசமான அருட்கொடைகளை வழங்கியுள்ளார். ஒருவருக்கு ஞானம் நிறைந்த சொல்வளமும், இன்னொருவருக்கு அறிவு சேர்ந்த சொல்லாற்றலும், வேறொருவருக்கு நம்பிக்கையும் பிறிதொருவருக்கு பிணி தீர்க்கும் அருட்கொடையையும், மேலுமொருவருக்கு வல்லமைமிக்க ஆற்றலையும், அடுத்தவருக்கு இறைவாக்கு, பரவசப் பேச்சுத் திறன் போன்வற்றை தூய ஆவியார் பொழிகிறார். இவை அனைத்தும் பொது நன்மைக்காகவே அருளப் படுகின்றன (1கொரி 12:7) இந்த அரிய கொடைகளைப் பெற்ற நாம் அவற்றை எமக்குள்ளேயே முடக்கி வைத்து அதை இழந்த சந்தர்ப்பங்கள் இல்லையா? துஷ்பிரயோகம் செய்து பிறருக்கு இடையூறு விளைவிக்கவில்லையா? வெவ்வேறு வயல்களில் விளைந்த கோதுமை மணிகள் ஒன்று சேர்ந்து வெண்ணிற அப்பமாக உருமாற்றம் பெறுவதுபோல அனைத்துத் தரப்பினரதும் திறமைகள், வல்லமைகள், அதிகாரங்கள், அறிவு சேர் மதி நுட்பங்களை புரிந்துணர்வுடன் ஒன்றிணைத்து சமுதாயத்தையும் நாட்டையும் அமைதிப் பாதைக்கு வழிநடத்த பயன்படுத்துவோம். இதுவே இறையரசை நிறுவும் பணியாக அமையும்.

***எஸ்.யேசுதாஸ், கொழும்புத்துறை.***



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: தொழில் வியாபாரம் சிறப்படையும். வியாபார வளர்ச்சிக்கு இருந்த தடைகள் நீங்கும். உத்தியோகத்தில் பதவி உயர்வு உண்டாகும். நீண்ட தூர பயணங்களால் காரிய அனுகூலம் உண்டாகும். சக பணியாளர்கள் மூலம் உதவி கிடைக்கப்பெறுவீர்கள்.



**இடபம்**: குடும்பத்தில் உற்சாகம் இருக்கும். மற்றவர்கள் உங்களை அனுசரித்துச் செல்வார்கள். பிள்ளைகளுக்கு மருத்துவச் செலவு ஏற்படலாம். பேச்சின் இனிமை சாதுரியத்தால் எளிதில் காரியங்கள் கைகூடும்.



**மிதுனம்**:எதிர்காலத்துக்கு உதவக்கூடிய விடயங்களில் ஆர்வம் உண்டாகும். ஆன்மிக சிந்தனை அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு உண்டாகும். மனதில் இருந்த குழப்பம் நீங்கி தைரியம் ஏற்படும்.



**கடகம்**: எதிலும் கூடுதல் கவனத்துடன் இருப்பது நல்லது. வீண் அலைச்சல், காரியதாமதம் உண்டாகலாம். குடும்பத்தில் அமைதி ஏற்படும். மனக்குழப்பம் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள்.



**சிங்கம்**:ஆக்கபூர்வமான யோசனைகளும் காரிய வெற்றியும் வந்து சேரும். மற்றவர்களிடம் பழகும்போது கவனமாக இருப்பது நல்லது. சமூகத்தில் கௌரவம் அந்தஸ்து அதிகரிக்கும்.



**கன்னி**: வியாபாரம் தொடர்பான பயணங்கள் இலாபம் தருவனவாக இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேல் அதிகாரிகள் கொடுத்த வேலைகளைக் கவனமாகச் செய்து முடித்து பாராட்டுப் பெறுவார்கள். செயல் திறமை அதிகரிக்கும்.



**துலாம்**: குடும்பத்தில் சுகமும், நிம்மதியும் இருக்கும். குடும்பத்திற்கு அதிகப்படியான வருமானம் கிடைக்கும். உறவினர் வருகை இருக்கும். யாரிடம் பேசும் போதும் நிதானமாகப் பேசுவது நன்மை தரும்.



**விருச்சிகம்**: எதிலும் மிகவும் கவனமாக ஈடுபடுவது நன்மை தரும். திட்டமிட்டுச் செயற்படுவது வெற்றிக்கு உதவும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். துணிச்சல் உண்டாகும். அதனால் எதைப் பற்றியும் முன்பின் யோசிக்காமல் செயல்களில் இறங்கி விடுவீர்கள்.



**தனுசு**: தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு கீழ்நிலையில் உள்ளவர்களால் லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் எந்த ஒரு வேலையையும் செய்து முடிப்பதில் வேகம் காட்டுவார்கள்.



**மகரம்**: குடும்பத்திற்கு தேவையான பொருள்கள் வாங்குவதன் மூலம் செலவு உண்டாகும். சகோதரர்கள் மூலம் உதவி கிடைக்கும். உறவினர்கள் வருகை இருக்கும். பிள்ளைகளிடம் அனுசரணையாக நடந்து கொள்வது நன்மைதரும்.



**கும்பம்**: இன்று துணிச்சலுடன் ஈடுபட்டு காரிய வெற்றி காண்பீர்கள். பணவரத்து திருப்தி தரும். வாக்குவாதத்தைத் தவிர்ப்பது நன்மைதரும். எதிலும் மிகவும் கவனமாக ஈடுபடுவது நல்லது.



**மீனம்**: வீண் மனக்குழப்பம் ஏற்பட்டு நீங்கும். மற்றவர்களுக்கு உதவப்போய் வீண் பிரச்சினையில் சிக்கிக் கொள்ளலாம். திடீர் கோபம் ஏற்படும். தேவையற்ற வீண் செலவுகளும் உண்டாகும்.

## நாளை

**பங்குனி-22 சனிக்கிழமை | 05.04.2014**

திதி: ஷஷ்டி பி.இ.01.07 வரை
நட்சத்திரம்: மிருகசீரிடம் முழுவதும்
சுபநேரம்: 03.09-04.39 வரை
இராகுகாலம்:.09.09-10.39 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...



### ஓஜஸ்

மனிதனிலிருந்து மனிதனை வேறுபடுத்திக் காட்டுவது ஓஜஸ். ஓஜஸ் அதிகமுள்ளவன் தலைவனாகிறான். சிறந்த வசீகர சக்தியளிப்பது அதுவே. ஓஜஸ் உற்பத்தியாவது நாடி ஓட்டத்திலிருந்தே. சிற்றின்பத்தில் தோன்றும் சக்தியால் இது எளிதில் உற்பத்தியாகிறது, என்பதே இதற்குரிய தனிச் சிறப்பு. சிற்றின்பச் சக்தி சிதறிப் போகாமல் காக்கப்பட்டால் (செயல் என்பது எண்ணத்தின் தூல நிலையே) அந்தச் சக்தியிலிருந்து ஓஜஸை உற்பத்தி செய்யலாம். இரு பெரும் நாடிகள் மூளையில் தொடங்கி, முதுகுத் தண்டின் இரு புறமும் செல்கின்றன. செல்லும் வழியில் தலையின் பின்னால் '8' என்ற எண்ணின் உருவம் போன்று ஒன்றை ஒன்று தாண்டிச் செல்கின்றன. இவ்வாறு உடலின் இடது புறம் மூளையின் வலது புறத்தால் இயக்கப்படுகிறது. இந்த ஓட்டச் சூழலின் கீழ் முனையே காம உணர்ச்சியின் மையம்; மூலாதாரம். இடை, பிங் கலை என்னும் இரு பெரும் நாடிகளில் ஏற்படும் சக்தி கீழே கொண்டு வரப்பட்டு இந்த இடத்தில் தொடர்ந்து சேமிக்கப்படுகிறது. முதுகுத் தண்டில் உள்ள கடைசி எலும்பு, இடுப்பிலுள்ள இந்த நரம்புவலைத் தொகுதியின் மேல் இருக்கிறது. இதை முன்னோர்கள் முக்கோணம் என்று உருவகப்படுத்தினார்கள். இதன் அருகில் சக்தி சேமிக்கப்பட்டிருப்ப தால் இதை ஒரு பாம்பாக உருவகப் படுத்தினார்கள். உணர்வு நிலையும், உணர்வு மறைந்த நிலையும் இவ்விரண்டு நாடிகள் மூலமே செயலாற்றுகின்றன. நாடி ஓட்டம் கீழ் நோக்கி வரும்போது மீண்டும் அது மேல் நோக்கிச் செல்வதைத் தடுத்து மூலாதாரத்தில் ஓஜஸாக மாற்றி முதுகுத் தண்டின் மேல் ஏற்றி விடுகிறது. உணர்வு கடந்த நிலை இது.

# எத்தனை, எத்தனை உணர்வுகளை கொண்டது இந்த மனித முகம்



மனிதர்கள் 21 விதமான முகபாவனைகளைக் காட்டுகிறார்கள் என்று விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

அமெரிக்காவின் ஒகியோ மாகாண பல்கலைக்கழக விஞ்ஞானிகள் மனிதர்கள் 21 விதமான முகபாவனைகளை காட்டுவதாக கண்டறிந்து அதற்குரிய படங்களையும் வெளியிட்டு உள்ளனர்.

பரவலாக மனிதர்கள் 6 விதமான முகபாவனைகளைக் காட்டுகின்றனர் என்று கூறப்பட்டு வந்த கருத்தை இவர்கள் மாற்றியுள்ளனர்.

அவர்கள் நடத்திய ஆராய்ச்சியில், மனிதன் தனது அன்றாட வாழ்க்கையில் 21 விதமான முகபாவனைகளைக் காட்டுவதாகவும், அதிகபட்சமாக 3 முறை 6 விதமான முகபாவனைகளைக் காட்டுவதாகவும் கண்டறிந்து உள்ளனர். இந்தநிலையில் அடிப்படை மகிழ்ச்சி, சோகத்தை காட்டும் முகபாவனையை சிலர் வெறுப்புக் கலந்த மகிழ்ச்சியாக வெளிப்படுத்துகின்றனர்

அவர்களின் உணர்வுகள் குறித்து நாம் அறிந்திருந்தால் அவற்றை வகைப்படுத்த முடியும் என விஞ்ஞானிகள் நம்புகிறார்கள்.

இதுகுறித்து விஞ்ஞானி டாக்டர் அலெக்ஸ் மார்டின்ஷ் கூறுகையில், நாம் மகிழ்ச்சி, வருத்தம் ஆகிய எளிய உணர்வுகளைத் தாண்டிச் சென்று அவர்களின் உணர்வுகளுக்கு உரிய முகபாவனைகளைக் கண்டறிய வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். இதன் பேரில் மனிதனின் 6 அடிப்படை உணர்ச்சிகளைச் சித்திரிக்க 230 நபர்களிடம் ஆய்வு நடத்தப்பட்டது. அவர்கள் காட்டிய முகபாவனையில் இருந்து கலவை உணர்வுகளைக் கொண்டு ஆச்சரியம் கலந்த மகிழ்ச்சி, வேதனை கலந்த கோபம் மற்றும் வெறுப்பு கலந்த மகிழ்ச்சி என வகைபடுத்தப்பட்டன.

அந்த 21 வகையான உணர்வுகள் வருமாறு:-

மகிழ்ச்சி, வருத்தம், பயம், கோபம், ஆச்சரியம், வெறுப்பு, அதிர்ச்சி, ஆச்சரியம் கலந்த மகிழ்ச்சி, வெறுப்புக் கலந்த மகிழ்ச்சி, திடீர் பயம், திடீர் கோபம், திடீர் ஆச்சரியம், திடீர் வெறுப்பு, எல்லை மீறிய கோபம், எல்லை மீறிய ஆச்சரியம், எல்லை மீறிய வெறுப்பு ஆச்சரியம் கலந்த கோபம், வெறுப்புக் கலந்த கோபம், வெறுப்புக் கலந்த ஆச்சரியம், பயம் கலந்த வெறுப்பு நிலை குழைதல் என்பவையே அவை ஆகும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு


சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நீகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | | 7 | | | 4 | 1 | |
| | 8 | 7 | | 5 | | 6 | | |
| 3 | | 4 | 1 | | | 2 | 7 | |
| | | 2 | | 8 | | | | |
| 4 | | | 2 | 7 | 3 | | | 9 |
| | | | | 9 | | 1 | | |
| | 9 | 6 | | | 5 | 3 | | 2 |
| | | 3 | | 2 | | 7 | 5 | |
| | 2 | 1 | | | 7 | | 8 | |

### நேற்றைய சுடோக்கின் விடை


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 9 | 1 | 8 | 5 | 6 | 4 | 3 | 7 |
| 8 | 5 | 6 | 4 | 3 | 7 | 9 | 1 | 2 |
| 3 | 4 | 7 | 1 | 2 | 9 | 8 | 5 | 6 |
| 6 | 2 | 9 | 7 | 4 | 5 | 1 | 8 | 3 |
| 4 | 1 | 3 | 9 | 8 | 2 | 6 | 7 | 5 |
| 7 | 8 | 5 | 6 | 1 | 3 | 2 | 4 | 9 |
| 9 | 6 | 8 | 3 | 7 | 1 | 5 | 2 | 4 |
| 1 | 3 | 2 | 5 | 9 | 4 | 7 | 6 | 8 |
| 5 | 7 | 4 | 2 | 6 | 8 | 3 | 9 | 1 |

## உலகம் முழுவதும் இணைய சேவையை வழங்கத் தயாராகும் பேஸ்புக்



அமேஷான் நிறுவனம் கடந்த வருடம் தனது வாடிக்கையாளர்களுக்கு பொருள்களைக் கொண்டு சென்று வழங்குவதற்காக Drone என்ற சிறிய விமான சேவையை அறிமுகம் செய்திருந்தது. இதனைத் தொடர்ந்து பல்வேறு முன்னணி நிறுவனங்களும் இதனைப் பின்பற்ற முனைப்புக் காட்டி வருகின்றன.

இவற்றின் வரிசையில் தற்போது பேஸ்புக் நிறுவனமும் உலகம் முழுவதும் உள்ள அனைத்து மக்களுக்கும் இணைய சேவையை வழங்கத் தீர்மானித்துள்ளது. அதற்காக Drone விமானங்களை உள்ளடக்கியதாக Dronedandd Laser என்ற திட்டத்தைப் பயன்படுத்தவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.





## சொனி அறிமுகம் செய்யும் டிஜிட்டல் பேப்பர்

சொனி நிறுவனமானது E Ink Slate என்ற 13.3 அங்குல அளவுடைய டிஜிட்டல் பேப்பரை விரைவில் அறிமுகம் செய்யவுள்ளது.

முதன் முறையாக சொனி நிறுவனத்தால் உற்பத்தி செய் யப்படும் இந்தச் சாதனமானது Amazon Kindle சாதனத்தின் அளவை ஒத்ததாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 1600 x 1200 Pixel அளவுடைய தொடுதிரையைக் கொண்டுள்ள இச்சாதனத்தில் 2.8 ஜிபிஉள்ளக சேமிப்பு நினைவகமும், தேவைக்கு ஏற்ப microSD கார்ட்டின் உதவியுடன் அதனை அதிகரித்துக்கொள்ளும் வசதியும் காணப்படுகின்றது.

WiFi வயர்லெஸ் தொழில்நுட்பத்தையும் உள்ளடக்கியுள்ள இந்தச் சாதனத்தின் விலை 1100 டொலர்கள் ஆகும்.




## ஸிசிம் ஸ்மார்ட் மின்குமிழை அறிமுகம் செய்யும் சம்சுங்

சம்சுங் நிறுவனம் புத்தம் புதிய ஸிசிம் ஸ்மார்ட் மின்குமிழ்களை வடிவமைத்து அறிமுகம் செய்யவுள்ளதாக அறிவித்திருந்தது.

இதன்படி மார்ச் மாதம் 30 ஆம் திகதி தொடக்கம் இன்று வரை ஜேர்மனியின் பிராங்புரூட்டில் இடம்பெறும் Light+ Building 2014 நிகழ்வில் இதனை அறிமுகம் செய்யவுள்ளதாகத் தெரிவித்திருந்தது.

இவை Bluetooth மற்றும் WiFi தொழில்நுட்பத்தைக் கொண்டதாகக் காணப்படுவதுடன் 15,000 மணித்தியால நேரம் அல்லது 10 வருட உத்தரவாதம் கொண்டவையாகவும் காணப்படுகின்றன.



## ஒக்குலஸ் நிறுவனத்தை வாங்குகிறது பேஸ்புக்

'வாட்ஸ் ஒப்'பைத் தொடர்ந்து அமெரிக்காவில் உள்ள 'ஒக்குலஸ்' நிறுவனத்தை வாங்க பேஸ்புக் திட்டமிட்டுள்ளது. சமூக வலைத்தளங்களில் ஜாம்பாவனாகத் திகழும் பேஸ்புக், சமீபகாலமாக நவீன தொழில் நுட்ப நிறுவனங்களை கையகப்படுத்தி வருகிறது. அந்த வரிசையில் சமீபத்தில் தான், கடந்த பெப்ரவரி 19 ஆம் திகதி வாட்ஸ் ஒப் நிறுவனத்தை வாங்கியது.

இந்த வர்த்தக பரிவர்த்தனை மேற்கொள்ளப்பட்ட ஒரு மாதத்தில் ஒக்குலஸ் (Oculus) நிறுவனத்தையும் வாங்கத் திட்டமிட்டுள்ளது.

வீடியோகேமிற்கான விர்ச்சுவல் ரியாலிட்டி ஹெட்செட்(Virtual Reality Headset) தொழில்நுட்பப் பணிகளை ஒக்குலஸ் நிறுவனம் நிறைவேற்றி வருகிறது. இந்த நிறுவனம் அமெரிக்காவில் இருக்கிறது.

இந்நிறுவனத்தை ரூ.12 ஆயிரம் கோடிக்கு வாங்குவதாக பேஸ்புக் அறிவித்துள்ளது. இதில் ஒரு பகுதி பணமாகவும், ஒரு பகுதி பங்குகளாகவும் வழங்கப்படும் என்றும் பேஸ்புக் குறிப்பிட்டுள்ளது.

இதுபோன்ற நவீன தொழில்நுட்பச் சேவைகளை வாங்கி அவற்றை ஒருங்கிணைத்து செயற்படுத்தினால், எதிர்காலத்தில் சமூக இணையத்தளத்தின் மூலம் மக்களின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்யமுடியும் என்று பேஸ்புக் நிறுவுநரும் தலைமை செயல் அதிகாரியுமான மார்க் தெரிவித்துள்ளார்.

## குளோனிங் முறையில் உருவாக்கப்பட்ட டைனோசர் குட்டி

பிரிட்டனின் லிவர்பூல் ஜோன் மோர் பல்கலைக்கழகம் வெற்றிகரமான முறையில் டைனோசர் குட்டி ஒன்றை குளோனிங் மூலம் உருவாக்கியுள்ளதாக அந்தப் பல்கலைக்கழகத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த டைனோசர் குட்டிக்கு ஸ்பெட் எனச் செல்லப் பெயர் சூட்டியுள்ளனர். குளோனிங் முறையில் உருவாக்கப்பட்டுள்ள இந்த டைனோசர் குட்டி, பல்கலைக்கழகத்தில் உள்ள கால்நடை மருத்துவமனையில் வைத்து பாதுகாக்கப்பட்டு வருகிறது.

டைனோசரின் மரபணுவைத் தீக்கோழி ஒன்றின் கருவில் செலுத்தி விஞ்ஞானிகள் இதனை உருவாக்கியுள்ளனர்.


ப்ல டைனோசர் மரபணுக்களைச் செலுத்தி இந்த ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டதாக உயிரியல் பேராசிரியரான மருத்துவர் ஜெரார்ட் ஜோன்ஸ் தெரிவித்துள்ளார். இவரே இந்த குளோனிங் ஆராய்ச்சிக்கு தலைமை தாங்கியவராவார்.

மரபணு மூலம் உருவாக்கப்பட்டுள்ள முதல் குளோனிங் டைனோசர் குட்டி, மரபணு விஞ்ஞானத்தில் ஒரு மைல் கல்லாகும் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.



## தனது முதலாவது களஞ்சியத்தை துருக்கியில் திறக்கும் அப்பிள்

அப்பிள் நிறுவனம், தனது சந்தைப்படுத்தலை உலகம் முழுவதும் விரிவாக்கம் செய்யும் பொருட்டு பல நாடுகளிலும் தனது களஞ்சியங்களையும் காட்சி அறைகளையும் திறந்து வைப்பதில் முனைப்புக் காட்டி வருகின்றது. இதன் அடிப்படையில் துருக்கியின் ஸ்தான்புல் நகரில் தனது முதலாவது ஸ்டோரினை நாளை சனிக்கிழமை 5ஆம் திகதி திறந்து வைக்கவுள்ளது. இதேவேளை எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் வாடிக்கையாளர்களுக்கான சேவையை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.



## கருத்துரை

யாழ்ப்பாணம், ஏப்.4

சமகாலக் கலை, கட்டடக் கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக் காப்பகத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்தொடரின் கருத்துரையின் மூன்றாவது நிகழ்வாக- நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நல்லூர் கோயில் வீதியிலுள்ள ஆவணக் காப்பகத்தில் தா.சனாதனனின் "எஜமானின் தரிசனம்: இலங்கை கலையில் யதார்த்தவாதத்தின் மாயை" என்ற தலைப்பில் கருத்துரையொன்று இடம்பெறவுள்ளது.

ஐரோப்பிய யதார்த்தவாதத்தை முன்னிறுத்தும் காலனியசெயற்றிட்டத்தின் இலங்கை கலையில் புதிய பயில்வு, சுவை என்பவற்றைப் பரிசோதிப்பதில் எண்ணெய் வர்ண ஓவியம், கோயில் ஓவியம், புகைப்படக் கலை என்பன முக்கியம்பெறுகின்றன என்பதை விவரிப்பதாக இந்தக் கருத்துரை அமையும். இதில் இயங்கிய படைப் பாளிகளான ஏ.சி.ஜி.எஸ். அமரசேகரா, எம்.சார்லிஸ், லயனஸ் வென்ற் ஆகியோர் புதிய கலையாக்கத்தில் பங்களித் திருப்பதை தெளிவுபடுத்துவதாக இந்தக் கருத்துரை அமையும் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ஒ)

## சமய சந்நிதிகளில்...

சுழிபுரம், ஏப்.4

மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது எதிர்வரும் 14 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (க-28)

★ ★ ★

மாவிட்டபுரம், வீணியவரை, ஸ்ரீ.இராஜ இராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் நாளை சனிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை வரை விசேட அபிஷேகம், பூசைகள் காலை 8 மணி முதல் மு.ப. 11 மணி வரை நடை பெறும். எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7 மணிக்கு வருஷ சங்கிராந்தி அபிஷேகம் நடைபெறும் என்று ஆலய குருவும், நிர்வாகத்தினரும் தெரிவித்துள்ளனர். (க)

★ ★ ★

வட்டுக்கோட்டை பங்குரு கந்தசுவாமி ஆலயத்தின் மஹாகும்பாபிஷேக நிகழ்வு எதிர்வரும் 17 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. மாலை உற்சவத்தின் போது யானை சகிதம் பல வர்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் முருகப் பெருமான் வீதியுலா வரும்காட்சி இடம்பெறும். சிவஸ்ரீ சோ.வாகீஸ்வரக் குருக்கள் தலைமையில் கும்பாபிஷேக நிகழ்வுகள் இடம்பெறும். (க)

★ ★ ★

சுன்னாகம் ஸ்ரீ சந்திரசேகர விநாயகர் தேவஸ்தானத்தின் வருடாந்த உற்சவம் நாளை மறுதினம் 6 ஆம் திகதி கொடியேற்ற நிகழ்வுடன் ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 14 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. பூங்காவன உற்சவம் 16 ஆம் திகதி இடம் பெறும். (க)

★ ★ ★

முள்ளியவளை முதலாம் வட்டாரம் ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய கும்பாபிஷேக நிகழ்வு எதிர்வரும் 9 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு எதிர்வரும் 7 ஆம் திகதி நண்பகல் 12 மணி முதல் மறுநாள் பிற்பகல் 3 மணி வரை இடம்பெற்று 9 ஆம் திகதி கும்பாபிஷேக நிகழ்வு இடம் பெறும். சிவஸ்ரீ கா.இரகுநாதக் குருக்கள் தலைமையில் கிரியைகள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-500)

★ ★ ★

பருத்தித்துறை கோட்டுவாசல் அருள்மிகு ஸ்ரீ சண்டிகா பரமேஸ்வரி அம்மன் கோயில் வருடாந்தப் பெருந்திருவிழா நாளை மறுதினம் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

13 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை சப்பறத் திருவிழாவும், 14 ஆம் திகதி திங்கட்கிழமை புதுவருடத் தினத்தன்று தேர்த்திருவிழாவும், மறுநாள் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (க)

★ ★ ★

நீர்வேலி கந்தசாமி கோயில் மஹோற்சவம் கடந்த 28 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. உற்சவங்கள் 21 தினங்கள் நடைபெறவுள்ளன.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மஞ்சமும் எதிர்வரும் 11 ஆம் திகதி மாம்பழத் திருவிழாவும், 12 ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும், 14 ஆம் திகதி புதுவருடப் பிறப்பன்று தேர்த்திருவிழாவும், 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும், 16 ஆம் திகதி திருக்கல்யாண உற்சவமும் நடைபெறவுள்ளன.

ஆலயத்தின் திருப் பணிச் சபையால் பல மில்லியன் ரூபா செலவில் வசந்த மண்டபம் நிர்மாணிக்கப்பட்டு ஆலயம் அழகுபடுத்தப்பட்டுள்ளது. (வ-11)

★ ★ ★

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தில் எதிர்வரும் 14 ஆம் திகதி ஜய வருடப் பிறப்பு விழா இடம்பெறவுள்ளது.

புதுவருடப் புண்ணிய தினத்தில் அம்பாள் அடியார்கள் ஆசார சீலர்களாக வருகை தந்து அம்பாளை வழிபாடு செய்து திருவருளைப் பெற்றுய்யுமாறு ஆலயத்தின் நிர்வாக சபையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க)

★ ★ ★

நெடுந்தீவு மேற்கு நெழுவினி சித்தி விநாயகர் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து பத்துத் தினங்கள் திருவிழா நடைபெறும்.

புதுவருட தினமான திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் மாலை 4 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். மறுநாள் செவ்வாய்க்கிழமை பூங்காவன உற்சவம் இடம்பெறும். (வ-7)

★ ★ ★

கரணவாய் எள்ளங்குளம் நாச்சிமார் கோயில் என்று அழைக்கப்படும் முத்துமாரி அம்மன் கோயில் வருடாந்தப் பெருந்திருவிழா நாளை சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும், 14 ஆம் திகதி திங்கட்கிழமை புதுவருட தினத்தன்று காலை 8.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். இந்தப் பெருந் திருவிழாவை நித்தியா துரந்தர் சிவஸ்ரீ உலக விக்கினேஸ்வரக் குருக்கள் பிரதம குருவாக இருந்து நடத்தி வைப்பார். (ஓ-173)

## யாழ்.துரையப்பா அரங்கில் நாளை சித்திரைப் புத்தாண்டு விழா போட்டிகள்

*இராணுவத்துடன் இணைந்து செயலகம் ஏற்பாடு*

யாழ்ப்பாணம், ஏப்.4

தமிழ்- சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு, முதன் முறையாக யாழ்.மாவட்டச் செயலகம் இராணுவத்தினருடன் இணைந்து இன்னிசை நிகழ்வு மற்றும் பல்வேறு போட்டிகளை நடத்தவுள்ளதாக, பலாலி கட்டளைப் பணியக ஊடகப் பிரிவு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டச் செயலகம், யாழ். பாதுகாப்புப் படை கட்டளைத் தலைமையகம், யாழ். பொலிஸ் நிலையம் என்பன இணைந்து ஏற்பாடு செய்துள்ள தமிழ் - சிங்கள சித்திரைப் புத்தாண்டு விழா மற்றும் இன்னிசை இரவு என்பன நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணி முதல் துரையப்பா விளையாட்டரங்கில் இடம் பெறவுள்ளன.

ஆண் - பெண் இருபாலாருக்குமான சைக்கிள் ஓட்டப் போட்டி, கிராமத்தை ஊடறுத்து ஓடும் போட்டி, சறுக்கு மரம் ஏறும் போட்டி, கயிறு இழுத்தல் போட்டி, தலையணை அடித்தல் போட்டி, பானை உடைத்தல் போட்டி, புத்தாண்டு அழகன் - அழகித் தெரிவுப் போட்டிகள் என்பன நடைபெறவுள்ளன.

இரவு 7 மணிக்கு ஏசியன் குரூப் இசைக்குழுவுடன், நாட்டின் பிரபல நடனக் குழுக்கள் கலந்து கொள்ளும் இன்னிசை நிகழ்வும் இடம் பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-5)

## முன்பள்ளி மெய்வன்மைப் போட்டி

வடமராட்சி, ஏப்.4

புலோலி தென்மேற்கு, கந்த முருகேசனார் சனசமூக நிலைய முன்பள்ளி வருடாந்த மெய்வன்மை போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நிலையத் தலைவர் மு.ஜெகதேவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக புலோலி மெ.மி.த.க.பாடசாலை அதிபர் திருமதி புவனேஸ்வரி தயாநிதி கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக சனசமூக நிலையங்களின் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பரமேஸ்வரி யோகராசா, கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் அ.உமாசங்கர், புலோலி அபிவிருத்தி மன்றச் செயலாளர் த.பாலகிட்ணபிள்ளை ஆகியோர் கலந்து கொள்வார்கள். (க-173)

## நிர்வாக சபை தெரிவு

கொக்குவில், ஏப்.4

கொக்குவில் மேற்கு ஸ்ரீவாராஹி சனசமூக நிலையத்தின் நடப்பு ஆண்டுக்கான புதிய நிர்வாக சபைத் தெரிவு அண்மையில் இடம்பெற்றது. நிர்வாக சபைத் தெரிவின் போது தலைவர், செயலாளர், பொருளாளர் உட்பட 10 நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

கூட்டத்தில் நிலையத்தின் புதிய யாப்பும் வெளியிடப்பட்டது. (க)

## இன்று அருளுரை

நல்லூர் கந்தசுவாமி ஆலய வடக்கு வீதியிலுள்ள மகேஸ்வரன் மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணியிலிருந்து 7.30 மணி வரை 'தவம்' என்ற கருப்பொருளிலான அருளுரையும் 15 நிமிடங்களுக்கு அது தொடர்பான சந்தேகங்களுக்கான விளக்கமும் யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா சுவாமிகளால் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)


## மரண அறிவித்தல்



திருமதி நீற்றா சறோஜினி (சறோ) யோன்பிள்ளை

யாழ்ப்பாணம் நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், கொழும்பு கல்கிசையை வசிப்பிடமாகவும் கொண்ட நீற்றா சறோஜினி (சறோ) யோன்பிள்ளை 31.03.2014 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ராசையா - விக்ரோறியா தம்பதியரின் அன்பு மகளும், சூசைப்பிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற யோன்பிள்ளை ( இளைப்பாறிய தபால் அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், ஜீன், ஜெசி, ஜெனற், ஜெயக்குமார், ராஜ்குமார், சசிக்கலா ஆகியோரின் அன்புத் தாயும், அமிர்தநாதன் (மனோ), வசந்தன், உமா, றஜனி, செல்வக்குமார் ஆகியோரின் மாமியும், யூடியா, அனிற்றா, சோனியா, செல்ட்டன், ருக்ஷி, கிவ்ரி, கிறேற்றி, ரவின், றுபேஷன், ரேனியா, ஜொனி, மணிக் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ் சென்ற வர்களான இம்மானுவேல் மெற்றில், இக்னேஷியஸ், ஜெயராணி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 02.04.2014 புதன் கிழமை காலை 9.00 மணிமுதல் 03.04.2014 வியாழக் கிழமை இரவு 7.00 மணிவரை கல்கிசை 109/5 D அடயசேகர வீதி, இல்லத்தில் வைக்கப்பட்டுப் பின்னர் அன்னாரின் பூதவுடல் இளவாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு இன்று (04.04.2014) வெள்ளிக் கிழமை காலை 9.00 மணிமுதல் நாளை (05.04.2014) சனிக்கிழமை காலைவரை இளவாலை, மடத்தடி வீதி இல்லத்தில் வைக்கப்படும். அதன் பின்னர் சனிக் கிழமை காலை 9.00 மணியளவில் இளவாலை புனித அன்னம்மாள் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, பின்னர் அன்னம்மாள் சேமக் காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர். (சி.13001)(45.6.3)

தொடர்பு: 076 682 8430/ 011 272 1505/ 077 054 2621

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



எமது மன்றத்தின் முன்னாள் தலைவரும் ஆலோசகருமான

அமரர் இராமநாதர் சின்னத்தம்பி

(முன்னாள் அதிபர்)

அவர்களை எமது மன்றத்தின் சார்பில் நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்துகின்றோம்.

நெடுந்தீவுப் பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம் - கனடா. நெடுந்தீவு.

## 6 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர் சதாசிவம் இரட்ணபாலா

மலர்வு 19★10★1958

உதிர்வு 04★04★2008

ஆண்டுகள் ஆறு ஓடி மறைந்தாலும் ஆறாது
உங்கள் நினைவலைகள் மாறாது எம் மனதில்
என்றும் நிலைத்திருக்கும்
ஆயிரம் உறவுகள் இருந்தாலும் ஆறாது எம் மனமே
சாகாமல் இருப்பது சாத்தியமில்லை தான் ஆனால்
நீ வாழாமல் பாதியில் நெருப்போடு போனதேனோ
ஆறுதல் சொல்ல ஆண்டவனே வந்தாலும் ஆறிடுமோ எம் நெஞ்சம்
மண்ணை விட்டு நீ மறைந்து விண்நோக்கி சென்றாலும்
எம் நெஞ்சம் விட்டு நீங்காமல் என்றென்றும்
நிலைத்திருப்பாய்.

உங்கள் பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரன்.

நந்தாவில் அம்மன் கோவிலடி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

திருமதி J. இரட்ணபாலா, இல. 31/16, கந்தசாமி கோயில் வீதி, திருகோணமலை. (சி)(13:29)(3.6.4)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி மகேஸ்வரி துரையப்பா

கடந்த (05.03.2014) புதன் கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவி மகேஸ்வரி துரையப்பா அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (04.04.2014) வெள்ளிக்கிழமை நடைபெற்று அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் இடம் பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னார் இறந்த செய்தி கேட்டு பல வழிகளிலும் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் தொலைபேசி மூலம் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இருந்து தொடர்பு கொண்டவர்களுக்கும் மற்றும் அந்தணப் பெரியார்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். (43605)

தகவல்: (7.6.3)

நுணாவில் மத்தி, சாவகச்சேரி. பிள்ளைகள், மருமக்கள்.

## மரண அறிவித்தல்

சுப்பிரமணியம் பரராஜசிங்கம்

(உரிமையாளர்: பிரசன்னா பந்தல்)



கே.கே.எஸ். வீதி, கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பரராஜசிங்கம் நேற்றுமுன் தினம் (02.04.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பஞ்சவர்ணத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சுப்பையா - நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பிரபாகரன், பிரதீபன், பிரதீசன் (வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி), காலஞ்சென்ற பிரசன்னா மற்றும் பிரகலாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சுதர்சினி, சுபாநந்தினி, ஷபானா ஆகியோரின் மாமனும், பிரியங்கன், பிதுசன், நித்திலா, பிருந்தா, பிரசன்னா, சாயீசன், சாயீவித்யன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2014) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சமாதிக்கிரியைக்காக தாவடி இந்து மாயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

பிரசன்னா பந்தல், கே.கே.எஸ். வீதி, கோண்டாவில் மேற்கு. (40421)(45.3.6)

# ஜெனிவா விசாரணைகளுக்கு அரசு ஒத்துழைக்க வேண்டும்

## ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வேண்டுகோள்

கொழும்பு,ஏப்.4

ஜெனிவாவில் இலங்கை சம்பந்தமாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைச் செயற்படுத்த, அரசு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வேண்டுகோள் விடுத்துள்ளது.



ஹசன் அலி

அமெரிக்காவால் இலங்கை தொடர்பாகக் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்து கருத்துத் தெரிவிக்கும் போதே அந்தக் கட்சியின் செயலர் ஹசன் அலி இவ்வாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜெனிவாவில் இலங்கை சம்பந்தமாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்த அரசு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இலங்கையிடம் தவறில்லை என்றால் அதற்கு அச்சப்பட வேண்டியதில்லை.

ஜனாதிபதி இந்த தீர்மானத்தை நிராகரிப்பார் என்றால், அவருக்கு அதற்கான இயலுமை இருக்கக் கூடும்.


நவநீதம்பிள்ளை என்பவர் தனிநபர் அல்லர். இலங்கையைப் போல் பல நாடுகள் ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகித்து வருகின்றன.

நவநீதம்பிள்ளை அனைத்து நாடுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரமுகர். இந்த தீர்மானம் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் அல்ல. இலங்கையில் உள்ள ஒரு சாரார் சம்பந்தமாக மட்டும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம். அதில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என அனைவரும் இருக்கக் கூடும்.

விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க மாட்டோம் என்று இலங்கை கூறுமாயின் இலங்கை ஐக்கிய நாடுகள் அமைப்பில் இருந்து விலக நேரிடும்.

எவராவது ஒரு குற்றத்துக்காக எம்மைக் குற்றவாளி எனக் கூறுவாராயின், நாம் குற்றவாளியா இல்லையா என்பதை மேற்கொள்ளப்படும் விசாரணைகள் மூலம் தீர்மானிக்க முடியும்.

அதனால் நாம் குற்றவாளியா அல்லது நிரபராதியா என்பதை முடிவு செய்ய இந்த விசாரணையில் அரசு பங்கேற்க வேண்டும் -என்றார். (ச)



சுங்கத் திணைக்கள அதிகாரிகள் கைப்பற்றிய ரோஸ்வுட் மரங்கள்

# ரோஸ்வுட் மரக் கடத்தலை முறியடித்தது இலங்கை

கொழும்பு, ஏப்.4

உலக நாடுகளில் தடை செய்யப்பட்டுள்ள சுமார் 100 கோடி ரூபா பெறுமதியான ரோஸ்வுட் மரக் கடத்தலை இலங்கை சுங்கத்திணைக்களம் முறியடித்துள்ளது.

ஆபிரிக்க நாடொன்றில் இருந்து இலங்கை ஊடாக ஐரோப்பிய நாடொன்றுக்கு மீள் ஏற்றுமதி செய்வதற்காக ஆயத்தமான நிலையில் 28 கொள்கலன்களில் வைக்கப்பட்டிருந்த ரோஸ்வுட் மரங்களையே இவ்வாறு சுங்கப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

கைப்பற்றப்பட்டுள்ள மரங்களின் பெறுமதி உலகப் பெறுமதியின் படி 10,000 அமெரிக்க டொலர்களாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளதுடன் இலங்கை நாணயப்படி நூறு கோடி ரூபா என்றும் சுங்கப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித் தார்.

உலகில் மட்டுமல்ல இலங்கை சுங்கத் திணைக்கள வரலாற்றில் இவ்வாறான மரக் கடத்தல் முறியடிப்பு நடத்தப்பட்டமை இதுவே முதல் தடவை என்று அவர் கூறினார்.

உலக அளவில் நடத்தப்படும் இந்த மரக்கடத்தலை தடுக்கவோ, முறியடிக்கவோ எந்த ஒரு நாடும் முன்வர அச்சமடைந்துள்ள நிலையில் இலங்கை சுங்கத் திணைக்களம் அதனை முறியடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-10)

# பௌத்தத்தை பாதுகாக்க நடவடிக்கை வேண்டும்

## ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.4

பௌத்த மதத்தை எதிர்கால சந்ததியினருக்கு பாதுகாத்துக் கொடுக்க வேண்டியது எமது கடமையாகும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

திஸ்ஸமஹாரம பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று பௌத்த மத வழிபாடுகளை சுதந்திரமாக மேற்கொள்ளக் கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

பௌத்த விகாரைகள் வரலாற்றுச் சிறப்பு மிக்கவை. அவற்றைப் பாதுகாக்க வேண்டியது எமது கடமையாகும்.

எதிர்காலச் சந்ததியினர் பௌத்த மதத்தை பின்பற்றத் தேவையான வசதிகளை நாம் செய்து கொடுக்க வேண்டும்- என்றார். (ச)



நீர்த்தேக்கப் பகுதிகளில் மழை வீழ்ச்சி ஏற்பட வேண்டி நடத்தப்பட்ட விசேட சமய வழிபாட்டில் அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, பிரதி அமைச்சர் டபிள்யூ. பி. ஏக்கநாயக்க, இலங்கை மின்சார சபையின் தலைவர் டபிள்யூ. பி. கணேகல உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

# நீர்த்தேக்க பகுதிகளில் மழை வேண்டி 4000 தீபங்கள் ஏற்றி சமய வழிபாடு

கொழும்பு,ஏப்.4

நீர்த்தேக்கப் பகுதிகளில் மழை வீழ்ச்சி ஏற்பட வேண்டி 4,000 தீபங்கள் ஏற்றப்பட்டு அநுராதபுரம் ஸ்ரீமாபோதியில் விசேட சமய வழிபாடுகள் நடத்தப்பட்டுள்ளன.

உரிய காலத்தில் மழை பெய்து மின் உற்பத்தித் திட்டங்கள் அமைந்துள்ள நீர்த்தேக்கங்களில் நீர் நிரம்ப வேண்டும் என்ற வேண்டுதலுடன் மின்வலு எரிசக்தி அமைச்சு ஏற்பாடு செய்திருந்த இந்த சமய நிகழ்வுகளில் அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, பிரதி அமைச்சர் டபிள்யூ. பி. ஏக்கநாயக்க, இலங்கை மின்சார சபையின் தலைவர் டபிள்யூ. பி. கணேகல உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

தற்போது வறட்சியான கால நிலை தொடர்வதால் உரிய காலத்தில் மழை வீழ்ச்சி ஏற்பட்டால் மாத்திரமே மின் உற்பத்தி தடையின்றி இடம்பெறும் என்பதைக் கவனத்தில் கொண்டு மின்வலு எரிசக்தி அமைச்சு இந்த சமய நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்தது.

நீர்த்தேக்கங்களிலிருந்து 12 குடம் தண்ணீர் கொண்டுவரப்பட்டு ருவன்வெலி சாயவிலிருந்து ஊர்வலமாகக் கொண்டு சென்று மின்சக்தி அமைச்சர் பவித்ரா வன்னி யாராச்சி அதனை ஸ்ரீமாபோதி பெருமானுக்கு சமர்ப்பித்துள்ளார். (ச)

# தேர்தல் மூலம் அரசுக்கு மக்கள் சிவப்பு 'நோட்டீஸ்'

## ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு.ஏப்.4

மாகாணசபைத் தேர்தல் மூலம் மக்கள் அரசுக்கு சிவப்பு 'நோட்டிஸ்' விடுத்துள்ளனர் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.



லக்ஷ்மன் கிரியெல்ல

கொழும்பில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையையும் தேர்தலையும் சர்வதேசம் கைவிட்டுள்ளது. மாகாணசபைத் தேர்தல் மூலம் மக்கள் அரசுக்கு சிவப்பு 'நோட்டிஸ்' விடுத்துள்ளனர்.

ஜெனிவாவில் தப்பிக்க வேண்டும் என்று அரசு உண்மையில் நினைத்திருந்தால் ஜெனிவா பிரேரணைக்கு முன்பாக தேர்தலை நடத்தியிருக்க வேண்டும்.

இலங்கையில் நடைபெறும் தேர்தல் நீதியானதும் சுதந்திரமானதும் அல்ல என்று ஜெனிவாவில் பேசப்பட்டது.

18 ஆம் திருத்தத்தின் மூலம் அரச சேவை, தேர்தல் திணைக்களம் உள்ளிட்ட நிறுவனங்கள் ஜனாதிபதியின் கீழ் கொண்டு வரப்பட்டமையே இதற்கு காரணம்.

இலங்கையின் பிரதான எதிர்க்கட்சி ஐக்கிய தேசியக் கட்சி என்பது தேர்தல் மூலம் மீண் டும் நிரூபிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையில் பொதுச் சக்தியொன்று கட்டியெழுப்பப்படும் -என்றார். (ச)

# கைதி மாணவர்கள் தப்பியோட்டம்; சிறை அதிகாரிகள் இடைநிறுத்தம்

கொழும்பு,ஏப். 4

வட்டரக்க திறந்தவெளி சிறைச்சாலை பாடசாலையில் இருந்து ஆறு கைதிகள் தப்பியோடிய சம்பவம் தொடர்பில் இரு சிறை அதிகாரிகள் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர் என்று சிறைச்சாலை திணைக்களம் தெரிவித்துள்ளது.

வட்டரக்க திறந்தவெளி சிறைச்சாலை பாடசாலை மருத்துவமனையில் ஞாயிற்றுக்கிழமை சிகிச்சைபெற்ற ஆறு மாணவர்கள் கம்பி வேலியை வெட்டி அங்கிருந்து தப்பிச் சென்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்த விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது என்று சிறைச்சாலை ஆணையாளர் சந்ரரதன பல்லேகம தெரிவித்தார். (ச)

# இலங்கைக்கு எதிரான தீர்மானம் பாதுகாப்பு உறவைப் பாதிக்காது

## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.4

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட்ட தீர்மானம், இலங்கை மற்றும் அமெரிக்கா இடையிலான பாதுகாப்பு உறவுகளை பாதிக்காது என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான பாதுகாப்பு பரிமாற்றங்கள் பல வருடங்களாக இருந்து வருகிறது என்று பாதுகாப்பு அமைச்சு மற்றும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்தார்.

ஊடகவியலாளர்கள் மத்தியில் நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை இராணுவத்துக்கு அமெரிக்கா பல பயிற்சிகளை வழங்கி வருகிறது. இந்தப் பயிற்சித் திட்டங்கள் அரசியல் பிரச்சினைகளால் பாதிக்கப்படவில்லை.

இலங்கை பாதுகாப்பு அமைச்சு மற்றும் அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகள் இணைந்து வழங்கும் 24 ஆவது பாதுகாப்பு பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டம் கொழும்பில் தற்போது நடந்து வருகிறது.



ருவான் வணிகசூரிய

இதேவேளை ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான நகர்வுகளை மேற்கொண்டதன் காரணமாகவே பல புலம்பெயர் தமிழ் அமைப்புகள் தடை செய்யப்பட்டுள்ளன என்ற கருத்தை ஏற்க முடியாது.

இந்த அமைப்புகள் மேற்கொண்டு வந்த சில நடவடிக்கைகளால் ஏற்பட்ட சட்டப் பிரச்சினைகள் காரணமாகவே அமைப்புகள் தடை செய்யப்பட்டுள்ளன. தேசிய பாதுகாப்பு நலன் கருதியே இந்த 16 அமைப்புகள் தடை செய்யப்பட்டன-என்றார். (ச)

## மரண அறிவித்தல்

### தம்பாப்பிள்ளை உதயகுமார்

(ஊழியர் (சாரதி), பிரதேசசபை, வேலணை)



புங்குடுதீவு, 3 ஆம் வட்டாரத் தைப் பிறப்பிடமாகவும், புங்குடுதீவு, முதலாம் வட்டாரத்தை வதிவிடமாகவும் கொண்ட தம்பாப்பிள்ளை உதயகுமார் (02.04.2014) புதன்கிழமை அகாலமரணமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பாப்பிள்ளை மற்றும் யோகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மகாதேவன் மற்றும் இரத்தினமணி தம்பதியரின் மருமகனும் மகாதேவியின் அன்புக் கணவரும் கேமலதா, சஞ்ஜீவன் (ஊழியர் - பிரதேசசபை உப அலுவலகம், புங்குடுதீவு), மருஷா (பொலிஸ் உத்தியோகத்தர்), கனார்த்தனி, சுகனியா, சிரஞ்சீவன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், கருணானந்தன் (ஈசன்), டர்மலன் ஆகியோரின் மாமனும், காலஞ்சென்ற வசந்தகுமாரின் சகோதரரும், காலஞ்சென்ற வாமதேவன் மற்றும் சிவதேவன், சாந்ததேவன், இரத்தினதேவி, காலஞ்சென்ற சிறிதேவன் ஆகியோரின் மைத்துனரும், யதீஷா, தர்சன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2014) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 10 மணியளவில் புங்குடுதீவு முனையிற்புலம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (2.6)(46434)

தகவல்:
புங்குடுதீவு -01, 077 532 6779 மனைவி,பிள்ளைகள்.

## சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம்



கிளிநொச்சி திருநகர் தெற்கைச் சேர்ந்த திருமதி செல்வராணி சோமசேகரம்பிள்ளை அண்மையில் கிளிநொச்சி நீதிமன்றில் நீதிவான் எம்.ஐ.வகாப்தீன் முன்னிலையில் சமாதான நீதி வானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் ஆசிரியராகவும் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையில் ஆசிரிய ஆலோசகராகவும் பணிபுரிந்து ஓய்வுபெற்றுள்ளார். கிளிநொச்சி மாவட்ட திருநெறிக் கழகத்தின் சைவமாமணி விருது மற்றும் கலாபூஷணம் விருதுகளைப் பெற்ற இவர் சமூக, சமய பணிகளுக்காக தொடர்ந்து உழைத்து வருகின்றார். (ஓ-18)

## பாலர் பாடசாலையின் மெய்வன்மைப் போட்டி

நாவற்குழி, ஏப்.4

நாவற்குழி சிவமணி பாலர் பாடசாலையின் வருடாந்த மெய்வன்மைப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் இடம்பெறவுள்ளது.

பாலர் பாடசாலை அபிவிருத்திச் சபைத் தலைவர் தி.தங்கவேலு தலைமையில் இடம்பெறவிருக்கும் இந்த நிகழ்வில் தென்மராட்சி கல்வி வலயத்தின் முன்பள்ளிகளுக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.பாக்கியராசா, நாவற்குழி மகா வித்தியாலய அதிபர் திருமதி மே.வசந்தா ஆகியோர் முதன்மைவிருந்தினர்களாகக் கலந்து கொள்வார்கள். (க)

## யோகர் சுவாமிகள் குரு பூசை

தவத்திரு யோகர் சுவாமிகளின் ஐம்பதாவது குருபூசை நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு யாழ்ப்பாணம் இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வு யாழ்ப்பாணம் சிவத் தொண்டன் சபையினரால் நடத்தப்படவுள்ளது.

குருபூசை நிகழ்வில் மாணவர்களிடையே நடத்தப்பட்ட நற்சிந்தனைப் பாடல் தனி இசைப் போட்டிகளில் தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வும் நடைபெறவுள்ளது.

இந்தநிகழ்வில்யோகர் சுவாமிகளின் திருவுருப் படத்துக்கு மாலை அணிவித்து வழிபாடுகள் இடம்பெறுவதுடன் திருமுறைப் பாராயணம் இசை நிகழ்வும், விருந்தினர் உரை என்பனவும் இடம் பெறவுள்ளன. (வ-131)

## தையல் இயந்திரங்கள் வழங்கல்

தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த வறுமைக் கோட்டின் கீழ்உள்ள30குடும்பங்களின்வாழ்வதாரத்தை மேம்படுத் துவதற்காக தையல் இயந்திரங்கள் விநியோகிக்கப்பட்டன.அவற்றை நாடாளு மன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் வழங்கினார். (வ-9)


### தவறிவிட்டது

NCJO 8149எனும் மோட்டார் சைக்கிள் இலக்கத் தகடு யாழ்ப்பாணத்திற்கும் இளவாலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் கண்ட இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: 077 066 6067 (46429)(2.3)

### A/L Personal Class
(Chemistry & Biology)

35 வருட வினாத்தாள்கள் கற்பிக்கப்படும். (46430)(2.3)

T.P.No: 076 654 1292

### வேலை ஆள் தேவை

எமது ஸ்தாபனத்திற்கு கொழும்பில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு விற்பனையாளர் தேவை.
தங்குமிட வசதியும், மூன்று நேர உணவும் வழங்கப்படும். ஆரம்ப வேதனம் ரூபா 10000/= லிருந்து வழங்கப்படும். ஆண்கள் மட்டும். வயது 18 - 22 வரை
தொடர்பு:11A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(46425)(2.3) 021 222 3857

### வீடு வாடகைக்கு உண்டு

யாழ். மனோகரா சந்திக்கு அருகில் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்கு உண்டு. குடும்பம் அல்லது நிறுவனம் விரும்பத்தக்கது. (46426)(2.3)
தொடர்பு:-072 500 1982, 072 095 1390

### இறைச்சிக் கோழிக்குஞ்சு விற்பனைக்கு

முதல் தரமான BAIHARA இறைச்சிக் கோழிக்குஞ்சு விற்பனைக்கு உண்டு.
ஒரு குஞ்சின் விலை ரூபா 95/= பிரதி சனிக்கிழமை தோறும் ஓடர்களுக்குப் பெற்றுக்கொள்ளலாம். (33433)(3.2)
தொடர்புகளுக்கு: ரவி, நெல்லியடி.
075 841 8205, 077 906 9298

யாழ்ப்பாணத்தில் (05/04/2014) Canadian college Official representative Dr. Jean ஐ சந்திக்கலாம்!.

கனடாவில் உயர்கல்வியுடன் வேலைவாய்ப்பு!





- O/L உடன் விண்ணப்பிக்கலாம்
- 1 மாதத்தில் பயணம்
- பகுதி நேர வேலைவாய்ப்பு
- பட்டப்படிப்பின் பின் நிரந்தர வதிவிடம் (PR)

Study in Ireland
✓ Lowest course fee
✓ Part time job
✓ Spouse can work full time

Visa forms நிரப்பவும் , P.R , SuperVisa, Family Sponsor போன்றவற்றிற்கு சட்ட ஆலோசனைகள் வழங்கப்படும். [.ytr MNyhrid ]

V F C Visa Factory - Canada
No: 40, 33rd Lane, Colombo-06. (C/13053)
Tel: 0777 111988 , info2visa@gmail.com
# 2528, Lakeshore Blvd west, Toronto. Canada. ✆ +1 647 271 5160


## மரண அறிவித்தல்

### திருமதி பாக்கியம் சின்னராசா



யாழ்.அல்லைப்பிட்டி, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 360/8, அளுத்மாவத்தை, கொழும்பு -15 வதிவிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் சின்னராசா அவர்கள் 02.04.2014 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து-கந்தையா தம்பதியரின் அன்பு மகளும், சின்னராசா (செல்வா) அவர்களின் அன்பு மனைவியும், ஜெகதீஸ்வரி (செல்வி), கேதீஸ்வரன் (கேதீஸ்) ஆகியோரின் அன்பு தாயாரும், புவனேஸ்வரி, அன்னபூரணம், காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம், காந்தலிங்கம், குலசிங்கம் ஆகியோரின் சகோதரியும், கதிரவேலு குணசேகரம் (கிருஷ்ணன்), கேதீஸ்வரன் சங்கீதா (கீதா) ஆகியோரின் மாமியாரும், நீர்த்திகா, றம்மிகா,நிம்ஷி, ஜெனிக்கி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (06.04.2014) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப.4.00மணிக்கு மாதம்பிட்டிய இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

360/8, அளுத் மாவத்தை வீதி,
(சுந்திர ஒழுங்கை) கொழும்பு-15.

தகவல்:
புவனேந்திரன் குடும்பம்
(பெறாமகன்)

தொடர்புகளுக்கு:
சின்னராசா (Master -Srilanka -078 6042688, 011 252 0218, 011 252 9126)
செல்வி-கிருஷ்ணன் -(Swiss-032 913 4562)
கேதீஸ்வரன் (Swiss-032 685 2714)
(சி/13167)
(5)

## மாவட்ட நீதிமன்றம் யாழ்ப்பாணம் பகிரங்க ஏலவிற்பனை

வழ.இலக்கம் : காணி /80/2013

1. சுந்தரலிங்கம் செல்வராஜன்
2. பெண் சிவாஜினி,கொடிகாமர் வீதி,
   புலோலி தெற்கு, பருத்தித்துறை.
3. சுந்தரலிங்கம் செல்வகுமார்.
   18,3/1,37ஆவது ஒழுங்கை, கொழும்பு -06.
   (3 ஆம் வழக்காளி அற்றோனித் தத்துவகாரர் 1ஆம் வழக்காளி மூலம் தோற்றம்)

-வழக்காளி

எதிர்:
பாலசுப்பிரமணியம் கோபாலகிருஸ்ணன்
கம்பனை அம்மன் வீதி,சுழிபுரம்.

-எதிராளி

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றினால் 26.03.2014ஆம் திகதி இடப்பட்ட கட்டளையின் படி யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்ற பதிவாளர்/பிரதி பிஸ்கால் திருமதி.மீரா வடிவேற்கரசன் ஆகிய என்னை அங்கீகரிக்கப்பட்ட கடப்பாடுகளுக்கு அமைவாகவும், எனக்கு அளிக்கப்பட்ட விற்பனவு அதிகாரத்துக்கு அமைவாகவும் இவ் விற்பனையை நடத்த நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளதால் இன் கீழ் விவரிக்கப்பட்ட பொருள்கள் இவ் வழக்குடன் தொடர்புடைய ஆதனம் அமைந்துள்ள இல.124, 126 3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் என்னும் இடத்தில் நின்று 2014ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24ஆம் திகதி முற்பகல் 10.00மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் என இத்தால் அறித்தருகின்றேன். மேலும் பொது மக்கள் மன்றின் பதிவாளரின் அனுமதியுடன் விற்பனைக்கு அரை மணித்தியாலத்துக்கு முன்பு பொருள்களைப் பார்வையிடலாம். அத்தோடு ஏலவிற்பனையின் போது விற்பனைக்காக வைக்கப் பட்டுள்ள ஏதாவது பொருள்களின் மதிப்பு விலை கிடைக்காதவிடத்து அப்பொருளின் ஏல விற்பனையை மீளப் பெறும் உரிமையை மன்று தன்னகத்தே வைத்திருக்கும். மேலும் கொள்வனவுக்காரர் கொள் விலையில் முழுப் பெறுமதியையும் காசாக உடன் அவ்விடத்திலேயே செலுத்தி பொருள்களை எடுத்துச் செல்லவேண்டும்.

| பொருள்களின் விபரங்கள் | எண்ணிக்கை |
|---|---|
| 01. இரும்புக் கட்டில்கள் 6'x3'(வைத்தியசாலைப் பாவனையில் இருந்தவை) | - 11 |
| 02. வாங்கு 6'x2½' | - 01 |
| 03. ரிவல்வ் கதிரைகள் | - 02 |
| 04. கைபிடியுள்ள ரிவல்வ் கதிரைகள் | - 02 |
| 05. மரமேசை 4'x2½' | - 01 |
| 06. கண்ணாடி மேசை | - 01 |
| 07. சிறிய இரும்புக் கதிரைகள் | - 02 |
| 08. 2 ½' x2' பலகை மேசை | - 01 |
| 09. சுழல் ஸ்ரூல்கள் | - 02 |
| 10. வரவேற்புக் கதிரைகள் | - 08 |
| 11. கவுண்டர் மேசை (ஓவல் வடிவம்) | - 01 |
| 12. கவுண்டர் மேசை 6' நீள் வளைவு (நீலம்) | - 01 |
| 13. பிளாஸ்ரிக் அலுமாரிகள் 3' | - 02 |
| 14. ரெலிபோன் ஸ்ராண்ட் | - 01 |
| 15. கபினெற் (4 இலாச்சி கொண்டது) | - 01 |
| 16. கண்ணாடி அலுமாரிகள் (மருந்தகப் பாவனையிலிருந்தது) | - 02 |
| 17. 7'x9' கண்ணாடித் தட்டுகள் | - 05 |
| 18. 1148 சதுர அடி இரண்டு அடுக்கிலான தற்காலிக சுவர்ப் பிரிப்புகள் | |
| 19. தகரங்களைக் கொண்ட கூடாரம் (06 தகரங்கள் கொண்டது) | - 01 |

'நீதிமன்றக் கட்டளைப்படி'

திருமதி.மீரா வடிவேற்கரசன்
பதிவாளர்/ பிரதி பிஸ்கால்,மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 3671

## அறிவித்தல்

29.03.2014 புதினப்பத்திரிகையொன்றில் பருத்தித்துறை பிரதேசசபை சார்பாக பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர், யாழ்ப்பாணம் அவர்களினால் விளம்பரப்படுத்தப்பட்ட மந்திகை சந்தை புனரமைப்பு (மீள்கேள்வி) ஒப்பந்த இலக்கம்: PN/NP.J/ACLG/W/15R(PPPS) தொடர்பானது.

மேற்படி வேலையானது எமது நிறுவனத்திற்கு கேள்வி கோரலினூடாக வழங்கப்பட்டு ஒப்பந்தம் கைசாத்திடப்பட்டு 60% இற்கு மேற்பட்ட பௌதீக நிலையை அடையப்பெற்றபின் மேல்மாடிக்கான தளக்கொங்கிறீற்றுக்கு உரிய பலகைகள் மீதான கம்பி வேலைகள் (Form work and r/f work) நிறைவுற்று log புத்தகத்தில் குறித்த பொறியியலாளரின் பிரதிநிதியால் ஒவ்வொரு குறித்த வேலை முன்னேற்றமும் அதற்குரிய காலப்பகுதியில் அவரின் வழிகாட்டலின் கீழ் சரியென கையொப்பமிட்டு பதிவு மேற்கொண்டிருக்கும் நிலையில் எமக்கும் வேலை தருனருக்கும் இடையில் ஏற்பட்ட சிறு பிணக்கின் காரணமாக வேலை நிறைவு செய்யப்பட வேண்டிய காலப்பகுதியிலிருந்து 02 மாதங்கள் முன்னராகவே சடுதியாக ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டது. இதன் விளைவாக வேலையை நடைமுறைப்படுத்தி நிறைவு செய்வதற்காக வழங்கப்பட்ட பணமுறி (Performance bond) இற்குரிய Rs.915,000 காசாகப்பட்டதன் அடிப்படையில் அத்தொகையும் எமக்கு வீண் விரயமாக்கப்பட்டதுடன் இதுவரை செய்யப்பட்ட வேலைக்குரிய எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படவில்லை. அதன் பின்னர் ஒப்பந்த விதிகளுக்கு அமைவாக IESL நிறுவனத்தினால் நியமிக்கப்பட்ட Adjudicator அவர்களது ICLP விதி20 இற்கு அமைவான தீர்ப்பானது வேலை தருனர் ஒப்பந்தத்தை முடிவுறுத்தியமை நியாயமற்றதெனவும் (unjustifiable)உடனடியாக மீளப்பெறவேண்டும் (Withdrawn) எனவும் அறிவிக்கப்பட்டிருந்தும் வேலைதருனர் அந்தத் தீர்ப்பினை நடைமுறைப்படுத்த முன்வரவில்லை. அதனை தொடர்ந்து எமது கோரிக்கைகளுக்கு அமைவாக நடைமுறைப்படுத்த வேண்டிய ஒப்பந்த விதிமுறைகளை செயற்படுத்த தயங்கியதன் விளைவாக யாழ்.மாவட்ட மேல் நீதிமன்றத்தில் எம்மால் தொடரப்பட்ட 1719/2014 இலக்க வழக்கு தற்போது நிலுவையிலுள்ளது.

எனவே இவ்விடயமானது நீதிமன்ற தீர்ப்பிற்கான நடைமுறையில் உள்ளதால் (Sub judice) இவ்வேலைக்குரிய மீள் கேள்வி கோரலினூடாகப் பிரவேசிக்க முயற்சி செய்யும் ஒப்பந்தக்காரர் எவராக இருப்பினும் அச்செயற்பாடானது ஆதாரங்களை அழிக்க எடுக்கப்படும் முயற்சியாக (Deletion of evidence) கருதி அவர்களையும் இதன் விளைவாக தொடர்சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படும் என்பதனை முன்கூட்டியே பகிரங்கமாக மனவருத்தத்துடன் இத்தால் அறியத்தருகின்றேன்.

மேலதிக விடயங்களை அறிய வேண்டுமாயின் வழக்குப்பதிவுகளை (Case records) எமது வழக்கறிஞர் ஊடாகப் பெற்றுக்கொள்ளமுடியும்.

**நிர்வாக முகாமையாளர்**
**JK கொன்ஸ்ரக்சன் என்ஜினியரிங்**
**இல:-51, கொறவப்பத்தான வீதி,**
**இறம்பைக்குளம்,வவுனியா**
**தொடர்பு இல:-0778685040**

(46435)(2.3)

## கண்ணீர் அஞ்சலி



வேலணைப் பிரதேச சபையின் சாரதி
அமரர் **தம்பாப்பிள்ளை உதயகுமார்**
அவர்களின் திடீர் மறைவு குறித்துச் சாற்றும் அஞ்சலி

இருவிழி கடந்து கரு விழியும் கசிகிறதே
உதயா உன் நாமம் எங்கள் நாவில் நன்றாக நனைகிறதே
என்றென்றும் உம்மோடு உறவாட எங்கள் துடிக்கிறதே,
இருள் தொடரும் உம் வாழ்க்கைக்கு அருள்விதை ஒன்று
அடிப்படையாய் போனதுவோ
அறியாத புங்கைநகர் வங்காதாய் போங்குகிறதே
எச்சில் சோறும் எடுத்துக் கொடுக்கும் எம் பாச அண்ணனே
நேற்று இருந்தீர் எம்மோடு உறவாடினீர் இறுதிவரை
விதி ஒன்று நிகழ்ந்திருந்தால் விபரீதம் என்றிருப்போம்
சாவே உனக்கொரு நாள் சாவு வந்து சேராதோ ?

பணியாளர் நலன்புரிச்சங்கம், வேலணை பிரதேச சபை

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் அதிபர்
V.S **மகேந்திரன்** அவர்களின் அன்புச் சகோதரன்

**செல்லர் தங்கராசா**

அவர்களின் பிரிவால் துயரடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயரடைந்துள்ள அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனு தாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

நவில்ட் செவிப்புலன்
விழிப்புலன் இழந்தோர்
பாடசாலைச்சமூகம்

**கைதடி.**

## கண்ணீர் அஞ்சலி



எமது வலயக் கல்வி அலுவலகத்தில் கடமையாற்றும் திரு. ப. பிரதீசன் அவர்களது அன்புத் தந்தை

**சுப்பிரமணியம் பராசசிங்கம்**

அவர்கள் 02.04.2014 அன்று காலஞ் சென்ற துயரில் வாடும் குடும்பத்தினரது துயரில் நாமும் பங்கு கொள்வதுடன், அன்னாரது ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
வலயக் கல்வி அலுவலகம், கிளிநொச்சி.

(43430) (10)

## மரண அறிவித்தல்

### நாகநாதர் பாலசாமி



சுதுமலை தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட நாகநாதர் பாலசாமி நேற்று முன்தினம் (02.04.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகநாதர்-கனகமணி தம்பதியரின் புதல்வனும் தவமலரின் அன்புக் கணவரும், சுதாஸ் (முல்லைத்தீவு மாவட்டப் பிராந்தியத் தலைவர்-கிறிஸ்துவுக்காக இளைஞர் அமைப்பு), றூபன் (ஆசிரியர்- யா/பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி), சுஜென் (வ/வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), றஜீவ் (கணக்காளர்) ஈசன் (சமுர்த்தி முகாமையாளர், கச் சேரி), சர்மிளா, ஜீவன், சுமன் ஸ்ரெலா ஆகி யோரின் பாசமிகு தந்தையும், நொய்லின், பத்மப்பிரியா (ஆசிரியை- யா/மெமோரியல் ஆங்கிலப் பாடசாலை) மேனகா (ஆசிரியை- வ/வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), நர்மதா ஆகியோரின் அன்பு மாமனும், றினாஸ், சுசானா, வர்சிகா, கிஷேன் ஆகியோரின் பாசமிகு பேரனும், பொன்னம்பலம், விஸ்வலிங்கம் (சந்திரன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுதுமலை தெற்கிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (04.04.2014) மாலை 5 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(46457) (10) தகவல்: குடும்பத்தினர்.


## 'வேள்வித் திருமகன்' அரங்க ஆற்றுகை

கொழும்புத்துறை, ஏப்.4

தவக்காலத்தையொட்டி திருமறைக் கலாமன்றம் பிரமாண்டமான முறையில் தயாரித்துவழங்கும் திருப்பாடுகளின் காட்சி பக்தி உணர்வுபூர்வ ஆற்றுகை எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. இந்த முறை 'வேள்வித் திருமகன்' என்னும் பெயரில் இடம்பெறவுள்ள நவீன காட்சி அமைப்பு யுக்திகளுடன் கூடிய அரங்க ஆற்றுகையில் நூற்றுக்கும் மேற்பட்ட கலைஞர்கள் பங்குபற்றவுள்ளனர்.

திருமறைக் கலாமன்ற அரங்கில் தினமும் மாலை 6.30 மணிக்குகாட்சிகள்ஆரம்பமாகும். 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மட்டும் மாலை 7.30 மணிக்குநிகழ்வுகள்ஆரம்பமாகும். (ஒ-135)

## மானிப்பாய் மருத்துவமனைக்கு மேலும் ஒரு வைத்திய அதிகாரி

மானிப்பாய் பிரதேச அரசினர் மருத்துவமனைக்கு மேலும் ஒரு வைத்திய அதிகாரி நேற்று முன்தினம் திங்கட்கிழமை தொடக்கம் நியமிக்கப்பட் டுள்ளார். யாழ்.போதனா மருத்துவமனையில் நீண்டகாலம் பணிபுரிந்த வைத்திய அதிகாரி மருத்துவர் திருமதி நந்தகுமார் சாளினி, யாழ். சுகாதாரப் பணிப்பாளரால் மானிப்பாய் பிரதேச அரசினர் மருத்துவ மனையில் சேவையாற்ற நியமிக்கப்பட்டுள்ளார். (வ-100)

# டெங்கால் பாதிப்புறுவோர் எண்ணிக்கை குறைந்தது

கட்டுப்பாட்டு வார நிகழ்வுகள் மூலம் எனத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.4

சுகாதார அமைச்சால் கடந்த வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட டெங்கு கட்டுப்பாட்டு வார நிகழ்வுகளுக்கு அரச, தனியார் பொது அமைப்புக்கள் வழங்கிய ஒத்துழைப்பின் பயனாக டெங்கு நோயால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை 30 வீதத்தால் குறைவடைந்துள்ளது.

கடந்த 2012 ஆம் ஆண்டு 44 ஆயிரத்து 447 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டனர் அதேசமயம் 2013 ஆம் ஆண்டு இந்த எண்ணிக்கை 30 வீதம் குறைவடைந்து 36 ஆயிரத்து 60 பேர் பாதிக்கப்பட்டனர். கடந்த மூன்று மாத கால இடைவெளியில் 5 ஆயிரத்து 193 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் புள்ளி விவரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது.

> **"முன்னெச்சரிக்கை நடவடிக்கை களில் மக்கள் அதிக அக்கறை எடுப் பதுடன் உரிய ஒத்துழைப்பை வழங்கினால் மிகக் குறுகிய காலத் தில் டெங்கு நோயை முற்றாக ஒழித்துவிடலாம்.**

டெங்கு நோய் ஏற்படாது தடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் மக்கள் அதிக அக்கறை எடுப்பதுடன் உரிய ஒத்துழைப்பை வழங்கினால் மிகக் குறுகிய காலத்தில் டெங்கு நோயை முற்றாக ஒழித்துவிடலாம் என்றும் சுகாதார அமைச்சின் செயலாளர் மருத்துவர் வை.டி.நிஹால் ஜெயதிலக நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (வ-9)


## பஸ் விற்பனைக்கு

HJ-XXXX இலக்க முடைய அசோக்லேலண்ட் பஸ் விற்பனைக்குண்டு.

T.P : 077 3053000

## கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம். அழையுங்கள். 0779086737 Computer Repair

GUNAA BEST PC 52,Hospital Road,Jaffna.

## வேலைவாய்ப்பு

கொழும்பை அண்மித்த பகுதிகளில் Tea, Paint, Tin, Plastic bag, கோழிறைச்சி Battary, Brush போன்ற தொழிற்சாலைகளில் உற்பத்தி லேபல் பொதியிடல் போன்ற பிரிவுகளில் 18 - 48 வரையான ஆண் பெண் இருபாலருக்கும் 18000/= 25000/= சம்பளத்துடன் உணவு தங்குமிட வசதியுடன் நிரந்தர வேலைவாய்ப்பு ( தச்சு, கையுதவியாளர், டைல் பாஸ், கையுதவியாளர் அனுபவம் தேவை. தொடர்புகளுக்கு - 076 6991993

## வேலையாள் தேவை

மருந்தகம் ஒன்றுக்கு மருந்து அனுபவம் உள்ள மாலை நேரத்தில் வேலை செய்யக்கூடிய அல்லது முழு நேரமும் வேலை செய்யகூடிய ( 5.30 pm - 9.00 pm)ஆண் வேலையாள் தேவை. யாழ். மாநகரசபைக்கு அண்மையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. தொடர்பு - 077 9737809

## J.C.B.வாடகைக்கு



★ குறிப்பு - போக்குவரத்துக்கூலி அறவிடப்படமாட்டாது

தொடர்பு இல -
077 9847285, 077 7712482

புதிய எரிபொருள் நிரப்பு நிலையம்
207 K.K.S. வீதி, சுன்னாகம்

## பாராட்டி வாழ்த்திவரவேற்கின்றோம்




**திரு சங்கரப்பிள்ளை திரவியராசா**

எமது வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர்
திரு. சங்கரப்பிள்ளை திரவியராசா (1997 - 2007)
அவர்கள் 27.03.2014 முதல் மருதங்கேணிக்கோட்டக் கல்விப்பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுள்ளமையை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச்சமூகம்
யா/ஆழியவளை சி.சி.த.க.வித்

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



1937-10-18 2014-03-05

அமரர்
**தம்பிப்பிள்ளை சதானந்தன்**
(ஓய்வு பெற்ற அஞ்சல் அதிபர்)

விழிநீர் சொரிகிறோம்
நாள்கள் முப்பத்தொன்றாயின

குடும்பத்தினர். 71/2, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

## கொழும்பு பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்பு

புதிய **கல்வியாண்டிற்கான** விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
க.பொத **சாதாரணதரத்தில்** குறைந்தது **3c3s** சித்தியடைந்தோர் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பிக்க **விரும்புவோர்** யாழ்.பல்கலைக்கழகத்திற்கு அருகில் உள்ள **MCS** நிறுவனத்திற்கு நேரில் வருகை தரவும்.

**Semester2,4,6**
விரிவுரைகளும் ஆரம்பமாகின்றன.
புலமைப்பரிசிலிற்கும் விபரங்களிற்கும்
**Type BIT<Name> & send to 772 395 895**

**MCS**சிறந்த **பெறுபேற்றுக்கான** விருதினை வென்ற நிறுவனம்.
சென்ற ஆண்டு கொழும்பு பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்ட நிறுவன மாணவர்களின் சித்தி வீதம்
MCS நிறுவன மாணவர்கள் உயர்ந்த சித்தி வீதத்தினை பெற்றுள்ளனர்.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| MOBILE@NET COMPUTER SERVICES (MCS)- 324, Palaly Road, Jaffna | 0 | 0 | 1 | 2 | 4 | 11 | 4 | 12 | 14 | 71% |
| ESOFT COMPUTER STUDIES (PVT) LTD- 10 Church Road, Gampaha | 0 | 1 | 0 | 1 | 1 | 0 | 2 | 5 | 5 | 67% |
| ESOFT COMPUTER STUDIES (PVT) LTD- 158F 1/1, Galle Road, Colombo 04 | 0 | 9 | 14 | 15 | 10 | 27 | 25 | 36 | 59 | 70% |
| ESOFT COMPUTER STUDIES (PVT) LTD-32B 1/1 Dharmapala Mawatha, Matara | 0 | 0 | 1 | 2 | 0 | .3 | 2 | 0 | 7 | 53% |
| CODE J IT SERVICES- Badulla | 0 | 0 | 0 | 1 | 0 | 1 | 1 | 1 | 2 | 67% |
| ESOFT COMPUTER STUDIES (PVT) LTD- 342/1, Badulla Road, Bandarawela | 0 | 2 | 0 | 0 | 0 | 0 | 2 | 1 | 4 | 56% |
| GLOBAL INSTITUTE OF PROFESSIONAL EDUCATION- Monaragala | 0 | 0 | 0 | 0 | 1 | 1 | 2 | 0 | 6 | 40% |
| MIS- 74, Sabapathy Lane, Jaffna | 0 | 0 | 0 | 0 | 2 | 1 | 1 | 0 | 7 | 36% |
| DBASE SCHOOL OF COMPUTING- 320/15, Dharmapala Road Nupe, Matara | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 | 2 | 4 | 43% |
| NATIONAL INSTITUTE OF CO-OPERATIVE DEVELOPMENT- Polgolla, Kandy | 0 | 0 | 1 | 1 | 0 | 0 | 0 | 1 | 4 | 43% |
| ESOFT COMPUTER STUDIES (PVT) LTD- 96, Bar Road, Arasadi, Batticaloa | 0 | 1 | 0 | 1 | 2 | 2 | 1 | 3 | 22 | 31% |
| EASL J LANKA COMPUTER TRAINING INSTITUTE- 16, 2nd Floor, Super Market Complex, Colombo 08 | 0 | 0 | 2 | 0 | 0 | 2 | 2 | 1 | 10 | 41% |
| ESOFT COMPUTER STUDIES (PVT) LTD- 30/A, Bandaranayake Mawatha, Ratnapura | | | | | | | | | | |
| FOUNDATION OF IT PROFESSIONALS- 439/1D, Hokandara Road, Pannipitiya | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 2 | 4 | 33% |
| ESOFT COMPUTER STUDIES (PVT) LTD- 114 Navalar Road, Jaffna | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 2 | 8 | 20% |

## DMI COMPUTER EDUCATION

COMPUTER COURSES

Diploma in Computerized **Accounting** — Tally, Quick Book, Accpack, M.Y.O.B

Diploma in **Video Editing** — Premiere Pro CS6, Adobe Photoshop, Adobe After Effect, Pinnacle Studio,

Diploma in **AutoCAD** — 2D & 3D Modeling

Advanced Diploma in **Hardware & Networking**

**Java** (for Developers) | **3D-MAX**

முழுமையானதும் தரமானதுமான கணினிக்கல்வி
இலங்கை அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் (TVEC REG.NO P25/0056)

DMI COMPUTER EDUCATION

யாழ்ப்பாணம் No.113, கஸ்தூரியார் வீதி, Tel.: 021-222 4403
நெல்லியடி MMX வீதி (மத்திய மகாவித்தியாலயம் (அருகில்)) Tel. : 021-226 2470
சாவகச்சேரி No.174, கண்டி வீதி, HNB அருகில் Tel. :021-227 0775
சுன்னாகம் KKS வீதி, NSB அருகில். Tel. :021-224 1970



கைது செய்யப்பட்ட பேராதனைப் பல்கலைக்கழகத்தின் 14 மாணவர்களையும் விடுவிக்கக் கோரி மாணவர்கள் எதிர்ப்புப் போராட்டத்தில் நேற்று

## இலங்கைக்கான புதிய விமான சேவை

*கொழும்பு,ஏப்.4*
*ரொட்டானா ஜெட் விமான நிறுவனத்தின் இலங்கைக்கான புதிய விமான சேவை எதிர்வரும் 9ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.*
*இலங்கைக்கும் ரொட்டானா ஜெட் விமான நிறுவனத்துக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுக்கு அமைய ஐக்கிய அரபுக் குடியரசின் அல்படின் விமான நிலையத்திலிருந்து இலங்கைக்கு புதிய விமான சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.*
*எதிர்வரும் 9 ஆம் திகதி இரவு 11.45மணிக்கு அல்படின் விமான நிலையத்திலிருந்து இலங்கை நோக்கிப் புறப்படும் இந்த விமானம், அதிகாலை 5.45 மணிக்கு கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை வந்தடையும்.*
*அவ்வாறே 10ஆம்திகதி மத்தளை விமான நிலையத்திலிருந்து மீண்டும் பயணத்தை ஆரம்பிக்கும் அதே விமானம் அபுதாபி நோக்கி புறப்படும் என்று சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன தெரிவித்தார். (ச)*

## போதையில் வாகனம் செலுத்தினால் நடவடிக்கை

கொழும்பு,ஏப்.4
தமிழ்-சிங்கள புத்தாண்டு காலப்பகுதியில் மதுபோதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளைக் கைது செய்வதற்கு விசேட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இந்த விசேட நடவடிக்கை எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரையும் முன்னெடுக்கப்படும் என்று பொலிஸார் கூறினர். (ச)

# நாட்டு மக்களை ஏமாற்ற முடியாது

### *தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்துகின்றன என்கிறார் விக்கிரமபாகு கருணாரட்ன*




கொழும்பு,ஏப்.4
எப்போதும், எந்த நேரத்திலும் மக்களை ஏமாற்றிவிட முடியாது என்று நவசமசமாஜ கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
அண்மையில் நடைபெற்று முடிந்த மாகாணசபைத் தேர்தல் முடிவுகள் அரசின் மீதான மக்கள் அதிருப்தியை தெளிவாக வெளிப்படுத்தியுள்ளன.
எல்லாக் காலங்களிலும் தேசப்பற்றுப் பரப்புரைகள் மூலம் பெரும்பான்மை மக்களை ஏமாற்றித் திசை திருப்ப முடியாது என்ற செய்தி தேர்தல் முடிவுகளின் மூலம் ஆளும் கட்சிக்கு உணர்த்தப்பட்டுள்ளது.
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை அமர்வுகளின் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு வாக்குகளைச் சுவீகரிக்க முடியும் என்று ஆளும் கட்சி போட்ட கணக்கு, இந்த முறை தேர்தலில் தவறாகிப் போயுள்ளது.
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை தீர்மானமானது ஆளும் கட்சியின் வாக்குகள் அதிகரிக்க ஏதுவாக அமைந்தது என்பதனை மறுப்பதற்கில்லை.
அமர்வுகள் நடைபெற்றிருக்காவிட்டால் ஆளும் கட்சி மேலும் படு தோல்வியை சந்தித்திருக்க நேரிட்டிருக்கும். எனினும் அரசுக்குப் பதிலீடாக மக்களால் தெரிவு செய்யப்பட்ட கட்சிகள் தொடர்பில் திருப்தி அடைய முடியாது. ஜே.வி.பி மற்றும் ஜனநாயக் கட்சி ஆகிய இரண்டுமே அதிகாரப் பகிர்வுக்கு எதிரான கட்சிகள்.
இந்த இரண்டு கட்சிகளுமே உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கைப் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஆதரவளிக்கவில்லை.
நாட்டில் சிறுபான்மை மக்களுக்காக குரல் கொடுக்கும் கட்சிகளுக்கான வாக்குகள் வீழ்ச்சியடைந்துள்ளன- என்றார். (ச)

## சாதரணதரப் பரீட்சையில் 9 ஏ தர சித்திபெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம். ஏப். 04
2013 டிசெம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த. (சா/த) பரீட்சை பெறுபேறுகள் நேற்று காலை வெளியாகின. இதன்படி பாடசாலை ரீதியாக கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி 9 பாடங்களிலும் 9ஏ தரச் சித்தி பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு:

**வேம்படி மகளிர் கல்லூரி**

ஆங்கில மொழி மூலம்
ர.அபிராமி, சி.ஜனந்தினி, உலக்சிகா, கி.பிரியங்கா, ரா.ராகவி, சு.சங்கவி, ஸ்ரீ.சஸ்மிரா, ப. வினுசியா.

தமிழ் மொழி மூலம்
ர.விஷ்ணுபிரியா, நி.பிரியங்கா, ச.ரதினி, ந.அபிராமி, பா.கஜேந்தினி, பூ.நிஷானி, மோ.சுபேஸ்கா, கோ.பவதாரணி, பெனிற்றா அன்ரன் ஜேசுதாஸ், ர.ரக்ஷணா, வி.கௌதமி, தி.சங்கவி, சு.லௌசியா, ஞா.சுபஸ்திகா, ஜீ.சஜித்தா, ச.சாருகா, சி.மதுசா, ஜெ.சர்மினி, ந.ருட்சிகா, ம. நிலுஜா.

**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி**

தமிழ் மொழி மூலம்
க.பிரசாந், தே.ரஜிந்தன், க.சங்கீத், சி.சங்கீத்தன், யோ.சுவஸ்திகன்.

ஆங்கில மொழி மூலம்
ச.கோகுலன், ப.மேஷிகன், சி.சரண்யன், ஆ.வேதாகுலன்.

**கொக்குவில் இந்துக் கல்லூரி**
ஆங்கில மொழி மூலம்
கிருஷிகா. மு
தமிழ் மொழி மூலம்
யோ.விக்னேஸ்வரன், கவிப்பிரியா. மு, லக்ஷிகா. ரா, பிரகாஷினி. பி, சாவித்திரி.சு, தா.வித்யாசாகரன், தே.லுகீதரன், க.சர்ஜனன், க.வாகீசன்

**நெல்லியடி மத்திய கல்லூரி**
வி.தனன், லோ.விதுர்ஷா, நே.உஜானா

**பருத்தித்துறை வட.இந்து மகளிர் கல்லூரி**

ஆங்கில மொழி மூலம்
சஹானா.உ

தமிழ் மொழிமூலம்
நர்மதா.பா

**வட்டுக் கோட்டை இந்துக் கல்லூரி**
ஆங்கில மொழிமூலம்
ரிசிகாந்தி.பி

**வடமராட்சி விக்னேஸ்வராக் கல்லூரி**
ஜெஸ்மி.பு

**புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி**
சுபனேந்திரா.செ, சகானா.க

**முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி**
வினுஜா. சி, டயல்சியா.பே, சோ. கேஎசிகன் (8ஏபி)

**புனித பத்திரிசியார் கல்லூரி**

ம.மதுஷன், ஜி.நிலக்ஷன், என்.லோகசீலன்

**யா/ மகாஜனாக் கல்லூரி**
சு.சோபிகா

**மானிப்பாய் மகளிர் கல்லூரி**

ஆங்கில மொழிமூலம்
கஜிஷியா.பே, அமிர்தவர்சினி.அ

தமிழ் மொழிமூலம்
ரணியா. நா

**கிளிநொச்சி இந்துக்கல்லூரி**
எஸ். சுஜித்குமார்

**செம்மலை மகா வித்தியாலயம்**
க.நிதர்சனா.
(ஐ-4-10-102-176-400-433)

## பாறையிலிருந்து விழுந்த மாணவன் சாவு

கொழும்பு,ஏப்.4
ஹங்குமுவ, பண்டாரகம பகுதி பாடசாலை மாணவனொருவன் நேற்றுமுன்தினம் புதன்கிழமை பகால, கடுகன்னாவ பகுதியிலுள்ள 200 அடி உயர பாறையிலிருந்து விழுந்து உயிரிழந்துள்ளான் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
பாடசாலைச் சுற்றுலா வந்த சமயமே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.
சடலம் மாவனல்ல வைத்தியசாலையின் பிரதேச அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ச)

**பதவி வெற்றிடம்**
**முகாமையாளர்**
பட்டதாரிகள் ஆங்கில அறிவு, கணனி அறிவு,
20 000/= வேதனம்
தொடர்பு 021 4993502

**யாழ். மண்ணில்**
**மெற்றோ தொழிநுட்பக்கல்லூரி**
நாவலர் றோட், யாழ்ப்பாணம்
பொருளியற் கல்லூரியின் இணைநிறுவனம்
**A/L - 2016**
புதிய பிரிவுகள் ஆரம்பம்
06.04.2014 ஞாயிறு 8.00AM
**தொழில்நுட்பப்பிரிவு**
Engineering Technology
Bio System Technology
Science For Technology
உங்கள் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்
Note : இத் துறைசார்ந்த பாடசாலை ஆசிரியர்களும் உயர் தொழில்நுட்ப விரிவுரையாளர்களும் இணைந்து கற்பிக்கின்றார்கள்.
A/L 2015 தொழில்நுட்பப் பிரிவுக்கான பிரிவு I பிரிவு II வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

**விஸ்டம்** தொழில் நுட்பக் கல்லூரி
இல.475 கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம்
(வண்ணார் பண்ணை சிவன்கோவிலடி)
A/L 2016
தொழில்நுட்பப் பிரிவு
2வது அணி ஆரம்பமாகின்றது
05.04.2014
சனிக்கிழமை
காலை 8.30 மணிக்கு
அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்
அலுவலக நேரம் :
கிழமை நாட்களில் பி.ப 2.00 - 6.00
சனி, ஞாயிறு தினங்களில் காலை 7.00 - மாலை 6.00
குறிப்பு : அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.
A/L தொழில்நுட்பப் பிரிவிற்கு தனித்துவமான ஒரே ஒரு தனியார் கல்வி நிறுவனம்

**பொருளியற்கல்லூரி**
நாவலர் றோட், யாழ்ப்பாணம்
கே.கே.எஸ் றோட், இணுவில்
(இரு இடங்களிலும்)
**A/L - 2016**
கலை, வர்த்தகப்பிரிவு
பிரிவு II
ஆரம்பம் - 06.04.2014 ஞாயிறு 8.00 Am
Note : எமது மற்ற நிறுவனமான BARATHY சித்தக்கேணியிலும் புதிய பிரிவுகள் இதே நாளில் ஆரம்பமாகின்றது உங்கள் அனுமதிகளை விரும்பிய இடங்களில் பெற்றுக்கொள்ளவும்.

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**மணிவிழா நாயகனை மனதார வாழ்த்துகின்றோம்**
**திரு. சிவஞானம் பாலச்சந்திரன்**
யா/கட்டுவன்புலம்
மகா வித்தியாலயத்தில்
01.01.1987 தொடக்கம்
26.03.2014 வரை
சேவையாற்றி ஓய்வு பெறும்
மணிவிழா நாயகனை
மனதார பாராட்டி
நீடூழி காலம் வாழ்க என
வாழ்த்துகின்றோம்.





Congratulation
பாடசாலைச் சமூகம்,
யா/கட்டுவன்புலம் மகா வித்தியாலயம்.
(46467)(10)

# ஈழப்பிரச்சினையில் காங்கிரஸால் நாம்தான் பழி சுமக்க நேர்ந்தது

## திருச்சி சிவா பேட்டி

சென்னை, ஏப்.4
ஈழப் பிரச்சினையில் காங்கிரஸால் நாம் பழி சுமந்தோம் என்று தி.மு.க. கொள்கை பரப்புச் செயலாளர் திருச்சி என்.சிவா தெரிவித்துள்ளார்.
தி.மு.கவின் கொள்கை பரப்புச் செய்லாளர் திருச்சி சிவா, தி.மு.க. கூட்டணியின் வெற்றிக்காக மார்ச் 20 முதல் தனது சூறாவளி பரப்புரையை ஆரம்பித்தார். நடப்பு அரசியல் குறித்து அவர் அளித்த பேட்டியின்போது மேலும் தெரிவித்ததாவது:-
ஈழப்பிரச்சினையிலும் காங்கிரஸால் நாம் பழி சுமந்தோம். அலைக்கற்றை வழக்கில் நாடாளுமன்றக் கூட்டுக் குழுவிடம் ஆ.ராசா தனது நியாயத்தைச் சொல்ல அனுமதிக்கப்படவில்லை. இந்த விவகாரத்தில் பிரத மருக்கும் நிதியமைச்சருக்கும் தொடர்பில்லை என்றும், இழப்பை ஊழல் என்றும் சித்திரித்தார்கள். சகோதரியார் கனிமொழியையும் ஆறு மாதங்கள் சிறையில் வைத்தார்கள். வழக்கில் எங்க ளுக்கு உதவ வேண்டும் என்பதில்லை. வழக்கை நியாயமாக நடத்துங்கள் என்றுதான் கூறினோம். கேட்டார்களா?


திருச்சி சிவா

இலங்கைக்கு எதிரான அமெரிக்கத் தீர்மானத்தை இந்தியா ஆதரித்திருக்க வேண்டும் என்கிறாரே ப.சிதம்பரம் என்று கேட்ட போது:
இலங்கைக்கு எதிரான தீர்மானங்கள் ஏற்கனவே இரண்டு முறை கொண்டுவரப்பட்ட போது தி.மு.க. தலையிட்டு அதை ஆதரிக்க வைத்தது. இப்போது மத்திய ஆட்சியில் தி.மு.க. இல்லை. எனினும் காங்கிரஸ் அரசு இருக்கிறது. இப்போது, தீர்மானத்தை ஆதரிக்காதது அதிகாரிகள் எடுத்த முடிவு என்று ஆட்சியாளர்கள் சொல்வது வேடிக்கையாக உள்ளது" - என்றார். (வ)

## இரணைமடு உட்பட 9 குளங்களில் வேகமாக நீர் மட்டம் குறைவு

கிளிநொச்சி, ஏப்.4
கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவும் கடும் வறட்சி காரணமாக இரணைமடுக்குளம் உள்ளிட்ட ஒன்பது குளங்களின் நீர்மட்டம் மிக வேகமாக குறைவடைந்து வருகிறது. கரியாலை நாகபடுவான் குளத்தில் நீர் முற்றாக அற்றுப்போகும் அபாய நிலையும் காணப் படுகின்றது.
கடந்த சில நாள்களாக நிலவி வரும் கடும் வறட்சி காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் பல பகுதிகளிலும் குடிதண்ணீருக்கான தட்டுப்பாடு நிலவி வருகின்றது. இந்த நிலையால் கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் உள்ள ஒன்பது குளங்களின் நீர் மட்டமும் நாளுக்கு நாள் குறைந்து வருகிறது.
இது தொடர்பாக கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைமடு நீர்ப்பாசனப் பொறியியலாளர் எஸ்.விகிர்தனிடம் தொடர்பு கொண்ட போது:
இரணைமடுக்குளத்தின் நீர் மட்டம் 14 அடி 05 அங்குலமாகவும், அக்கராயன் குளத்தில் 05 அடி ஓர் அங்குலமாகவும், கரியாலை நாகபடுவான் குளம் வெறும் 03 அங்குலமாகவும் கல்மடுக்குளம் 06 அடி 07 அங்குலமாகவும் கனகாம்பிகைக் குளம் 04 அடி 9 அங்குலமாகவும் வன்னேரிக் குளம் 05 அடி 04 அங்குலமாகவும், புதுமுறிப்பு 06 அடி 01 அங்குலமாகவும், பிரமந்தனாறு குளம் 04 அடி 03 அங்குலமாகவும் குடமுருட்டிக் குளம் 06 அடி 05 அங்குலமாகவும் தற்போது காணப் படுவதாக தெரிவித்தார். (ஒ-55)

# ராஜீவ் கொலைக் குற்றவாளிகளை உடனடியாக விடுதலை செய்யுங்கள்

சென்னை, ஏப்.4
இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட மூவரையும் விடுதலை செய்ய வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தா.பாண்டியன் கோரிக்கை விடுத்துள்ளார்.
இது குறித்து புதன்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோருக்குத்தூக்குதண்டனையை ஆயுள் தண்டனையாக உச்ச நீதிமன்றம் குறைத்தது.
அதனை எதிர்த்து மத்திய அரசு தாக்கல் செய்த சீராய்வு மனுவை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது.

**மத்திய அரசு தாக்கல் செய்த சீராய்வு மனுவை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது.**
**தா.பாண்டியன்.**



உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை மதித்து, சிறையில் இருந்த காலத்தை ஆயுள் தண்டனைக் காலமாகக் கருதி உடனடியாக இந்த மூவரை யும் விடுதலை செய்ய வேண் டும்"- என்றுள்ளது. (வ)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தென்பகுதி

தேசிய பண்பாட்டுப்பேரவையின் ஏற்பாட்டில் யாழ்.முற்றவெளிப் பகுதியில் நடைபெற்ற இந்தப் பேராட்டத்தில் யாழ்ப்பாண வணிகர் கழகத்தினர் மற்றும் யாழ்ப்பாண வர்த்தகர்கள் கலந்து கொண்டனர்.
போராட்டத்தில் ஈடுபட்ட வர்த்தகர்கள், "தென்னிலங்கை வர்த்தகர்களின் தலையீடுகளால் நாம் பெரும் பொருளாதார நெருக்கடிகளுக்குள் சிக்கியுள்ளோம். முப்பதாண்டுகள் நடைபெற்ற போரால் நலிந்து போயுள்ள நாம், தற்போது தென்னிலங்கை வர்த்தகர்களால் ஏற்படும் நெருக்கடி காரணமாக பெரும் பொருளாதாரச் சுமை ஒன்றை ஏற்க வேண்டியுள்ளது. அதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை உரியவர்கள் எடுக்க வேண்டும்" - என்று தெரிவித்தனர்.
இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த யாழ்ப்பாண வர்த்தக சங்கத் தலைவர் இ.ஜெயசேகரம்,
"வெளிமாவட்ட வர்த்தகர்களின் நடவடிக்கையால் யாழ்ப்பாண வர்த்தகர்கள் பெரும் பின்னடைவை சந்தித்து வருகின்றனர். இதை உடனடியாக நிறுத்தும் பட்சத்திலேயே யாழ்ப்பாண வர்த்தகர்கள் தமது வர்த்தக நடவடிக்கைகளைப் பாதிப்பின்றி மேற்கொள்ள முடியும்.
வெளி மாவட்டங்களில் இருந்து வருகை தந்துள்ள வர்த்தகர்கள் யாழ்ப்பாணத்தில் எல்லா இடங்களிலும் தமது வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளார்கள். இதனால் யாழ்ப்பாணத்தில் நிரந்தரமாக வியாபாரம் செய்யும் வர்த்தகர்கள் பாதிப்படைகின்றனர். குறிப்பாக நாம் சகல வர்த்தக வரிகளுக்கும் உட்பட்டே வியாபாரம் செய்து வருகின்றோம். ஆனால் வெளிமாவட்ட வர்த்தகர்கள் எந்தவித வரி கட்டமைப்புக்கும் உட்படாமல் தமது வியாபாரத்தை தாராளமாக செய்கிறார்கள். புதுவருட வியாபாரத்தை பெரிதும் எதிர்பார்த்திருந்த நிலையில் இவ்வாறான அனுமதிகள் வழங்கப்படுவது நிறுத்தப்பட்டால் மட்டுமே வர்த்தகர்கள் பாதிப்பின்றி வியாபாரத்தை மேற்கொள்ள முடியும்"- என்று தெரிவித்தார்.
யாழ்ப்பாண வர்த்தகரான சற்குணம் என்பவர் கருத்துத் தெரிவிக்கையில்,
"யாழ்ப்பாண வர்த்தகர்கள் நெருக்கடியான சூழ்நிலையில் தொழில் ரீதியாக மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கும் இன்றைய நிலையில் புது வருட வியாபாரத்தை சீரழிக்கும் நோக்குடன் யாழ்.மாநகர சபை, வடமாகாண கூட்டுறவுச் சபை என்பன வெளிமாவட்ட வியாபாரிகளுக்கு அனுமதி வழங்கியுள்ளனர். வெளிமாவட்ட வியாபாரிகள் மலிவு விற்பனை என்று கூறி தரம் குறைந்த பொருள்களை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வந்து விற்பனை செய்கிறார்கள். அவர்களால் எமக்குப் பெரும் நெருக்கடிகள் ஏற்படுகின்றன. மறைமுகமாக மேற்கொள்ளப்படும் இந்தப் பொருளாதாரச் சுமையால் நுகர்வோரும் வர்த்தகர்களும் பெரும் பாதிப்பை எதிர்கொள்கிறார்கள்" எனத் தெரிவித்தார்.
அதேவேளை, வர்த்தகர்களின் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக உடனடியாக எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ள முடியாது என வடமாகாண முதலமைச்சர், போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு நேற்று அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்திருந்தார்.
அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
"உண்ணாவிரதம் தொடர்பாக எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போதிருக்கும் சட்டப்படி உரிய நடவடிக்கைகள் எடுப்பது சற்று கடினமாகவே இருக்கும். ஆனாலும் உங்கள் ஆதங்கம் புரிகிறது. இதற்கு ஒரே வழி உப விதிகளை உருவாக்கி கட்டுப்பாடுகளை விதித்து அவற்றின் அடிப்படையில் வியாபாரிகளை இயங்கச் செய்வதே. கூட்டுறவு நிலையங்கள் வியாபாரம் செய்ய உதவும் போது வெளி மாகாணங்களில் இருந்து வருபவர்களுக்கு ஒருவிதமான அறவீட்டையும் உள்ளூர் வியாபாரிகளுக்கு ஒரு அறவீட்டையும் அறவிடலாம். சகலரும் வியாபாரம் செய்யும் உரி மையை நாங்கள் மதிக்கும் அதே நேரம் எமது உள்ளூர் வியாபாரிகளின் நிலைமைகளையும் புரிந்து நாம் நடவடிக்கை எடுத்தல் அவசியம். இந்த வருடப் பிறப்புக்கு முன் எம்மால் அதிகம் செய்ய முடியாவிட்டாலும் விரைவில் உபவிதிகளை உருவாக்கி கட்டுப்பாடுகளை உண்டு பண்ணி உள்ளூர் வியாபாரிகளுக்கு சலுகைகளை வழங்க ஆவன செய்வோம்"- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-14-17)

### படிப்படியாக

கூடிய சூழ்நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. சில தவிர்க்க முடியாத காரணங்களால் ஒரு சிலர் கேட்ட காணிகளை திருப்பிக் கொடுக்க முடியவில்லை.
எனினும் அவர்களுக்கு பிற இடம் ஒன்றில் நல்ல காணிகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதே ஜனாதிபதியின் அபிவிருத்தித் திட்டமாக இருந்தது. அதன் படி வீடுகளும் அரச செலவிலேயே அமைத்துக் கொடுக்கப் பட வேண்டியிருந்தது.
இந்தப் பகுதியில் முதற்கட்டமாக 50 வீடுகளை அமைத்து வழங்கினோம். தற்போது 101 வீடுகளை அமைத்துக் கொடுத்துள்ளோம். மூன்றாம் கட்டமாக 141 வீடுகள் அமையவுள்ள நிலையில் 66 வீடுகளுக்கான அடிக்கல்லை இன்று நட்டுள்ளோம்.
ஜனாதிபதி மீதும் இராணுவத்தினர் மீதும் மக்கள் நம்பிக்கை கொள்ள வேண்டும். அப்போது தான் நம்பிக்கையான எதிர்காலம் உருவாகும். போரால் பாதிக்கப்பட்ட பகுதிகள் வளம் பெறும்" என்று தெரிவித்தார்.
2009ஆம் ஆண்டு இறுதிப் போரின்போது இடம்பெயர்ந்த கேப்பாபிலவு மக்கள், போரின் பின்னர் அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்தப்படவில்லை. சீனியாமோட்டை எனும் பகுதியில் 2012ஆம் ஆண்டு அவர்கள் வலுகட்டாயமாகக் குடியமர்த்தப்பட்டனர். சூரியபுரம், கேப்பாபிலவு, கேப்பாபிலவு மத்தி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்க்ளே இவ்வாறு குடிமயமர்த்தப்பட்டவர்களாவர்.
தற்போது விமானப் படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த 260 ஏக்கர் வயல் காணிகளில் 29 குடும்பங்களுக்குச் சொந்தமான 100 ஏக்கர் காணிகள் கையளிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 50 பேருக்குச் சேந்தமான 160 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்படவில்லை.
அதேவேளை, 2012 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 25 ஆம் திகதி நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்த கேப் பாபிலவு மக்களை திடீரென வாகனங்களில் ஏற்றிக்கொண்டு வந்த இராணுவத்தினர் அவர்களை அவர்களது சொந்த இடங்களில் குடியமர அனுமதிக்காது கேப்பாபிலவுக்கு அண்மையில் அமைந்திருந்த சூரியபுரம் காட்டுப்பகுதியில் மக்களைத் தற்காலிகமாகத் தங்கவைத்திருந்தனர். அவ்வாறு தங்கவைக்கப்பட்ட மக்களது சொந்தக் காணிகள் இதுவரை வழங்கப்படாத நிலையில் சூரியபுரம் காட்டுப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மாதிரிக் கிராமத்தில் வீடுகள் வழங்கப்பட்டு வருகின்றன. (ற-18-55)

### வடக்கில்

இடம்பெற்றதாக் கூறப்படும் அசம்பாவிதத் தைத் தொடர்ந்து, இராணுவத்தினரின் கெடுபிடிகள் வடமாகாணம் முழுவதும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. வீதிச் சோதனைகள், இரவு நேரச் சோதனைகள், வீதி ரோந்துகள் எனப் பல்வேறு நடவடிக்கைகள் இராணுவத்தினரால் தீவிரப் படுத்தப்பட்டிருந்தன.
இந்த நிலையில் யாழ். மாவட்டத்தின் சங்கானை, சித்தங்கேணி, வட்டுக்கோட்டைப் பகுதிகளில் நேற்று வீடு வீடாகச் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கையின் போது இராணுவத்தினரால் குடும்பபதிவுகளும் மேற்கொள்ளப்பட்டன என்றும் தெரிய வருகின்றது.
நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் தீடீரென இந்த நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மையால் அந்தப் பகுதியில் மக்கள் மத்தியில் பெரும் அச்சநிலை காணப் பட்டது. (ற-5-21)

### வாளை

மோகனராஜகுமார் ரோச்லைற்றுடன் வீட்டின் பின்புறம் சென்று ஆராய்ந்துள்ளார். அப்போது அங்கு மறைந்திருந்த கொள்ளையர்கள் அவரை வாளால் வெட்டியுள்ளனர். அதன் பின்னர் அவரைப் பணய மாக வைத்துக் கொண்டு வீட்டுக் குள் நுழைந்தனர்.
கறுப்புத் துணியால் முகத்தை மூடியவாறு காணப்பட்ட கொள்ளையர்கள் மோகனராஜகுமாரின் மனைவியை மிரட்டி அவர் அணிந்திருந்த சங்கிலி, தோடுகளைப் பறித்ததோடு, வீட்டில் இருந்த அனைத்து நகைகளையும் எடுத்து வருமாறு மிரட்டினர். எனினும் வீட்டிலிருந்தோர் மோகனராஜ குமாரின் உடலில் இருந்த காயங்களைப் பார்த்து அலறியுள்ளனர். இந்தக் களேபரத்தில் மோகனராஜகுமார் கொள்ளையர்களின் கையில் இருந்த வாள் ஒன்றைத் தந்திரமாகப் பிடுங்கிவிட்டார். அதற்கிடையே வீட்டிருந்தவர்களின் அலறல் சத்தம் கேட்டு அயலவர்களும் உசாரடைந்தனர். அதனால் திகைத்துப்போன கொள்ளையர்கள் கையில் கிடைத்த நகைளுடன் தப்பினால் போதும் என்று ஓட்டம் பிடித்தனர்.
கொள்ளையர்களின் தாக்குதலால் மோகனராஜகுமாரின் கை, முதுகு, காது, கால் போன்ற பகுதிகளில் வாள்வெட்டுக் காயங்கள் ஏற்பட்டுள்ளன. அவர் தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.
சுன்னாகம் பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகள் மேற்கொண்டதுடன், கொள்ளையர்களிடம் இருந்து பறிக்கப்பட்ட வாளையும் எடுத்துச் சென்றனர். எனினும் இந்தச் சம்பவம் தொடர்பாக இதுவரை பொலிஸாரால் எவரும் கைது செய்யப்பட வில்லை என்று கூறப்படுகின்றது. (ற-4)

### உணவு

யில் ஈடுபட்ட ஒப்பந்தகாரருக்கே மீளவும் ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் வடக்கு மாகாணசபை கைப்பற்றப்படுவதற்கு முன் னார் ஒப்பந்தம் கோரல் இடம்பெற்றிருந்தாலும், அதன் பின்னர் நடந்தேறிய மோசடிகள் தொடர்பில் ஆதாரத்துடன் சுகாதார அமைச்சர், வடக்கு மாகாண முதலமைச்சருக்கு தெரியப்படுத்தியிருந்தார். எனினும் போதுமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை.
இவ்வாறான நிலையில், வடக்கு மாகாண சபையின் அடுத்த அமர்வில், திட்டமிட்ட வகையில் நடந்தேறியுள்ள மிகப்பெரிய மோசடி தொடர்பாக வெளிப்படைத் தன்மையான முழமையான விசாரணை நடத்தப்பட்டு சம்பந்தப்பட்டவர்கள் பொறுப்புக் கூற வேண்டும் - என்று கூறப்பட்டுள்ளது.
இந்தத் தீர்மானத்தை ஆளுங் கட்சி உறுப்பினர் க.சர்வேஸ்வரன் சமர்ப்பித்துள்ளார். (ற-5)

### ஆஸி. செல்ல

படையினர் அவர்களை விசாரணைக்கு உட்படுத்திய பின்னர் அந்தமான் பொலிஸாரிடம் ஒப் படைத்துள்ளனர்.
விசாரணைகளின் போது, வேலை வாய்ப்புக்காவே தாம் ஆஸ்திரேலியா செல்ல முற்பட்டனர் என்றும், அதற்காக படகு உரிமையாளர்களுக்குப் பல லட்சம் ரூபா கொடுத்தோம் என்றும் படகில் பயணித்தவர்கள் தெரிவித்துள்ளனர்.
விசாரணைகளின் பின்னர் அந்தமான் பொலிஸார் விமானம் மூலம் மீண்டும் அவர்களை இலங்கைக்கே திருப்பியனுப்பியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (வ)

### போர்க்காலப்

ஆழ்கடல் ரோந்துப் படகுகளான சமுத்ரா, சாகர ஆகியனவும், ஏவுகணைப் போர்க் கலங்களான நந்திமித்ர, சுரனிமல ஆகியனவும், சக்தி என்ற தரையிறக்கும் கலமும், ரணவிக்கிரம, ரணஜய, வீரய ஆகிய அதிவேகப் பீரங்கிப் படகுள் மற்றும் அதிவேகத் தாக்குதல் படகுகள் என இந்தப் போர்ப் பயிற்சி பெரும் எடுப்பில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (ற-5)

# வட மாகாணப் பாடசாலைகளின் அரை மரதன் புதுக்குடியிருப்பில்

## நாளை காலை நடைபெறும்

வலி.வடக்கு ஏப்.4

வடக்கு மாகாணப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான அரை மரதன் ஓட்டப் போட்டி நாளை சனிக்கிழமை காலை முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெறவுள்ளதாக மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ்.செல்வராசா அறிவித்துள்ளார்.

இந்தப் போட்டிகளுக்குப் பொறுப்பாக வடமாகாண விளையாட்டுத்துறைக்கு பொறுப்பான பிரதி கல்விப் பணிப்பாளர் எஸ்.சத்தியபாலன் கடமையாற்றவுள்ளார்.

21 கிலோ மீற்றர் தூரம் கொண்ட இந்த அரை மரதன் ஓட்டப்போட்டியில் ஒவ்வொரு கல்வி வலயத்தில் இருந்தும் தலா 10 வீர, வீராங்கனைகள் என நூற்றுக்கும் மேற்பட்ட வீர வீராங்கனைகள் இதில் கலந்து கொள்வார்கள்.

வெளி மாவட்டங்களில் இருந்த செல்லும் பாடசாலைகளின் வீர வீராங்கனைகள் தங்குவதுக்கு வசதியாக ஆண்களுக்குப் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியிலும் பெண்களுக்குப் புதுக்குடியிருப்பு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலையிலும் வசதிகள் செய்யப்பட் டுள்ளன.

போட்டியாளர்கள் அனைவரும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு முன்னர் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இடங்களுக்குச் சமூகமளிக்க வேண்டும் எனவும்,போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 6 மணிக்கு புதுக்குடியிருப்பு சந்தியில் இருந்து ஆரம்பமாகி முல்லைத்தீவில் சிலாவத்தை வித்தியாலத்துக்கு முன்பாக நிறைவடையவுள்ளதாகவும், போட்டியாளர்கள் தமது வரவைச் சனிக்கிழமை காலை 5.30 மணிக்கு முன்னர் ஏற்பாட்டாளர்களிடம் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-86-23-433)



ஆட்டத்தின் ஒரு காட்சி

# தேசிய இளைஞர் மன்ற விளையாட்டு முடிவுகள்

தென்மராட்சி, ஏப்.4

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் சாவகச்சேரி பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளனத்தால் பிரதேச இளைஞர் கழகங்களுக்கிடையில் நடத்தப்பட்ட விளையாட்டுக்களின் இறுதிப்போட்டிகளும், பரிசில் வழங்கலும் கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றன.

சாவகச்சேரி பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.மதியுகன் தலைமையில் நடைபெற்றநிகழ்வுக்குமுதன்மை விருந்தினராக தென்மராட்சி உதவிப்பிரதேச செயலர் செல்வி ரஞ்சனா நவரத்தினமும், சிறப்பு விருந்தினராக தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்டப்பணிப்பாளர் ஐ.தவேந்திரனும் கலந்து கொண்டனர்.

கரப்பந்தாட்டம், கயிறிழுத்தல், அஞ்சலோட்டம் ஆகியவற்றின் இறுதிப் போட்டிகள் இடம்பெற்றன.

போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான வெற்றிக் கேடயங்களைச் சிறப்பு விருந்தினர் வழங்கினார்.

**கரப்பந்து**

1 ஆம் இடம் - மட்டுவில் ஐங்கரன் இளைஞர் அணி

2 ஆம் இடம்- மீசாலை சீமா இளைஞர் அணி.

**கிரிக்கெட்**

1 ஆம் இடம்-மட்டுவில் வளர்மதி, 2 ஆம் இடம்-சாவகச்சேரி சிவன்.

**உதைபந்து**

1 ஆம் இடம்-நாவற்குழி அன்னை, 2 ஆம் இடம்-கோயிலாக் கண்டி ஸ்ரீமகாவிஷ்ணு

**வலைப்பந்து**

1 ஆம் இடம்-கொடிகாமம் திருநாவுக்கரசு, 2 ஆம் இடம் - சாவகச்சேரிடிறிபேக்

**கபடி**

1 ஆம் இடம்-சாவகச்சேரி டிறிபேக், 2 ஆம் இடம்- மட்டுவில் மோகனதாஸ்

**கயிறிழுத்தல்**

1 ஆம் இடம்-கைதடி சரஸ்வதி, 2 ஆம் இடம்-மட்டுவில் வளர்மதி,3 ஆம் இடம்-சாவகச்சேரி டிறிபேக் (ற-9)



வெற்றிக் கிண்ணத்துடன் மன்னார் வலய அணி

# நகர முதல்வர் வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தது மன்னார் கல்வி வலயம்

மன்னார்.ஏப். 4

மன்னார் நகர சபை உத்தியோகஸ்தர் நலன்புரிசங்கம் ஏற்பாடு செய்திருந்த 2014 ஆம் ஆண்டுக்கான நகர முதல்வர் வெற்றிக் கிண்ணத்துக்கான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் மன்னார் கல்விப்பணிமனை அணி சம்பியனானது.

இறுதி நாள் நிகழ்வுகள் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றன.

கடந்த இரு வாரங்களாகக் குறித்த போட்டி இடம்பெற்று வந்தது. நேற்று முன்தினம் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் மன்னார் வலயக் கல்விப் பணிமனை அணியும், மன்னார் பிரதேச செயலக அணியும் மோதிக்கொண்டன.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மன்னார் வலயக் கல்விப்பணிமனை அணி முதல் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. இதன்போது மன்னார் பிரதேச செயலக அணி நிர்ணயிக்கப்பட்ட 10 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 71 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மன்னார் வலயக்கல்வி பணிமனை அணி 9.3 பந்துப்பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 74 ஓட்டங்களைப் பெற்று சம்பியனானது.

இதில் அணித்தலைவர் எம்.சிறம்சீன் 32 ஓட்டங்களை பெற்றுள்ளார். வெற்றி பெற்ற வீரர்களுக்கு வெற்றிக் கேடயங்களை மன்னார் நகர சபைத் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் வழங்கினார்.

இதில் நகரசபை உறுப்பினர்கள்,உப தலைவர்,நகர சபைச் செயலாளர்,நகர சபைப் பணியாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (த)

# பருத்தித்துறை பிரதேசத்தின் விளையாட்டுப் போட்டிகள்

வடமராட்சி.ஏப்.4

பருத்தித்துறை வடமராட்சி வடக்குப் பிரதேச செயலகப் பிரிவு விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பிரதேச செயலர் இ.த. ஜெயசீலன் தலைமையில் ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்டச் செயலக பிரதம கணக்காளர் த.குகதாஸ் கலந்துகொள்வார்.

கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் என்.கே. மோகன்ராஸ், ஹாட்லிக் கல்லூரி அதிபர் ந.தெய்வேந்திரராசா ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை நகரசபைத் தலைவர் சட்டத்தரணி சபா.ரவீந்திரன், பருத்தித்துறை பிரதேசசபை எதிரணி உறுப்பினர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொள்வார்கள். (த-173)

# தென்மராட்சியில் இன்று தாச்சி

கைதடி.ஏப்.4

யாழ். மாவட்டத் தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் அனுமதியுடன் கைதடி சரஸ்வதி விளையாட்டுக்கழகம் தென்மராட்சி ரீதியாக மின்னொளியில் நடத்தி வரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக் கிழமை இரவு 7 மணிக்கு மோதும் கழகங்கள்.

கைதடி துர்க்கா விளையாட்டுக்கழகம் எதிர் மறவன்புலோ அம்பிகை விளையாட்டுக் கழகம்.

(ஒ-288)



ஆட்டத்தின் போது

# ஹொக்கி சுற்றுப் போட்டியின் காலிறுதி, அரையிறுதி இன்று

வலி வடக்கு ஏப் .04

இலங்கைப் பாடசாலைகள் ஹொக்கிச் சங்கத்தினால் அகில இலங்கைப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெறும் ஆண்,பெண் ஹொக்கிச் சுற்றுப் போட்டிகளின் முதல் சுற்றுப் போட்டிகள் நேற்றுடன் நிறைவடைந்தன.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் இந்தப்போட்டியின் காலிறுதி மற்றும் அரை யிறுதி ஆட்டங்கள் இன்று காலை முதல் நடைபெறவுள்ளன.

பகல் நடைபெறும் காலிறுதி ஆட்டங்களைத் தொடர்ந்து பிற்பகல் அரையிறுதி ஆட்டங்கள் நடைபெறவுள்ளன.

நாளை சனிக்கிழமை பகல் மூன்றாம் இடத்துக்கான போட்டியும் இதனைத் தொடாந்து பிற்பகல் இறுதிப் போட்டிகளும் நடைபெறவுள்ளன. (த-86)

# அடுத்த சுற்றுக்கு நெடியகாடு

யாழ்ப்பாணம்,ஏப்.4

கரவெட்டி சென்சுடர் விளையாட்டுக் கழகத்திற்கு எதிரான ஆட்டத்தில் 5:0 என்ற கோல்கள் அடிப்படையில் வல்வை நெடியகாடு விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தெரிவாகியுள்ளது.

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் 'உதயன்' பத்திரிகையும் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகமும் இணைந்து நடத்தும் அணிக்கு 7 நபர் கொண்ட உதை பந்தாட்ட சுற்றுப் போட்டி பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இதில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் வல்வை நெடியகாடு விளையாட்டுக்கழகமும் கரவை சென்சுடர் விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன.

ஆரம்பத்திலிருநந்தே ஆதிக்கம் செலுத்திய நெடியகாடு விளையாட்டுக்கழக அணி விஸ்பரூபன், கிருபா மற்றும் நிறஞ்சன் ஆகியோரின் துணையுடன் 3 கோல்களைப் போட்டு முன்னிலையில் இருந்தது.

இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமாகி 15 நிமிடங்கள் வரை இரு அணிகளும் கடுமையாகப் போராடிய போதும் கோல்களைப் பெறாத நிலை காணப்பட்டது. இருந்த போதும் 17 ஆவது, 19 ஆவது நிமிடங்களில் வல்லை நெடியகாடு விளையாட்டுக்கழக வீரர் கஜமுகன் அடுத்தடுத்து 2 கோல்களைப் போட 5:0 என்ற கோல்கள் அடிப்படையில் வல்வை நெடியகாடு விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.

இதேவேளை நேற்று நடைபெறவிருந்த மற்றொரு ஆட்டத்தில் பங்பற்றவிருந்த சென் பீற்றர்ஸ் அணி சமூகமளிக்காத காரணத்தால் வதிரி பொமர்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது. (த-400)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்.ஏப்.4

யாழ் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக்கழகம் நடந்தும் "வடக்கின் சுப்பர் கிங்" உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4.30மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புத்தூர் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

★ ★ ★

யாழ்ப்பாணம் ,ஏப் .4

வவுனியா உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் 11 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் சுப்பர் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அல்இக்பால் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

★ ★ ★

யாழ்ப்பாணம் ,ஏப் .4

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் 'உதயன்' பத்திரிகையும் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகமும் இணைந்து நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் திக்கமுனை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இதில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுத்துறை பாரதி விளையாட்டுக்கழக அணி மோத வுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக 'ஏ' அணியை எதிர்த்து சிவானந்தா விளையாட்டுக்கழக 'பி' அணி மோதவுள்ளது. (த-23)

# இறுதிக்குள் நுழைந்தது இலங்கை அணி


மத்தியூஸ்

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஆட்டத்தில் டக்வோர்த் லூயிஸ் விதிப்படி 27 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது இலங்கை அணி.

5ஆவது 20/20 உலகக் கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டி பங்களாதேஷில் நடைபெற்று வருகின்றது.


லசித் மலிங்க

போட்டியை நடத்தும் பங்களாதேஷ், பாகிஸ்தான், ஆஸ்திரேலியா உள்ளிட்ட 12 அணிகள் வெளியேறி விட்ட நிலையில் இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள், தென்னாபிரிக்கா மற்றும் இந்திய அணிகள் அரையிறுதிப் போட்டிக்குள் முன்னேறியிருந்தன.

இதில் நேற்று நடைபெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தில் நடப்புச் சம்பியனான மேற்கிந்தியத் தீவுகள் அணியும் இலங்கை அணியும் மோதின.

இலங்கை அணியின் தலைவர் டினேஷ் சந்திமல் போட்டியில பாங்கு பற்றாத நிலையில் அவருக்குப் பதிலாக வேகப் புயல் மலிங்க அணித் தலைமைப் பொறுப்பை ஏற்று வழி நடத்தினார்.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அதனையடுத்து ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கிய குசல் பெரேரா 26 ஓட்டங்களையும், திலகரட்ண டில்சான் 39 ஓட்டங்களையும் பெற்று அணிக்கு நல்லதொரு அடித்தளத்தை இட்டுக் கொடுத்தனர். அடுத்துக் களமிறங்கிய ஜெயவர்த்தன(0), சங்கக்கார(1) ஆகியோர் ஏமாற்றிய போதும் களம் புகுந்த திரிமன்னே, அஞ்சலோ மத்தியூஸ் இறுதிக்கட்ட தாக்குதலை மேற்கொண்டு அதிரடியாக துடுப்பெடுத்தாடி அணியை கௌரவமான நிலைக்கு இட்டுச் சென்றனர். இறுதியில் 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குளை இழந்து 160 ஓட்டங்களைப் பெற்றது இலங்கை அணி. திரிமன்னே 35 பந்துகளில் 2 ஆறு ஓட்டங்கள் 3 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 44 ஓட்டங்களையும், மத்தியூஸ் 23 பந்துகளில் 2 ஆறு ஓட்டங்கள், 3 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 40 ஓட்டங்களை யும் பெற்றனர்.

மேற்கிந்திய பந்துவீச்சில் சந்தோக்கி 2 இலக்குகளையும் பட்றி, ருஷ்ஷெல் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர். இதனைத் தொடர்ந்து 161 ஓட்டங்களை வெற்றியிலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 13.5 பந்துப்பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 80 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது மழை குறுக்கிட்டது. தொடர்ச்சியாக மழை பெய்ததனால் ஆட்டம் தொடர முடியாத நிலையில் டக்வோத லூயிஸ் முறைப்படி 27 ஓட்டங்களால் இலங்கை அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. மேற்கிந்தியத்தீவுகளின் சிமித் 17 ஓட்டங்களையும், பிராவோ 30 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர். களத்தில் சாமுவேல்ஸ் 16 ஓட்டங்களுடனும், சமி 3 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது இருந்தனர்.

இலங்கைப் பந்து வீச்சில் மலிங்க 2 இலக்குகளையும், குலசேகரா, பிரசன்னா ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக இலங்கை அணியின் அஞ்சலோ மத்தியூஸ் தெரிவு செய்யப்பட்டார். இலங்கை அணி இறுதிக்குத் தெரிவு செய்யப்பட்ட நிலையில் நாளையும் தொடர்ச்சியாக மழை பெய்யுமாக இருந்தால் புள்ளிகள் அடிப்படையில் இந்திய அணி இறுதியாட்டத்துக்கு தகுதி பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(400)

# மன்னிப்பு கோரினார் மொஹமட் ஹபீஸ்

மேற்கிந்தியத் தீவுகள் அணியுடனான தீர்மானமிக்க போட்டியில் அடைந்த தோல்விக்குத் தனது நாட்டு மக்களிடம் பாகிஸ்தான் அணித் தலைவர் மொஹமட் ஹபீஸ் மன்னிப்புக் கோரியுள்ளார்.

உலகக் கிண்ண 20/20 கிரிக்கெட் தொடரின் அரையிறுதிச் சுற்றுக்குத் தகுதி பெறாமைக்காக அனைத்து வீரர்களும் பொறுப்புக் கூற வேண்டுமெனவும் சில வீரர்கள் சிறப்பாகச் செயற்படாமையே தோல்விக்கு வழிவகுத்தது எனவும் மொஹமட் ஹபீஸ் தெரிவித்துள்ளார்.

அணியின் நிர்வாகம் வீரர்களுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கியபோதும் வீரர்கள் அதற்கான சரியான பிரதிபலனை வெளிப்படுத்தவில்லை என பாகிஸ்தான் அணித் தலைவர் குறிப்பிட்டுள்ளார். பாகிஸ்தான் அணியின் நம்பிக்கை நட்சத்திர பந்து வீச்சாளர்களான சயிட் அஜ்மல் மற்றும் உமர் குல் ஆகியோர் போட்டியின் இறுதிப் பந்துப் பரிமாற்றங்களில் அதிக ஓட்டங்களை வழங்கியமையும் தோல்விக்கான காரணம் என மொஹமட் ஹபீஸ் சுட்டிக்காட்டியுள்ளார். (த)

# முதலிடம் பிடித்தது இந்தியா



சர்வதேச கிரிக்கெட் சபையினால் 20/20 கிரிக்கெட் தரவரிசைப் பட்டியல் வெளியிடப்பட்டது. இதில், இலங்கையை இரண்டாவது இடத்துக்குத் தள்ளிவிட்டு முதல் இடத்துக்கு இந்தியா முன்னேறியுள்ளது. மேற்கிந்தியத் தீவுகள் அணி கூடுதலாக ஐந்து புள்ளிகள் பெற்று 115 புள்ளிகளுடன் 5ஆவது இடத்துக்கு முன்னேறியது. ஆஸ்திரேலியா ஐந்து புள்ளிகள் குறைந்து 110 புள்ளிகளுடன் ஆறாவது இடத்துக்குப் பின்தங்கியது. துடுப்பாட்ட தரவரிசையில் இந்தியாவின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் விராட் கோஹ்லி, மூன்றாவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

மற்றொரு இந்திய வீரரான ரவிச்சந்திரன் அஸ்வின் ஆறாவது இடத்துக்கு முன்னேறியுள்ளார். இங்கிலாந்தின் அலெக்ஸ் ஹால்ஸ் இரண்டாவது இடத்தை பிடித்துள்ளார். இலங்கையின் குசல் பெரேராவும், தென்னாபிரிக்காவின் டுமினியும் முதல் முறையாக முதல் 10 இடங்களுக்குள் முன்னேறியுள்ளனர்.

பந்து வீச்சாளர்களுக்கான தரவரிசை பட்டியலில் மேற்கிந்தியத்தீவுகள் அணியின் சுழற்பந்து வீச்சாளர் சாமுவேல் பத்ரி அணியின் சக வீரரான சுனில் நரேனைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு முதலிடத்தைப் பிடித்துள்ளார். 109 புள்ளிகளைப் பெற்று 855 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ள இவர், சகவீரரான சுனில் நரேனை விட 45 புள்ளிகள் கூடுதலாகப் பெற்றுள்ளார். (த)

# இந்திய மகளிர் ஆறுதல் வெற்றி



ஆடவர் 20/20 உலகக் கிண்ணத்தைப் போலவே 10 அணிகளுக்கான மகளிர் 20/20 உலகக் கிண்ணத் தொடரும் பங்களாதேஷில் நடைபெற்று வருகின்றது.

இதன் 'பி' பிரிவில் நேற்று முன்தினம் நடந்த கடைசி ஆட்டத்தில் இந்தியா மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் மோதின.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயித்த 20 பந்துப்பரிமாற்றங்களில் 117 ஓட்டங்கள் எடுத்தது.

அடுத்துக் களமிறங்கிய இந்திய அணி 118 என்றஎளிய இலக்கை 17.4 பந்துப்பரிமாற்றங்களில் ஒரு இலக்கை மட்டும் இழந்து எட்டியது. அணித் தலைவி மிதாலி ராஜ் 55 ஓட்டங்களும், பூனம் ரவுத் 56 ஓட்டங்களும் எடுத்தனர். இதன் மூலம் 9 இலக்குகள் வித்தியாசத்தில் இந்தியா வெற்றி பெற்றது. 56 ஓட்டங்கள் எடுத்த பூனம் ரவுத் ஆட்ட நாயகியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

அரையிறுதி வாய்ப்பை இழந்து விட்ட இந்தியாவுக்கு இது 2ஆவது ஆறுதல் வெற்றியாகும்.

அரையிறுதி ஆட்டங்களில் ஆஸ்திரேலியாமேற்கிந்திய தீவுகள் (ஏப்ரல் 3), இங்கிலாந்து தென்னாபிரிக்கா (ஏப்ரல் 4) அணிகள் மோதுகின்றன. (த)

# இலங்கை அணியின் தலைவி முதலிடம்


சஷிகலா சிறிவர்த்தன

இலங்கை அணித் தலைவி சஷிகலா சிறிவர்த்தன மகளிருக்கான 20/20 நிரல்படுத்தலில் சகலதுறைப் பட்டியலில் முதலிடம் பிடித்த முதல் வீராங்கனையாகத் திகழ்கிறார்.

சர்வதேச கிரிக்கெட் சபை மகளிருக்கான 20/20 புதிய நிரல்படுத்தலை நேற்று வெளியிட்டது.

இதில் முதல் தடவையாகச் சகலதுறைப் பட்டியலும் இம்முறை உள்ளடக்கப்பட்டுள்ளது.

அந்தப் பட்டியலில் இலங்கை அணித் தலைவி சஷிகலா சிறிவர்த்தன முதலிடத்தைப் பெற்றுள்ளார். அவருக்கு 305 புள்ளிகள் கிடைத்துள்ளன.

பந்துவீச்சுப் பட்டியலில் ஒன்பதாம் இடத்திலுள்ள சஷிகலா சிறிவர்த்தன துடுப்பாட்டப் பட்டியலில் 15 ஆம் இடத்தில் உள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (த)

# பார்சிலோனா அணிக்கு 14 மாத பரிமாற்ற தடை

ஸ்பெயினின் புகழ்பெற்ற பார்சிலோனா உதைபந்தாட்ட அணியின் 18 வயதுக் குட்பட்ட வீரர்களைச் சர்வதேசப் பரிமாற்றம் செய்துகொண்டதில் விதிகளை மீறியதாகச் சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் குற்றம் சாட்டியுள்ளது. அந்த அணிக்கு 14 மாதப் பரிமாற்றத் தடையை விதித்துள்ளது. இதனால் இந்த அணி எதிர்வரும் 2015 ஆம் ஆண்டு வரை நடைபெறும் இரண்டு பருவ போட்டி களுக்கும் தங்கள் அணியின் வீரர்களை விற் கவோ, வாங்கவோ முடியாது. இது மட்டுமின்றி சுவிஸ் நாட்டுப் பணமதிப்பில் 4,50,000 பிராங்குகளையும் சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் இந்த அணிக்கு அபராதமாக விதித்துள்ளது.

ஸ்பெயினின் உதைபந்தாட்டக் கூட்டமைப்புக்கும் இதே தவறுகளுக்காக 5,00,000 சுவிஸ் பிராங்குகளை சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் அபராதமாகக் குறிப்பிட்டுள்ளது. இந்த அமைப்பு இளைய வீரர்களின் சர்வதேசப் பரிமாற்றம் குறித்த தற்போதைய நடைமுறையின் கட்டுப்பாட்டுக் கட்டமைப்பை ஒழுங்குபடுத்தவேண்டும் என்றும் சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் கேட்டுக் கொண்டுள்ளது.

DCM யாழ்.நகர் A/L 2016
கலை, வர்த்தக,தொழில் நுட்ப புதிய பிரிவுகள்
ஆரம்பம் - 05.04.2014 காலை 9 மணி

மத்திய கிழக்கு நாடுகளில் உடனடி வேலைவாய்ப்பு
மத்திய கிழக்கு நாடுகளான சவூதி அரேபியா, கட்டார், ஓமான், டுபாய் போன்ற செல்வந்த நாடுகளில் பாதுகாப்பாகவும், அதிஉயர் சம்பளத்துடனும் வீட்டுப் பணிப்பெண்ணாகப் பணிபுரிய அரிய சந்தர்ப்பம். (House Maid) உடன் தேவை. உணவு, தங்குமிடம், மருத்துவம், விமானப் பயணச்சீட்டு என்பன முற்றிலும் இலவசம். ஒப்பந்த காலம் 2 வருடம் விசேடமாக முன்கூட்டிய உயர் கொடுப்பனவுகள் வழங்கப்படும். மலேசியா நாட்டிலும் கௌரவமான வீடுகளில் வீட்டுப்பணிப்பெண்கள் தேவை. நீங்களும் இரண்டு வருட நிறைவில் கைநிறைய சம்பளத்துடன் திரும்பிவர விரையுங்கள்.
தொடர்பு: Lanka Voice, Main Road (Sky Line, ITC நிறுவனத்திற்கு அருகில்)
சித்தன்கேணி, யாழ்ப்பாணம். 021 225 0078, 077 952 7575
வவுனியா, மன்னார் தொடர்புகளுக்கு : 077 058 4658 (43240) (7.6.3)

கட்டார் நாட்டில் உடனடி வேலைவாய்ப்பு
கட்டார் நாட்டில் தையல் (Tailoring) துறையில் அதிஉயர் சம்பளத்துடன் உடனடி வேலைவாய்ப்பு. கட்டார் நாட்டிலுள்ள முன்னணி நிறுவனம் ஒன்றில் கீழ்க் காணும் வேலை வாய்ப்புக்கள் காத்திருக்கின்றன.
* Tailor - 1200 + OT, * General Cleaners - 1200 + OT * Salesman - 1800 + OT
* Forman - 1200 + OT * Labourer - 1200 + OT * Sewing worker - 1200 + OT
* Embroidar - 1200 + OT
தங்குமிடம், மருத்துவம் இலவசம், கைவசம் விசா உள்ளதால் இரண்டே வாரத்தில் பயணம். நாளை (05.04.2014) சனிக்கிழமை பி.ப. ஒரு மணி முதல் மாலை 3.00 மணி வரை யாழ் கிளை Lanka Voice நிறுவனத்தில் உங்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
தொடர்பு: Lanka Voice, Main Road (Sky Line, ITC நிறுவனத்திற்கு அருகில்)
தெல்லிப்பழை வீதி, சித்தன்கேணி, யாழ்ப்பாணம். 021 225 0078, 077 952 7575 (43239)
வவுனியா, மன்னார் தொடர்புகளுக்கு : 077 058 4658 (7.6.3)

கருத்தரங்குகள் மன்னாரில்
★ கணக்காளர்
★ கணக்காய்வாளர்
கம்பனி திணைக்களத்தின் பரீட்சைகளுக்கு
சனி (5/4)காலை 8.30 மணி
BCS College
மன்னார்
HNB வங்கி முன் ஒழுங்கை
023 323 8570

போட்டிப் பரீட்சை விசேட வகுப்புக்கள்
துறை சார் விரிவுரையாளர்களினால் விரிவான விளக்கத்துடன் சனி, ஞாயிறு தினங்களில்
கணக்காளர் பரீட்சைக்கு
6 வகை வினாத்தாள்களுக்கும்
ஆரம்பம்
சனி (5/4)
மு.ப.11.00 மணி
கணக்காய்வாளர் பரீட்சைக்கு
5 வகை வினாத்தாள்களுக்கும்
ஆரம்பம்
சனி (5/4)
மு.ப.11.00 மணி
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ்.ஆஸ்பத்திரி வீதி கொமர்ஷல் வங்கியருகில்)
T.P:075 416 4564

வேலைவாய்ப்பு
பகுதி நேர வேலை வாய்ப்புகளுக்குத் தொடர்பு கொள்ளவும்.
(46433) (2.3) 075 856 7447

NEC
பருத்தித்துறை வீதி. ஆனைப்பந்தி. | இரு இடத்திலும் | மணிக்கூட்டு வீதி. யாழ்நகர்.
A/L 2016
புதிய பிரிவு
கலை,வர்த்தகப் பிரிவுகள்
ஆரம்பம்: 05-04-2014 சனி 9.00Am

B.A PART I யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் (வெளிவாரி)
➢ கடந்த வாரம் பல்கலைக்கழக G.A.Q. பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான BA Part I விரிவுரைகள்
ஆரம்பம் 05.04.2014 (காலை 8 மணி)
குறிப்பு : இலங்கை கணக்காளர் சேவைக்கான திறந்த/ மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டல் விரிவுரைகள் துறைசார் விரிவுரையாளர்களினால் வார இறுதி நாள்களில் (சனி, ஞாயிறு) காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை நடத்தப்படுகின்றன.
விவரங்களுக்கு : S. அருள்நங்கை (நிர்வாகி)
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம், யாழ்ப்பாணம்.
T.P : 021 222 8148 (அ/13150)(7.6.3)


இரணைமடு திருவருள்மிகு கனகாம்பிகை அம்பாள் பெருங்கோயில்
வருடாந்த பெருந்திருவிழா
கொடியேற்றம் நாளை மறுநாள் (06.04.2014) சனிக்கிழமை தொடங்கி தொடர்ந்து பத்துத்தினங்கள் திருவிழா நடைபெற திருவருள் கூடியுள்ளது. தேர்த்திருவிழா 14.04.2014 அன்று மூன்று சித்திரத்தேரில் பரிவார மூர்த்திகளுடன் பவனி வருவார். தீர்த்தத் திருவிழா 15.04.2014, பூங்காவனம் 16.04.2014.
இந்தக் காலங்களில் ஆலய வீதிகளில் கடைகள் அமைத்து வியாபாரம் செய்ய விரும்புவோர் அறங்காவலர் சபையுடன் தொடர்பு கொண்டு பணத்தைச் செலுத்தி பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ளவும். (43431)(10)
தொடர்பு: 021 3200 261 அறங்காவலர் சபை, இரணைமடு திருவருள்மிகு கனகாம்பிகை அம்பாள் பெருங்கோயில்

கணக்கீடு
A/L 2016
ஆரம்பம்: 05.04.2014
நேரம்: காலை 8.00
திரு.சுரேன்


இந்தியாவிலுள்ள உலகப் பிரசித்திபெற்ற சாளக்குடி டிவைன் தியான இல்லத்திலிருந்து வருகைதரும்
அருட்தந்தை மத்தியூ, நாயக்கம்பரம்பில், அருட்தந்தை ஜோஸ் பிரகாஷ், சகோ. ஜோண்சன், சகோ. சாஜு ஜோஸ், சகோ. அன்ரனி ஜோர்ஜ் ஆகியோரால் நடாத்தப்படும்
இறைதியான
குணமாக்கல் வழிபாடுகள்




ஏப்ரல் 13, ஞாயிற்றுக்கிழமை
காலை 9.30 மணிமுதல் பகல் 1 மணிவரை
யாழ். இறைதியான இல்லம், 34 பழைய பூங்கா வீதி.
மாலை 6 மணிமுதல் 9 மணிவரை
மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலய முன்றல்.

ஏப்ரல் 14, திங்கட்கிழமை
காலை 9.30 மணிமுதல் 12.30 மணிவரை
குருக்களுக்கு – யாழ் ஆயர் இல்லம்
மாலை 6 மணிமுதல் 9 மணிவரை
யாழ் மரியன்னை பேராலய திறந்தவெளி அரங்கு.

ஏப்ரல் 15, செவ்வாய்க்கிழமை
காலை 9 மணிமுதல் 12 மணிவரை
வலைப்பாடு புனித அன்னாள் ஆலயம்
மாலை 6 மணிமுதல் 9 மணிவரை
சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலய முன்றல்

ஏப்ரல் 16, புதன்கிழமை
காலை 9 மணிமுதல் 12 மணிவரை
சில்லாலை கதிரைமாதா ஆலயம்
மாலை 5 மணிமுதல் 8 மணிவரை
தும்பளை லூர்துபதி வெளியரங்கு

இறைவார்த்தையைக் கேட்டு, தூய ஆவியாரின் அபிஷேக மழையில் நனைந்து, உடல் உள நோய்களிலிருந்தும் ஆன்மீக அடிமைத்தளங்களிலிருந்தும் விடுதலை பெற்று நிறைவான அமைதிவாழ்வு காண இறைவன் தரும் இச்சந்தர்ப்பங்களை தவறவிடாதீர்கள்.
இறைதியானக் குழுவினர். ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

PHYSICS A/L - 2015
* வெப்பவியல் - HEAT
ஆரம்பம் 05.04.2014 சனிக்கிழமை
03.00 - 04.00 pm
* ஆசிரியர் ம.ஸ்பெல்மன் (BSc)
இடம் - SCIENCE CORNER
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 077 611 6724 (46416) (12.3)

விக்னா கல்வி நிறுவனம், 52,ஸ்ரான்லி றோட் - யாழ்
கலை வர்த்தக வகுப்புகள்
2016 பிரிவு 2
ஆரம்பம்
06.04.2014 - 09மணி
* எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழாம்
* அனுமதிகள் இன்று முதல். (சி13159)(12.3)

வணிகக்கல்வி
A/L 2016
ஆரம்பம்: 05.04.2014
நேரம்: காலை 8.00
திரு.ரிஷி

கலை
A/L 2016
ஆரம்பம்: 05.04.2014
வர்த்தகம்

மீண்டும் யாழ். மண்ணில் 30 வருட அனுபவ ஆசான்
பொருளியல்
A/L 2016
ஆரம்பம்: 05.04.2014
நேரம் காலை 8.00
யாழ்.நகர் NJT பலாலி வீதி, இலுப்பையடிச்சந்தி
திரு.உதயன்

A/L பொருளியல் நூல்
விலை ரூபா 70
வறுமை& வருமானப்பரம்பல்
வே. கருணாகரன்
* பூபாலசிங்கம் புத்தகசாலை
* அன்னை புத்தகசாலை

விக்னா கல்வி நிறுவனம் 52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். பிரிவு II
O/L DAY CLASS
ஆரம்பம் 07.04.2014 (8.30-2.30 மணி)
* யாழ் நகரில் தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழாம்
* யாழ் நகரில் O/L Day Class தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்
* பிரிவு II மிக விரைவில்
* இவ்வருடம் 6 பிரிவுகள் மட்டுமே. (சி/13160)(7.6.3)
ஆண்டு 6 - O/L 2 தவணைக்கான வகுப்புக்கள் 05.04.2014 9.30 மணி
அனுமதிகள் இன்று முதல்

NEC
பருத்தித்துறை வீதி. ஆனைப்பந்தி. | இரு இடத்திலும் | மணிக்கூட்டு வீதி. யாழ்நகர்.
A/L 2016 புதிய பிரிவு
தொழில்நுட்ப பிரிவு
ஆரம்பம் 05-04-2014 சனி 9.00Am
♦ முன்னணி தொழில்நுட்ப விரிவுரையாளர்களின் ஒருங்கிணைந்த சேவை
♦ செயன்முறை ரீதியான கற்பித்தல் வசதி
♦ நவீன ஆய்வுகூட வசதி
♦ பல்லூடக (Multi Media) வகுப்பறை வசதி

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.04.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.